


யாழ் தினக்குரல்
THINAKKURAL
AN INDEPENDENT DAILY VOICE IN TAMIL
Registered in the Department of Posts of Sri Lanka under No QD/149/NEWS/2021 www.thinakkural.lk yarlthinakkural@gmail.com




ஓசை : 020 குரல் : 278 வெள்ளிக்கிழமை 17 டிசம்பர் Friday 17th December 2021. Post Box: 30 Phone: 021-7388301 Fax:021-7388304 விலை 30/= பக்கங்கள் : 12

# உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் ஒரு வருடத்திற்கு ஒத்திவைப்பு

## -அரசு ஆராய்கிறது-



ந.ஜெயகாந்தன்

உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலை ஒரு வருடத்திற்கு ஒத்தி வைப்பதற்கு அரசாங்கம் ஆராய்ந்து வருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் 2017 ஆம் ஆண்டில் நடைபெற்றதுடன், அதன்மூலம் அமைக்கப்பட்ட உள்ளூராட்சி சபைகளின் பதவிக் காலம் அடுத்த வருடம் பெப்ரவரி மாதத்துடன் நிறைவுக்கு வரவுள்ளன.

இதன்படி பெப்ரவரி மாதத்திற்கு முன்னர் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலுக்கான அறிவித்தலை விடுக்க வேண்டும்.

இந்நிலை

பக்கம் 02

# வேட்டியுடன் நல்லூரில் வழிபட்ட சீன தூதுவர்



யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த இலங்கைக்கான சீனத் தூதுவர் கீ சென்ஹொங் மற்றும் தூதரக அதிகாரிகள் நல்லூர் கந்தசுவாமி ஆலயத்துக்குச் சென்று வழிபாடுகளில் ஈடுபட்டனர்.

நேற்று வியாழக்கிழமை காலை 10 மணியளவில் வழிபாடுகளில் ஈடுபடுவதற்கு ஆலயத்திற்கு வருகை தந்திருந்த அவர்கள் , இந்து சமய முறைப்படி வேட்டி அணிந்து மேலாடை துறந்து வழிபாடுகளில் ஈடுபட்டனர்.

பக்கம் 02

# நீண்ட காலத்தின் பின் யாழில் ஒருவருக்கு மலேரியா பாதிப்பு




யாழ்ப்பாணத்தில் நீண்ட காலத்தின் பின் மலேரியா நோயாளி ஒருவர் இனங்காணப்பட்டுள்ளார்.

காய்ச்சல் காரணமாக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் புதன்கிழமை இரவு அனுமதிக்கப்பட்ட மல்லாகத்தைச் சேர்ந்த 27 வயதுடைய நபர் ஒருவருக்கே மலேரியா தொற்று ஏற்பட்டுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

மலேரியா தொற்று உறுதியான நபர் கடந்த இரு வாரங்களுக்கு முன்னரே தென்னாபிரிக்காவில் இருந்து இலங்கைக்கு வந்தவராவார்.

கடுமையான காய்ச்சல் மற்றும் மலேரிய அறிகுறிகளுடன் புதன்கிழமை இரவு 8 மணியளவில்

பக்கம் 02

# நாட்டில் 4 பேருக்கு ஒமிக்ரோன் தொற்று உறுதி

## -மேலும் அதிகரிக்கும் சாத்தியம் குறித்து எச்சரிக்கை-



க.பிரசன்னா

தென்னாபிரிக்காவில் முதன் முறையாக அடையாளம் காணப்பட்ட ஒமிக்ரோன் வைரஸ் திரிபினால் பாதிக்கப்பட்ட இலங்கையர்களின் எண்ணிக்கை நான்காக அதிகரித்துள்ளதாக ஸ்ரீ ஜயவர்தன பல்கலைக்கழகத்தின் ஒவ்வாமை, நோயெதிர்ப்பு மற்றும் மரபணு பிரிவின் பணிப்பாளர் டொக்டர் சந்திம ஜீவந்தர தெரிவித்துள்ளார்.

பக்கம் 02

# வடக்கு - சீனா உறவு வலுப்பெறும் அதன் ஆரம்ப புள்ளியே எமது உதவி

## -யாழில் உதவிகளை வழங்கிவைத்து சீன தூதுவர் தெரிவிப்பு-




யாழ்ப்பாணத்துக்கான எங்கள் விஜயம் மற்றும் பாதிக்கப்பட்ட மக்களுக்கான உதவிகள் வடக்கு - சீன உறவின் ஆரம்ப புள்ளியே எனத் தெரிவித்த இலங்கைக்கான சீன தூதுவர் கீ சென்ஹொங், வடக்கு மக்க

பக்கம் 02

# நாட்டையும், பொருளாதாரத்தையும் மீளக் கட்டியெழுப்ப நாம் தயார்

## -அநுரகுமார தெரிவிப்பு-

ந.ஜெயகாந்தன்



மக்கள் எதிர்பார்க்கும் மாற்றங்களுடன் நாட்டையும், பொருளாதாரத்தையும் மீளக் கட்டியெழுப்பும் சவாலை பொறுப்பேற்க தேசிய மக்கள் சக்தி தயாராக இருக்கின்றது என்று ஜே.வி.பி தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

தேசிய மக்கள் சக்தியினால் நேற்று வியாழக்கிழமை நடத்தப்பட்ட ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்,

மிகவும் குறுகிய காலத்தில் அரசாங்கம் மக்களின் அதிருப்திக்கு உள்ளாகியுள்ளது. பொருளாதார நிலை

பக்கம் 02

# இராணுவத்தினர் பங்கேற்கும் கூட்டத்தில் பங்கேற்க முடியாது

## -ஆளுநர் அழைப்பை நிராகரித்தார் விக்னேஸ்வரன்-



வட மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா தலைமையில் இராணுவத்தின் பங்கேற்புடன் இடம்பெறவுள்ள நீர், சுற்றாடல், மற்றும் விவசாய பாதுகாப்பு அமைப்பின் சந்திப்பில் பங்கேற்குமாறு ஆளுநர் தரப்பில் விடுக்கப்பட்ட அழைப்பை பாராளுமன்ற உறுப்பினர் சி.வி. விக்னேஸ்வரன் நிராகரித்துள்ளார்.

இராணுவத் தரப்பின் பங்கேற்புடன் இந்

பக்கம் 02

# புலிகள், பொதுபலசேனா, சிங்ஹலே பதிவுகளுக்கு பேஸ்புக் தடை விதிப்பு



பேஸ்புக்கில் தமிழீழ விடுதலைப் புலிகள்,பொதுபல சேனா அமைப்பு மற்றும் அந்த அமைப்பைச் சேர்ந்த கலகொட அத்தே ஞானசார தேரர் மற்றும் 'சிங்ஹலே' அமைப்பு தொடர்பில் எந்தவொரு பதிவையும் இடுவது பேஸ்புக்கினால் தடை செய்யப்பட்டுள்ளது.

பேஸ்புக்கில் இடம்பெறும் வகைப்படுத்தல்கள் மற்றும் அதுதொடர்பான ஒழுங்குப்படுத்தல்கள் ஊடாக, உலகில் உள்ள பல்வேறு அமைப்புகள் விளம்பரங்களை மேற்கொள்வதற்கும், அமைப்பு சார்பாக

பக்கம் 02

# இந்திய தூதர் - பீரிஸ் நேற்று சந்தித்துப் பேச்சு



இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே இலங்கை வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸை நேற்று வெளிவிவகார அமைச்சில் வைத்து சந்தித்து கலந்துரையாடினார்.

இந்தச் சந்திப்பில் இரு நாடுகளுக்குமி

பக்கம் 02

# காணி உறுதி பத்திரப் பிரதிகளை இணையவழியில் பெறமுடியும்

உறுதிப் பத்திர பிரதிகளை வழங்குவதற்கு இணையவழி முறைமை நேற்று வியாழக்கிழமை ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக பதிவாளர் திணைக்களத்தின் பதிவாளர் நாயகம் டபிள் யூ .எம் .எம் .பி . வீரசேகர தெரிவித்துள்ளார்

பிறப்பு, திருமணம் மற்றும் இறப்புச் சான்றிதழ்களின் பிரதிகளைப் பெறுவது ஆகஸ்ட் 2 முதல்இணை

பக்கம் 02

# வைத்தியர் ஷாஃபிக்கு நிலுவை கொடுப்பனவுடன் மீண்டும் பணி

## -சுகாதார அமைச்சு பணிப்பு-



ஆயிரத்திற்கும் மேற்பட்ட கர்ப்பிணிப் பெண்களுக்கு கருத்தடை சத்திர சிகிச்சை செய்ததாக குற்றச்சாட்டப்பட்டு கட்டாய விடுமுறையில் அனுப்பப்பட்டிருந்த குருநாகல் போதனா வைத்தியசாலையின் வைத்தியர் ஷாஃபி ஷிஹாப்தீனுக்கு வழங்க வேண்டிய நிலுவைக் கொடுப்பனவை வழங்கி பணியில் அமர்த்துமாறு

பக்கம் 02






# சிலிண்டரில் கலவை மாற்றம்; சட்ட நடவடிக்கை எடுக்க கோரிக்கை

## -இல்லையேல் சத்தியாக்கிரக போராட்டம் என எச்சரிக்கை-

க.பிரசன்னா

வீட்டு எரிவாயு சிலிண்டரில் ஏற்படுத்தப்பட்டுள்ள கலவை மாற்றம் தொடர்பில் உரிய சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படாவிட்டால் பல்வேறு இடங்களில் சத்தியாக்கிரக போராட்டத்தை முன்னெடுப்பதற்கு தீர்மானித்துள்ளதாக அகில இலங்கை சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் அசேல சம்பத் தெரிவித்துள்ளார்.

நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சுக்கு முன்பாக நேற்று இடம்பெற்ற போராட்டத்தின் போதே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் தெரிவிக்கையில், எதிர்வரும் புதன்கிழமைக்குள் சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படாவிட்டால் லிட்ரோ எரிவாயு நிறுவனத்தின் தலைமையகம், இலங்கை குற்றப்புலனாய்வு திணைக்களம் மற்றும் நுகர்வோர் அலுவல்கள் இராஜாங்க அமைச்சு ஆகியவற்றுக்கு முன்பாக சத்தியாக்கிரக போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

பிரியந்த குமாரவின் குடும்பத்தினர் மீது கொண்ட அனுதாபங்கள் எரிவாயு வெடிப்பினால் ஏற்பட்ட காயங்களினால் உயிரிழந்த பெண்ணின் குடும்பத்துக்கு வழங்கப்படவில்லை. உயிரிழந்த பெண்ணின் குடும்பத்தினருக்கு இழப்பீடு வழங்கும் நடவடிக்கைகளை அரசாங்கம் உடனடியாக ஆரம்பிக்க வேண்டும். இல்லையெனில் பாதிக்கப்பட்ட அனைவருக்காகவும் போராட்டம் தீவிரப்படுத்தப்படும்.

இதேவேளை தேசிய பாதுகாப்பு தொடர்பில் பாரிய எதிர்பார்ப்புகளுடன் பொது மக்கள் தற்போதைய அரசாங்கத்துக்கு வாக்களித்திருந்த நிலையில் உணவு தயாரிக்கும் நடவடிக்கையின் போது பலரின் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளதாகவும் சிவில் சமூக ஆர்வலர் நாகந்தர தெரிவித்துள்ளார்.

அனைத்து இல்லத்தரசிகள் மற்றும் தாய்மார்களின் உயிர்கள் ஆபத்தில் உள்ளதால் வீதிக்கு இறங்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. மக்கள் அச்சத்துடன் வாழும் நிலையில் இப் பிரச்சினை உடனடியாகத் தீர்க்கப்பட வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

## வைத்தியர் ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுகாதார அமைச்சின் செயலாளர் எஸ்.எச். முனசிங்க பணிப்புரை விடுத்துள்ளார்.

குருநாகல் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் சுகாதார அமைச்சின் செயலாளர், தாபன சட்ட விதிகளின் பிரகாரம் அவரை மீண்டும் பணியில் அமர்த்துமாறும், அவர் கட்டாய விடுமுறையில் இருந்த காலப் பகுதிக்கான கொடுப்பனவை மீள செலுத்துமாறும் கோரியுள்ளார்.

கருத்தடை சத்திர சிகிச்சை விவகாரத்தால் பெரும் சர்ச்சைக்கு உள்ளான வைத்தியர் மொஹமட் ஷாஃபி ஷிஹாப்தீன், இந்தக் குற்றச்சாட்டுகள் காரணமாக குற்றப்புலனாய்வு திணைக்களத்தினால் தடுப்புக் காவலில் வைத்து விசாரிக்கப்பட்டார். எவ்வாறாயினும், இறுதி வழக்கு விசாரணையின்போது, வைத்தியர் ஷாஃபி மீதான குற்றச்சாட்டை நிரூபிக்க போதுமான ஆதாரங்கள் இல்லை என்று குற்றப் புலனாய்வு அதிகாரிகள் நீதிமன்றுக்கு அறிவித்தனர்.இதனையடுத்து அவர் விடுதலை செய்யப்பட்டார்.

இந்நிலையிலேயே வைத்தியர் ஷாஃபி ஷிஹாப்தீனுக்கு வழங்க வேண்டிய நிலுவைக் கொடுப்பனவை வழங்கி பணியில் அமர்த்துமாறு சுகாதார அமைச்சின் செயலாளர் எஸ்.எச். முனசிங்க பணிப்புரை விடுத்துள்ளார்.

## நாட்டையும், பொருளாதாரத்தையும் ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மையே இதற்கு காரணமாக இருக்கின்றது. தற்போது துறைமுகத்தில் அத்தியாவசியப் பொருட்கள் அடங்கிய 1500 வரையான கொள்கலன்கள் தேங்கிக் கிடக்கின்றன. அதேபோன்று எமக்கு எதிர்வரும் கடன் தவணையை செலுத்த முடியாத நிலைமை ஏற்படும் என்ற சந்தேகமும் ஏற்பட்டுள்ளது. அத்துடன் நாட்டில் பொருட் களுக்கு தட்டுப்பாடும் ஏற்பட்டுள்ளது.

இதன்படி அனைத்து துறைகளிலும் இந்த பாதிப்பு தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதால் அனைவரும் இதனைப் பற்றி கதைக்கும் நிலைமையை ஏற்பட்டுள்ளது.ஊழல், மோசடிகள் விடயத்தில் கொரோனா கட்டுப்பாட்டு நடவடிக்கைகள், உர இறக்குமதி, வரிக்குறைப்பு உள்ளிட்ட விடயங்களில் ஊழல் மோசடிகள் இடம்பெற்றுள்ளமை தெரியவந்துள்ளது.இதனால் மக்கள் ஊழல், மோசடி, வீண் விரயமற்ற புதிய ஆட்சி நாட்டுக்கு அவசியம் என்பதனை மக்கள் உணர்ந்துள்ளனர்.

இன்னும் இந்த ஆட்சியாளர்களின் முடியாமை மற்றும் ஊழல் மோசடிகள் தொடர்பில் மக்கள் அறிந்து இந்தப் பிரச்சினைகளில் இருந்து வெளியே வருவதற்கு எதிர்பார்க்கின்றனர். இந்த விடயத்தில் சம்பிரதாயமாக இருந்த அரசியல் கட்சிகளை நிராகரித்து புதிய மாற்றத்திற்காக ஒன்றிணைகின்றனர். பொருளாதார அபிவிருத்தி, ஊழல் மோசடி அற்ற சட்டம், ஒழுங்கை மதிக்கும் ஆட்சியையே மக்கள் விரும்புகின்றனர். அந்த புதிய பாதையை அமைக்கும் சக்தியாக தேசிய மக்கள் சக்தி இருக்க தயாராக இருக்கின்றது.

கொள்கை ரீதியான மாற்றமாக பிரச்சினைகளுக்கு தீர்வாக தேசிய மக்கள் சக்தி இருக்கும். இதற்கான சவால்களை ஏற்கவும், வீழ்ந்துள்ள நாட்டையும், பொருளாதாரத்தையும் மீளக் கட்டியெழுப்ப நாங்கள் தயாராகவே இருக்கின்றோம். இதன்படி தேசிய மக்கள் சக்தியின் பிரதிநிதிகள் மாநாட்டை எதிர்வரும் 20 ஆம் திகதி நடத்துவதற்கு ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளோம். ஜயவர்தனபுரவில் மொனாக் இம்பிரியல் மாநாட்டு மண்டபத்தில் இந்த மாநாடு நடத்தப்படவுள்ளது. இதில் சட்டத்தரணிகள், பொறியியலாளர்கள், விவசாய நிபுணர்கள், கிராமிய மக்கள், தொழிற்சங்கப் பிரதிநிதிகள் உள்ளிட்டோர் கலந்துகொள்ளவுள்ளனர் என்றார்.

## புலிகள், பொதுபலசேனா ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரசாரங்களை மேற்கொள்வதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

பேஸ்புக்கில் வருடத்துக்கு ஒரு முறை இந்த அமைப்புகள் தொடர்பான பட்டியல் புதுப்பிக்கப்படும் . இந்த நிலையில், இலங்கையை தளமாகக் கொண்ட மூன்று அமைப்புகளுக்கு இவ்வாறு பிரசாரங்களை மேற்கொள்ள பேஸ்புக் தடை விதித்துள்ளது.

இதன்படி, இவ்வருடமும் பேஸ்புக்கில் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பிற்கு ஆதரவான பதிவுகளை மேற்கொள்ள அந்நிறுவனம் தடை விதித்துள்ளது. பேஸ்புக் தமது வகைப்படுத்தலின் கீழ், விடுதலைப் புலிகள் அமைப்பைப் பயங்கரவாத அமைப்பாக குறிப்பிட்டு இவ்வாறு தடை விதித்துள்ளது. இதற்கிடையில், நாட்டில் உள்ள பொதுபல சேனா அமைப்பு மற்றும் அந்த அமைப்பைச் சேர்ந்த கலகொட அத்தே ஞானசார தேரர் தொடர்பிலும் எந்தவொரு பதிவையும் இடுவது பேஸ்புக்கினால் தடை செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

அவ்வாறே, 'சிங்ஹலே' என்ற அமைப்புக்கும் தொடர்ந்தும் தடை விதித்துள்ளது. மேற்குறிப்பிடப்பட்ட இரண்டு அமைப்புகளுக்கும் சமூகத்தின் பல்வேறு பிரிவினருக்கு மத்தியில் வெறுப்புப் பேச்சுகளை கொண்டுசெல்லுதல் மற்றும் சமூகங்களுக்கு இடையில் கிலேசமூட்டும் கருத்துக்களை பகிர்தல் என்றதன் அடிப்படையில் பேஸ்புக் நிறுவனம் தடை விதித்துள்ளது.

## நாட்டில் 4 பேருக்கு ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஸ்ரீ ஜயவர்தன பல்கலைக்கழகத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் ஒமிக்ரோன் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் எதிர்பார்த்தபடி, ஒமிக்ரோன் தொற்றினால் பாதிக்கப்படும் நபர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் நிலை காணப்படுகின்றது. எனவே கொவிட் தடுப்பூசியின் பூஸ்டர் டோஸான பைசர் தடுப்பூசியினை சகலரும் பெற்றுக்கொள்ளுமாறு அவர் வலியுறுத்தியுள்ளார்.

இலங்கையில் முதலாவது ஒமிக்ரோன் வைரஸ் தொற்றாளர் கடந்த நவம்பர் 3ஆம் திகதி அடையாளம் காணப்பட்டார்.

அவர் நைஜீரியாவில் இருந்து இலங்கை வந்தவரெனவும் எவ்விதமான கொவிட் தடுப்பூசியினையும் பெற்றுக் கொள்ளாதவரெனவும் அடையாளம் காணப்பட்டார். புதிய கொவிட் திரிபு அடையாளம் காணப்பட்டதன் பின்னர் போட்ஸ்வானா, எஸ்வடினி, லெசோதோ, நமீபியா, தென்னாப்பிரிக்கா மற்றும் சிம்பாப்வே ஆகிய ஆறு நாடுகளுக்கு பயணத் தடை விதிக்கப்பட்டிருந்தது. எனினும் கடந்த 12 ஆம் திகதி முதல் தடை நீக்கப்பட்டது.

இதேவேளை பிரித்தானியாவில் கொவிட் தொற்றாளர்களின் எண்ணிக்கை வேகமாக அதிகரித்து வரும் நிலையில் அந்நாட்டு பயணிகளுக்கு எவ்விதமான பயணக் கட்டுப்பாடுகளும் இலங்கையில் விதிக்கப்படவில்லை. ஓமிக்ரோன் வைரஸ் திரிபின் முதலாவது மரணம் பிரித்தானியாவிலேயே பதிவு செய்யப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

## வடக்கு-சீனா உறவு ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ளுக்கும் சீனாவுக்கும் இடையிலான நல்லுறவு எதிர்காலத்தில் மேலும் மேம்படும் என நம்புவதாகவும் கூறினார்.

சீன அரசாங்கம் தொடர்ந்தும் யாழ்ப்பாணம் உள்ளிட்ட வடக்கு மாகாண மக்களுக்கு உதவிகளை வழங்குமெனவும் அவர் குறிப்பிட்டார்.

யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சம்மேளனம் சமாசத்தில் மீனவர்களுக்கு வலைகள் மற்றும் உலர் உணவு பொதிகள் வழங்கி வைக்கும் நிகழ்வில் நேற்று கலந்து கொண்டு உரையாற்றும் போதே சீன தூதுவர் இவ்வாறு தெரிவித்தார். இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையில் நீண்ட காலமாக நல்லுறவு நிலவிவருகின்றது. அதன் ஒரு அங்கமாகவே சீன தூதரகமானது யாழ்ப்பாண மக்களுக்கு மீன்பிடி வலை மற்றும் உலர் உணவுப் பொதிகளை வழங்கி வைக்கிறது.

இந்த உதவி வழங்கும் நிகழ்வை ஒரு ஆரம்ப நிகழ்வாகவே நாங்கள் கருதுகின்றோம். இன்று ஆரம்பமான இந்நிகழ்வானது சீனா மற்றும் வடக்கு மக்களிடையே நல்லுறவை மேம்படுத்தும் என நாங்கள் கருதுகின்றோம்.

சீன தூதரகமானது இலங்கைக்கு பல்வேறுபட்ட உதவிகளை வழங்கி வருகின்றது. குறிப்பாக கடந்த இரண்டு வருடங்களாக உலகளாவிய ரீதியில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ள இந்த கொரோனா வைரஸ் தாக்கத்தின் போது சீனா நாடானது இலங்கைக்கு பெருமளவில் உதவிகளை வழங்கியுள்ளது. அதேபோல வடக்கு கிழக்கிலுள்ள மக்களுக்கான தடுப்பூசியினை பெற்றுக்கொடுப்பதில் சீனா பெரும் பங்காற்றியுள்ளது

அதேபோல் நேற்று வடக்கு மாகாணத்தில் உள்ள அனைத்து மாவட்டத்திற்குமென ஐந்து நீர் சுத்திகரிக்கும் இயந்திரப் பொறிமுறையினையும் வடக்கு மாகாண ஆளுநரிடம் கையளித்துள்ளோம்.

அதேபோல் 5 மடிக் கணணிகள் மற்றும் ஒரு தொகுதி புத்தகத்தையும் பொது நூலகத்திற்கு வழங்கியுள்ளோம்.

உலகளாவிய ரீதியில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ள கொரோனாக் காலத்தில் இந்த சிறிய உதவி வழங்கப் படுவதை ஒரு ஆரம்பப் புள்ளியாகவே நாங்கள் பார்க்கின்றோம். எதிர்காலத்தில் இந்த உதவித் திட்டங்கள் தொடரும் எனவும் சீன தூதுவர் குறிப்பிட்டார்.(ச-40)

# மனோ தலைமையில் தமிழ் முற்போக்கு கூட்டணி தூதுக்குழுவினர் அமெரிக்க தூதருடன் சந்திப்பு

தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் எம்பி தலைமையில் தமுகூ தூதுக்குழு, நேற்று அமெரிக்க தூதரை சந்தித்து கலந்துரையாடியது.

இச்சந்திப்பின் போது, தற்போது நடைபெறும் தமிழ்-முஸ்லிம் கட்சிகளின் கூட்டு செயற்பாடு, தேசிய அரங்கில் மலையக தமிழ் மக்களின் எழுச்சி, இலங்கை தேசிய இனப்பிரச்சினையில் அமெரிக்காவின் பங்கு, பொறுப்புகூறல், எதிர்வரும் ஐநா மனித உரிமை ஆணைக்குழு கூட்டங்கள் ஆகியவை பற்றி உரையாடப்பட்டன.

புதிய வருடத்தில் அமெரிக்காவில் இருந்து அரசாங்க பிரமுகர்கள், அதிகாரிகள் இலங்கை வர உள்ளதாகவும், அவர்கள் தமுகூ உட்பட இலங்கையின் அனைத்து தரப்பினரையும் சந்திக்க ஆவலாக இருப்பதாகவும் அமெரிக்க தூதர் தெரிவித்தார். அதேபோல் அமெரிக்கா வந்து ராஜாங்க திணைக்கள அதிகாரிகளை சந்திக்கும் படியும் தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் எம்பிக்கு அமெரிக்க தூதர் அழைப்பு விடுத்தார்.

தற்போதைய தமிழ்-முஸ்லிம் கட்சிகளின் கூட்டு செயற்பாட்டின் பின்னர், தேசிய,சர்வதேசிய அரங்குகளில் நாம் முன்வைக்க உள்ள, இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் பொது கோரிக்கை யோசனைகள் அடங்கிய ஆவணத்துடன் நாம் சர்வதேச சமூகத்தை காத்திரமாக எதிர்கொள்வோம் என தமுகூ தலைவர் மனோ கணேசன் பதிலளித்தார்.

இந்த சந்திப்பின் போது அமெரிக்க தரப்பில் பதில் தூதுவர் மார்டின் கெலி, பதில் துணை தூதர் சுசன் வோல்க், அரசியல் அதிகாரி ஜெப்ரி சனின் ஆகியோரும், தமிழ் முற்போக்கு கூட்டணி சார்பில் தலைவர் மனோ எம்பியுடன், தமுகூ நிதி செயலாளர் கண்டி மாவட்ட எம்பி வேலு குமார், பொது செயலாளர் சந்திரா சாப்டர், இணை தவிசாளர் பேராசிரியர் விஜயசந்திரன் ஆகியோர் கலந்துக்கொண்டனர்.

## காணி உறுதி ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யத்தளமூடாக மேற்கொள்ளப்பட்டுள்ளது. நாட்டில் உள்ள அனைத்துகாணிப் பதிவேடுகளிலிருந்தும் மக்கள் அதிகபட்சமாக ஐந்து பிரதிகள் மற்றும் பத்திரப் பிரதிகளை பெறமுடியும் தற்போதுள்ள கோவிட் தொற்றுநோய் சூழ்நிலையில் பிறப்பு, திருமணம் மற்றும் இறப்பு சான்றிதழ்களின் பிரதிகளை பெற்றுக்கொள்வதில் உள்ள சிரமங்களைக் குறைக்க இந்த முறைமை அறிமுகப்படுத்தப்பட்டதென பதிவாளர் நாயகம் தெரிவித்துள்ளார். பொதுமக்களின் பயன்பாட்டிற்காக திணைக்களத்தினூடாக இணையவழியில் கோரிக்கைவிடுக்கும் முறை ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. இதன் பிர காரம் பொதுமக்கள் தங்கள்கைப்பேசிகள் அல்லது கணினிகளில் இருந்து சான்றிதழ்பிரதிகளை கோருவதற்கு கீழே உள்ள இணைப்பைப் பயன்படுத்தலாம். மாஸ்டர் அல்லது விசா கார்டுகளைப் பயன்படுத்தி தொடர்புடைய பணம் செலுத்தலாம். கோரிக்கையை முன் வைப்பதற்கு முன், விண்ணப்பதாரர் தங்கள்கைப்பேசி இலக்கத்தை திணைக்களத்துடன் சரிபார்க்க வேண்டும். தொலைபேசி எண் சரிபார்க்கப்பட்ட பிறகு, விண்ணப்பதாரர் அவர்களின் தேவைகளுக்கு ஏற்ப படிவத்தை பூர்த்தி செய்ய முடியும்.

பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளம் (http://www.rgd.gov.lk/web/index.php?lang=en இதேவேளை கோவிட் தொற்றுநோய் காரணமாக, பல பிரதேச செயலகங்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதாகவும், அந்த அலுவலகங்களில் இன்டர்நெட் வசதிகளை பராமரிப்பது தாமதமடைந்துள்ளதாகவும் திணைக்களம் தெரிவித்துள்ளது.

## வேட்டியுடன் ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சீனத் தூதுவரின் வருகையை முன்னிட்டு நல்லூர் ஆலயச் சூழல் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டு இருந்ததுடன் கண்காணிப்பு நடவடிக்கைகளும் தீவிரமாக்கப்பட்டிருந்தன. இதேவேளை நேற்று காலை 8 மணியளவில் அரியாலை கடலட்டை பண்ணைக்கு விஜயம் மேற்கொண்டு அங்குள்ள நிலைமைகள் தொடர்பில் தூதுவர் ஆராய்ந்திருந்தார்.

இதன் போது கடலட்டை பண்ணையில் ஒரு சுவாரஸ்யமான சம்பவமொன்றும் இடம்பெற்றது

அங்கு நின்ற பனை மரத்தினை கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா காட்டி இதுதான் பல்மேறா எனத் தெரிவித்தபோது சீனத் தூதுவர் பனை மரம் தொடர்பில் வினவினார்.

இதில் ரொடி(கள்) கிடைக்கும். அற்கோல் என தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இது உடம்புக்கு கேடு விளைவிக்காது என விளங்கப் படுத்தியபோது தூதுவர் பலமாக சிரித்து அதனை ஆமோதித்தார்.(ச-40)

## உள்ளூராட்சி ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யில் தற்போதைய நிலைமையில் தேர்தலை ஒத்திவைப்பதே நல்லது என்று அரசாங்கத்திற்குள் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

இதன்படி தேர்தலை ஒரு வருடத்திற்கு ஒத்தி வைப்பதற்கு அரசாங்கம் அவதானம் செலுத்தியுள்ளதாகக கூறப்படுகின்றது. இது தொடர்பான யோசனை அடங்கிய அமைச்சரவைப் பத்திரமொன்றை விடயத்திற்கு பொறுப்பான அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன் அமைச்சரவையில் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை இந்த விடயம் தொடர்பில் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ, நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ மற்றும் விடயத்திற்கு பொறுப்பான அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன் ஆகியோருக்கு இடையே கலந்துரையாடலொன்று நடத்தப்படவுள்ளதாகவும், அதன்பின்னர் அமைச்சரவையில் அது குறித்த இறுதித் தீர்மானம் எடுக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இதன்படி உள்ளூராட்சி சபைகளின் பதவிக் காலம் ஒருவருடத்தினால் நீடிக்கப்படவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

## நீண்டகாலத்தின் ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறித்த நபர் அனுமதிக்கப்பட்டார்.

இது குறித்து யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் இருந்து யாழ்ப்பாணப் பிராந்திய மலேரியாத் தடுப்பு வைத்திய அதிகாரியின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டதை அடுத்து அவருக்கு மலேரியாத் தொற்று உள்ளமை கண்டறியப்பட்டது. தொற்றுக்குள்ளான நபர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

மலேரியா அற்ற நாடுகளின் பட்டியலில் இலங்கை இடம்பெற்றுள்ள போதிலும், வெளிநாடுகளில் இருந்து வருபவர்களினால் மலேரியா பரவல் அச்சம் ஏற்பட்டுள்ளது என்றும், மலேரியா எச்சரிக்கை விடுக்கப்பட்டிருக்கும் நாடுகளுக்குச் செல்பவர்கள் மலேரியா முன்னெச்சரிக்கை மருத்துவ வழிகாட்டுதல்களை தகுதி வாய்ந்த மருத்துவ அதிகாரிகளிடம் பெற்றுச் செல்லுமாறும் யாழ்ப்பாணப் பிராந்திய மலேரியாத் தடுப்பு வைத்திய அதிகாரி மருத்துவர் அ. ஜெயக்குமாரன் தெரிவித்துள்ளார்.

(ச-40,75,18)

## இராணுவத்தினர் ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தக் கலந்துரையாடல் இடம்பெறுவதால் என்னால் அதில் கலந்து கொள்ள முடியாது என ஆளுநரின் செயலாளருக்கு நேற்று அனுப்பிவைத்த கடிதத்தில் விக்னேஸ்வரன் குறிப்பிட்டுள்ளார்.

யுத்தம் முடிவடைந்து 12 வருடங்கள் ஆகியுள்ள நிலையில், வடக்கில் பாரியளவில் இராணுவம் குவிக்கப்பட்டுள்ளமையினால் மக்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்துவருகின்றனர். வட மாகாணத்தில் குவிக்கப்பட்டுள்ள இராணுவத்தினர் குறைக்கப்பட வேண்டும் என்பதே எமது நிலைப்பாடு.

இவ்வாறான நிலையில் இராணுவத் தரப்பின் பங்கேற்புடன் இடம்பெறவுள்ள நீர், சுற்றாடல், மற்றும் விவசாய பாதுகாப்பு அமைப்பின் கலந்துரையாடலில் என்னால் பங்கேற்க முடியாது எனவும் இந்தக் கடிதத்தில் விக்னேஸ்வரன் சுட்டிக்காட்டியுள்ளார்.

இவ்வாறான சந்திப்புக்களில் இராணுவத்தின் பிரசன்னத்தை ஆளுநர் தவிர்க்க வேண்டும் எனவும் அதில் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.(ச)

## இந்திய தூதர் ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டையிலான இருதரப்பு நடவடிக்கைகளின் முன்னேற்றங்கள் குறித்து பேசப்பட்டதாக வெளிவிவகார அமைப்பு தெரிவித்துள்ளது.

தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் பரஸ்பர ஒத்துழைப்பு சார்ந்த விடயங்கள் மற்றும் நிதியமைச்சர் பசில் ராஜபக்சவின் அண்மைய இந்திய விஜயத்தின் விளைவுகள் தொடர்பான விடயங்கள் குறித்து இரு தரப்பினரும் கலந்துரையாடியதாகவும் வெளிவிவகார அமைச்சின் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.(ச)

# இலங்கையில் நாளாந்தம் 32 சிறுவர்கள் துஷ்பிரயோகம்

### - ஊடக அமைச்சர் டலஸ் அழகப்பெரும-

க.பிரசன்னா

நாட்டில் தினசரி 32 சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்கள் பதிவு செய்யப்படுவதாகவும் சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பில் கிடைக்கப்பெறும் முறைப்பாடுகளுடன் ஒப்பிடும் போது பதிவாகாத சம்பவங்களின் எண்ணிக்கை மிக அதிகமாக இருப்பதாக வெகுசன ஊடக அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

சிறுவர்கள் தொடர்பிலான செய்திகளை வெளியிடுவதில் ஊடகங்கள் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுக்கநெறிகள் தொடர்பில் இடம்பெற்ற செயலமர்வில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் தெரிவிக்கையில்,



நாட்டில் ஒவ்வொரு மணித்தியாலத்திற்கும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்கள் பதிவு செய்யப்படுகின்றன. நாட்டில் நாளாந்தம் 32 சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்கள் பதிவாகி வருவதாகவும், இந்த வருடத்தில் கடந்த 333 நாட்களில் 10,713 சிறுவர் துஷ்பிரயோக முறைப்பாடுகள் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைக்கு கிடைத்துள்ளன.

இந்த முறைப்பாடுகளில் 5 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் தொடர்பான 1632 முறைப்பாடுகளும் 10 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் தொடர்பான 2626 முறைப்பாடுகளும் கிடைத்துள்ளன. சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பில் கிடைக்கப்பெறும் முறைப்பாடுகளுடன் ஒப்பிடும் போது பதிவாகாத சம்பவங்களின் எண்ணிக்கை மிக அதிகமாகும்.

எமது சமூகத்தில் தீர்மானங்களை எடுப்பதற்கு சிறுவர்களுக்கு இடம் வழங்கப்படுவது இல்லை. இந்த விடயம், இதுவரையிலும் சமூகத்தில் இடம்பெற்றுள்ள வரலாற்றுத் தவறு. அந்த தவறை திருத்திக் கொள்ள வேண்டும். அதற்காக தான் தலையிட்டு செயற்படுவதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

ஒரு நாட்டின் நாகரீகத்தின் வளர்ச்சியானது சிறுவர்களின் உரிமைகளை அங்கீகரிப்பதன் அடிப்படையிலேயே அளவிடப்படுகிறது. இந்த சர்வதேச தரத்தின் அடிப்படையில் நமது நாடு அளவிடப்பட வேண்டும். அத்துடன், ஊடகம் மற்றும் சமூகம் ஆகிய இரண்டும் வெவ்வேறானது அல்ல அவை இரண்டும் ஒன்றே என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

### - வடபிராந்திய போக்குவரத்து சபை-

# எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள் தொடர்பில் அமைச்சருடன் ஆராய்வு



வட பிராந்திய இலங்கை போக்குவரத்து சபை எதிர்கொள்ளுகின்ற பிரச்சினைகள் மற்றும் ஊழியர்களுக்கான தொழிற்சங்கத்தின் செயற்பாடுகளை வலுப்படுத்தல் உட்பட பல்வேறு கோரிக்கைகளை தொடர்பில் வட மாகாண ஜனநாயக போக்குவரத்து ஊழியர் சங்கம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை சந்தித்து கலந்துரையாடியுள்ளன.

மாளிகாவத்தையில் அமைந்துள்ள கடற்றொழில் அமைச்சில் கடற்றொழில் அமைச்சரை சந்தித்த குறித்த தொழிற்சங்க பிரதிநிதிகளினால் மேற்குறித்த கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன.

அவை தொடர்பாக அவதானம் செலுத்திய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, பெருந்துப் போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம மற்றும் அதிகாரிகளை சந்தித்து தொழிற்சங்க பிரதிநிதிகள் கலந்துரையாடுவதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டதுடன், குறித்த விடயங்களில் தனக்கிருக்கும் அக்கறையினையும் துறைசார் அமைச்சர் மற்றும் அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தினார்.

இதனை தொடர்ந்து, போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகமவுடன் வட மாகாண ஜனநாயக போக்குவரத்து ஊழியர் சங்கம் கலந்துரையாடல் மேற்கொண்டது.

இக் கலந்துரையாடலில் வட பிராந்திய இலங்கை போக்குவரத்து சபை எதிர்கொள்ளுகின்ற பிரச்சினைகள், ஊழியர்களுக்கான தொழிற்சங்கத்தின் செயற்பாடுகளை வலுப்படுத்தல், சாரதி காப்பாளர்களின் நிரந்தர நியமனம், வட பிராந்தியத்தில் மேன்முறையீட்டு சபையை மீண்டும் கொண்டு வருதல், சாரதி காப்பாளர், பொறிவலர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்தல் உள்ளிட்ட பல்வேறுபட்ட விடயங்கள் கலந்துரையாடப்பட்டன. (30)

## சமாதான நீதவானாக நியமனம்



நெல்லியடியைப் பிறப்பிடமாகக் கொண்ட ஓய்வு நிலை கோட்டக் கல்விப் பணிப்பாளர் சிவசிதம்பரம் நற்குணலிங்கம் கரவெட்டி மத்தியஸ்த சபையில் தொடர்ச்சியாக 10 வருடங்கள் கடமையாற்றும் வகையில் நீதியமைச்சினால் அகில இலங்கை சமாதான நீதவானாக நியமிக்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் மேல்நீதிமன்றில் நீதிபதி அ.பிறேமசங்கர் முன்னிலையில் அவர் நேற்று சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

நெல்லியடி மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் உப தலைவரான இவர் சமூக சேவைகளில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (21)

# குறுகிய காலத்தில் மாநகர மக்கள் மனதில் முதல்வர் மணிவண்ணன்

### - எதிர்க்கட்சி என்றால் எல்லாத்தையும் எதிர்ப்பதா- த.தே.கூ. வுக்கு சரவணபவன் சாட்டை

எதிர்க்கட்சி என்றாலே ஆளும் கட்சியை எதிர்ப்பதுதான் பணி என்று நினைக்கக்கூடாது. மக்கள் நலன்சார்ந்து சிந்தித்தும் செயற்படவேண்டும். அதேபோன்று எதிரணியையும் அரவணைத்துச் செல்லும் வகையில், அவர்களும் எதிர்ப்புத் தெரிவிக்காதவாறு மாநகர சபை பட்ஜெட்டை மேயர் முன்வைத்திருக்கவேண்டும். இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் மாநகர சபையின் பட்ஜெட் நேற்று முன்தினம் சபையில் சமர்ப்பிக்கப்பட்டது. பட்ஜெட்டை கூட்டமைப்பின் 16 உறுப்பினர்களும் எதிர்த்திருந்தனர்.

ஆனாலும் பட்ஜெட் 3 மேலதிக வாக்குகளால் நிறைவேறியது. இதன்மூலம் மணிவண்ணன் மேயராக தொடர்ந்து பதவி வகிக்கவும் வாய்ப்புக் கிட்டியது. இவ்வாறானதொரு நிலையில், பட்ஜெட் வாக்கெடுப்புத் தொடர்பில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் மேலும் தெரிவித்ததாவது,

மிகக் குறுகிய காலத்தில் மாநகர மக்களின் மனதில் மேயர் மணிவண்ணன் இடம் பிடித்துள்ளார் என்பது மறுக்க



முடியாத உண்மை. மாற்றான் தோட்டத்து மல்லிகை என்றாலும் மணம் வீசினால் அதைச் சொல்லத் தயங்கவேண்டியதில்லை.

மாநகர மேயர்களில், சிறந்த செயல் வீரனாக மணிவண்ணனை மக்கள் நோக்குகின்றார்கள். அந்த உண்மையை ஒப்புக்கொள்வதால் எந்தவொரு பின்னடைவும் எமக்கு ஏற்படப்போவதில்லை.

இவ்வாறானதொரு நிலையில், அவரால் முன்வைக்கப்படும் பட்ஜெட் இரண்டு தடவைகள் தோற்கடிக்கப்பட்டு அவர் பதவி விலகும் சூழல் ஏற்பட்டிருக்குமாக இருந்தால், மக்களின் கோபங்கள் அதனைத் தோற்கடித்தவர்கள் மீதே திரும்பும். அந்தப் பழியை கூட்டமைப்பு காலத்துக்கும் சுமக்க வேண்டியேற்பட்டிருக்கும். அதிர்ஷ்டவசமாக, கூட்டமைப்பு உறுப்பினர்கள் எதிர்த்திருந்தாலும் பட்ஜெட் வெற்றி பெற்றிருக்கின்றது.

முன்னைய மேயர் ஆனோல்ட், சபை உறுப்பினர்களின் பரிந்துரைகளை உள்ளடக்கியே கடந்த ஆண்டு பட்ஜெட்டை முன்வைத்திருந்தார். அவரை அரசியல் ரீதியான காரணங்களை முன்னிறுத்தி, இப்போதைய மேயர் மணிவண்ணன் உள்ளிட்ட தரப்பினர் தோற்கடித்திருந்தார்கள்.

அதற்குப் பழிவாங்கும் வகையில், மணிவண்ணனை தோற்கடிப்பது பொருத்தமானது அல்ல. மணிவண்ணன், ஆனோல்ட் விடயத்தில் செய்தது தவறு என்றால் அதே தவறை எமது கூட்டமைப்பு உறுப்பினர்களும் செய்வது ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல. இந்த விடயத்தில் கட்சித் தலைமை ஒன்றுக்கு இரண்டு தடவைகள் சிந்தித்து செயற்பட்டிருக்கவேண்டும்.

அதேபோன்று மணிவண்ணனும், கூட்டமைப்பு உறுப்பினர்களின் ஆதரவை பட்ஜெட்டுக்குப் பெற்றிருக்க வேண்டும். சிறந்த ஆளுமையுள்ள தலைமைத்துவத்தை மாநகருக்கு வழங்குவதற்கு சகல அரசியல் தரப்பினரதும் முழுமையான ஆதரவு தேவை என்பதை மணிவண்ணன் மறக்கக் கூடாது. எதிர்காலத்தில் மேயர் மணிவண்ணன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 16 உறுப்பினர்களின் ஆதரவையும் பெற்று பயணிக்கக் கூடியதாக தனது அணுகுமுறைகளை மாற்றியமைக்க வேண்டும், என்றார்.

### - இந்தியாவிலிருந்து நாடு திரும்பிய-

# மக்களை பாதுகாப்பாக மீள ஒருங்கிணைக்கும் செயலமர்வு



இந்தியாவிலிருந்து நாடு திரும்பிய மக்களை பாதுகாப்பாக மீள சமூகத்துடன் ஒருங்கிணைத்தல் தொடர்பான செயலமர்வானது கடந்த புதன்கிழமை யாழ்ப்பாணம் திறன் மேம்பாட்டு பயிற்சி நிலையத்தில் இலங்கை ஏதிலியர் மறுவாழ்வு கழக தலைவி செல்வி எஸ். சூரியகுமாரி தலைமையில் இடம்பெற்றது.

இச் செயலமர்வில் இந்தியாவிலிருந்து நாடு திரும்பிய மக்கள் சமூகத்தில் மீள ஒருங்கிணையும் போது எதிர்கொள்கின்ற நடைமுறை சிக்கல்களான பாதுகாப்பு, அச்சுறுத்தல், நலிவுத்தன்மை மற்றும் சமூக ஏற்றத்தாழ்வுகளிலிருந்து விடுபட்டு எவ்வாறு மக்களை நிலையாக மீள ஒருங்கிணைப்பு செய்து அவர்களது வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி சுயகௌரவம் மிக்க குடிமகனாக வாழ வைப்பது என்பது தொடர்பாக சமூக மட்டத்தில் கண்டிருந்த அனுபவங்கள் தேவைகள் என்பவை தொடர்பாக பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளால் கலந்துரையாடப்பட்டன.

அரச மற்றும் அரச சார்பற்ற அமைப்புகள் எவ்வாறு கூட்டாக ஒன்றிணைந்து நாடு திரும்புகின்ற மக்களின் தேவைகளை இனங்கண்டு அதனை இவ்வாறு தீர்த்து வைக்கலாம் என்பது தொடர்பாகவும் இச்செயலமர்வில் கலந்துரையாடப்பட்டன.

இச் செயலமர்வில் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர், மேலதிக மாவட்ட அரசாங்க அதிபர் காணி மற்றும் யாழ் மாவட்டத்தின் 15 பிரதேச செயலர் பிரிவுகளை சேர்ந்த உதவி திட்டமிடல் பணிப்பாளர்கள், நிர்வாக கிராம அலுவலர்கள் மற்றும் மீள் ஒருங்கிணைப்பு தொடர்பான முகாமைத்துவ உத்தியோகத்தர்கள் ஆகியோருடன் சர்வதேச அரசசார்பற்ற அமைப்புகளான ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிதியம் மற்றும் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் ஆணையம் ஆகிய அமைப்புகளின் யாழ் பிராந்திய உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (30,75)

# நாடு பொருளாதார சிக்கலுக்குள்; நிதி அமைச்சரோ வெளிநாட்டில்

க.பிரசன்னா

அரசாங்கம் தமது பொறுப்புகளை நிறைவேற்றுவதில் ஆர்வமற்று செயற்படுவதாகவும் நாடு பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ள நிலையில் நிதி அமைச்சர் விடுமுறைக்காக வெளிநாடு சென்றுள்ளதாகவும் ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழு உறுப்பினர் டினோக் கொலம்பகே தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ள அவர் மேலும் தெரிவிக்கையில்,

வாழ்க்கைச் செலவு தினந்தோறும் அதிகரித்துச் செல்கிறது, கடைகளில் உணவுப் பொருட்கள் விற்பனைக்கு இல்லை, பொதுமக்கள் வேலைவாய்ப்பினை இழந்துள்ளனர். இவ்வாறான நிலையில் நிதி அமைச்சர் சகல பிரச்சினைகளையும் ஒதுக்கிவிட்டு குடும்பத்தினருடன் விடுமுறையை கழிப்பதற்கு சென்றுள்ளார். ஏனைய நாடுகளில் இவ்வாறு நடந்திருக்குமாயின் அமைச்சர் இராஜினாமா செய்வதற்கு தள்ளப்பட்டிருப்பார்.

பொதுமக்களுக்கு கொண்டுள்ள கடப்பாடுகளை நிறைவேற்றுவதற்கு ஆர்வமற்ற நிலையில் இருப்பதையே இது காட்டுகின்றது. நிதி அமைச்சர் மாத்திரம் விடுமுறைக்காக நாட்டை விட்டு வெளியேறவில்லை. நெருக்கடிகளுக்கு மத்தியிலும் ஏனைய பல அமைச்சர்களும் வெளிநாடுகளுக்குப் பயணித்துள்ளனர்.

நாட்டில் அதிகரித்து வரும் பிரச்சினைகளை தீர்ப்பதில் அரசாங்கம் தோல்வியடைந்துள்ளது. பண்டிகை காலப் பகுதியில் நாடு மேலதிக நேரத்துக்கு பணியாற்றும் நிலையில் விடுமுறைக்கு செல்வதற்கு இதுவே சிறந்த தருணமென அமைச்சரவை நினைக்கின்றதா என கேள்வி எழுப்பியுள்ளார்.

நிதி சிக்கல்களை தீர்ப்பதற்காக பொதுமக்கள் கிறிஸ்துமஸ் பண்டிகைக் காலம் மற்றும் வருட இறுதியிலும் தொடர்ந்து உழைத்துக் கொண்டிருக்கின்றனர். அரசாங்கத்தின் எவ்வித உதவிகளும் இன்றிய நிலையில் இம்மாதம் 23 ஆம் திகதி வரை பிள்ளைகள் பாடசாலைகளுக்கு செல்ல வேண்டும். அரசாங்கம் விடுமுறையை கழிப்பதற்காக பொதுமக்கள் சுமையை சுமக்கின்றனர்.

பொது மக்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு அரசாங்கத்தினால் தீர்வுகளை முன்வைக்க முடியவில்லை என்றால் நாட்டை திறமையாக வழிநடத்தக்கூடியவர்களிடம் ஒப்படைத்துவிட்டு நிரந்தரமாக விடுமுறையினை பெற்றுக் கொண்டு செல்ல வேண்டுமெனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.



யாழ் மாவட்ட கடற்தொழிலாளர் கூட்டுறவுசங்க சமாசங்களின் சம்மேளனமூடாக இலங்கைக்கான சீனத் தூதரகமும் கடற்றொழில் அமைச்சும் இணைந்து யாழ். மாவட்ட கடற்தொழிலாளர்களுக்கு உலர் உணவுப் பொதிகள் மற்றும் மீன்பிடி வலைகள் வழங்கும் நிகழ்வு யாழ் மாவட்ட கடற்தொழில் சம்மேளனத்தில் நேற்றையதினம் நடைபெற்ற போது..(30)

தினக்குரல்
THINAKKURAL
An Independent Daily Voice in Tamil
ஏசியன் மீடியா பப்ளிகேஷன் (பிரைவேட்) லிமிடெட்
இலக்கம் : 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
ஆசிரிய பீடம்:- 0217388301, 0217388302, 0217388303
பக்ஸ்:- 0217388304 விளம்பரம்:- 0217388307, விநியோகம்:- 0217388309
வெள்ளிக்கிழமை 17 டிசம்பர் 2021 Friday 17th December 2021

## நீரில் மூழ்கி மரணமடைவோர் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரிப்பு

இலங்கையில் நீரில் மூழ்கி உயிரிழக்கும் 1 முதல் 14 வயதுடைய சிறார்களின் எண்ணிக்கை சமீப காலமாக அதிகரித்து வருகிறது. வருடாந்தம் 100க்கும் மேற்பட்ட சிறுவர்கள் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளதாக இலங்கை உயிர்காப்பு அமைப்பின் தலைவர் அசங்க நாணயக்கார தெரிவித்துள்ளதை அவதானிக்க முடிகிறது. அதேவேளை ஏனைய வயதினரிடையேயும் நீரில் மூழ்கி இறப்பவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது. 2021இல் சுமார் 900 பேர் உயிரிழந்துள்ளனர். விழிப்புணர்வு இல்லாததே இந்த மரணங்களுக்கு காரணம் என்று சுட்டிக்காட்டப்படுகிறது.கொரோனா வைரஸ் தொற்று நோய் காரணமாக 2020 மற்றும் 2021 இல் பயணக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருந்தாலும், நீரில் மூழ்கி இறப்பவர்களின் எண்ணிக்கை குறையவில்லை. கிணறுகளில் விழுந்து இறக்கும் விபத்துச் சம்பவங்களும் அதிகரித்துள்ளன .

இலங்கையில் 2016 முதல் 2018 வரை வருடாந்தம் சராசரியாக 755 பேர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளதுடன், 2005 முதல் 2007 வரையிலான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 20 வீதத்தால் இத்தொகை குறைவடைந்துள்ளது .ஆயினும் 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் இது அதிகரித்துள்ளது. பெண்களை விட ஆண்களே அதிகளவில் நீரில் மூழ்கி இறந்துள்ளனர். இதற்கிடையில், இந்த மரணங்களுக்கு விழிப்புணர்வின்மை, கவனக்குறைவு, மது அருந்துதல் , பாதுகாப்பு உபகரணங்களைப் பயன்படுத்தாமல் நீச்சலில் ஈடுபடுதல் போன்றவை முக்கிய காரணங்களாகுமென்பதை ஆய்வுகள் வெளிப்படுத்துகின்றன. உலகளாவிய ரீதியில் ஒவ்வொரு ஆண்டும் 500,000 பேர் நீரில் மூழ்கி இறப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது. 13 இலட்சம் மக்கள் நீரில் மூழ்கும் அனுபவங்களின் விளைவாக காயங்களுக்கு உள்ளாகிறார்கள்.அதேசமயம் 25%-50% இளம் பருவத்தினர் மற்றும் வயது வந்தோர் மத்தியிலான மரணங்கள் பொழுதுபோக்கு நடவடிக்கைகளின்போது நீரில் மூழ்கும் சம்பவங்களுடன் தொடர்புடையதாக காணப்படுகிறது .

நீரில் மூழ்கும் சம்பவங்களில் பெரும்பாலானவை பொழுதுபோக்கு நடவடிக்கைகளின் போது சம்பவித்தவையாகும். கடல்,குளம், ஆறுகளுக்கு விடுமுறைக்குச் செல்பவர்கள், அடிப்படை பாதுகாப்பு நடவடிக்கைகளை முற்றிலும் புறக்கணிப்பதால் மரணமடைய நேரிடுகிறது. இலங்கையில் நீரில் மூழ்கும் சம்பவங்களுக்கு முக்கிய இடமாக ஏரிகளும் கடலும் இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.உலக சுகாதார அமைப்பின் 2014 ஆய்வின் பிரகாரம் 2012-2014 ஆம் ஆண்டுகளில் இலங்கையின் நீரில் மூழ்கும் விகிதம் 100,000 க்கு 4.2 மரணங்களாகும். 61 நாடுகளில் இலங்கை 12 ஆவது இடத்தைப் பிடித்துள்ளது. மேலும் குறைந்த மற்றும் நடுத்தர வருமானம் கொண்ட 35 நாடுகளுடன் ஒப்பிடும் போது 10 ஆவது இடத்தில் உள்ளது.நீரில் மூழ்கும் சம்பவங்களில் பெரும்பாலானவை மாத்தறை, மிரிஸ்ஸ, காலி, ஹிக்கடுவ, பேருவளை, களுத்துறை, பாணந்துறை, தெஹிவளை, கல்கிசை, வெள்ளவத்தை, காலி முகத்திடல், நீர்கொழும்பு மற்றும் நிலாவெளி போன்ற இடங்களில் சம்பவித்துள்ளன. நீரில் மூழ்குவதிலிருந்து சமாளிப்பதற்கு நீச்சல் கற்றுக்கொள்ளாமை, உயிர் காக்கும் சேவைகளுடன் அடையாளம் காணப்பட்ட பாதுகாப்பான நீச்சல் வலயங்கள் இல்லாதமையும் காரணமாகிவிடுகிறது.

ஒவ்வொரு ஆண்டும் மேல் மாகாணத்தில் கிட்டத்தட்ட 300 பேரும் வடமாகாணத்தில் 52 பேரும் நீரில் மூழ்கி உயிரிழக்கின்றனர்.இந்த மரணங்களில் பெரும்பாலானவை தடுக்கக்கூடியவை. எனினும், பொதுமக்களுக்கு விழிப்புணர்வு மற்றும் தடுப்பு உபாயங்கள் குறைவாகவே உள்ளன. திறமையான நீச்சல் வீரர்கள் கூட சில சந்தர்ப்பங்களில் நீரில் மூழ்கலாம்.அதனால் சகல வேளைகளிலும் கண்காணிப்பு முக்கியம். நீச்சல் குளங்கள் மற்றும் ஏனைய திறந்தவெளி நீர்நிலைகளுக்கு பிள்ளைகளை அழைத்துச் செல்லும் பெற்றோர்கள் அவர்களை மிகவும் உன்னிப்பாகக் கண்காணிக்க வேண்டும். கடல் கொந்தளிப்பு, திடீர் நீர்மட்ட உயர்வு, வெள்ளம் மற்றும் ஆழம் தெரியாத நீர் ஆதாரங்கள் போன்ற சுற்றுச்சூழல் காரணிகள் நீரில் மூழ்கி மரணமடைவதற்கான முக்கிய காரணங்கள் .அத்துடன், மது அருந்திவிட்டு நீந்தும் போதும் மூழ்கி மரணமடையவும் நேரிடுகிறது

தேசிய அளவில் அங்கீகரிக்கப்பட்ட நீச்சல் பாடசாலைகள், நீச்சல் பயிற்றுவிப்போர், நீச்சல் கற்றல் திட்ட வழிகாட்டுதல்களை உருவாக்குதல், நீரில் மூழ்கி சம்பவிக்கும் மரணங்களை குறைக்கும். நீர்நிலைகளைச் சுற்றியுள்ள நிகழ்வுகள் குறித்து சிறிது விழிப்புடன் இருந்தால் மட்டுமே, துயரமான சம்பவங்களைத் தடுக்க முடியும். இல்லையெனில், விலைமதிப்பற்ற உயிர்கள் பூமியில் இருந்து வீணாக அழிந்துவிடும்.உண்மையில், இந்த அவலங்களுக்கு அடிப்படைக் காரணம் அலட்சியம். எனவே, இந்த மாதிரியான அசம்பாவிதங்கள் நீண்டகாலத்திற்கு இடம்பெறாமல் இருக்க, இந்தப் பிரச்சினை குறித்து நாம் தீவிரமாகச் சிந்திக்க வேண்டும்.அண்மையில் திருகோணமலை மாவட்டத்தின் மூதூர் பகுதியில் சிறார்கள் உட்பட 8 பேர் பலியான கோரமான துன்பியல் சம்பவங்கள் இடம்பெறாமல் தடுப்பதற்கு விழிப்புணர்வும் முன்னெச்சரிக்கையான நடவடிக்கைகளும் அவசியம்.

# அரசியலமைப்பு கோட்பாடுகள், அரசு, சட்டவாக்க சபையின் தன்மைகள் தொடர்பான சமூக நீதிக்கான தேசிய இயக்கத்தின் முன்மொழிவுகள்



கலாநிதி ஜயம்பதி விக்கிரமரட்ன

புதிய அரசியலமைப்புக்கான தனது முன்மொழிவுகளை அடுத்த ஆண்டு தொடக்கத்தில் சட்ட ரீதியான வடிவத்தில் வெளியிடவுள்ளதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது. ஜனாதிபதி சட்டத்தரணி ரொமேஷ் டி சில்வா தலைமையிலான குழு ஒரு வருடத்திற்கும் மேலாக புதிய அரசியலமைப்பை உருவாக்கும் பணியில் ஈடுபட்டுள்ளது. குழு அறிக்கை வெளியிடப்படுமா என்பது தெரியவில்லை. வரைபானது முழுமையாக அறிக்கையை மட்டுமே அடிப்படையாகக் கொண்டதா அல்லது அரசாங்கத்தின் முன்மொழிவுகளும் சேர்க்கப்பட்டுள்ளதா என்பதைப் பார்க்க வேண்டியுள்ளது.

இதற்கிடையில், சமூக நீதிக்கான தேசிய இயக்கம் (என்.எம்.எஸ்.ஜே.) அரசியலமைப்பு சீர்திருத்தம் குறித்த தனது முன்மொழிவுகளை வெளியிட்டிருக்கிறது. சமூக நீதிக்கான தேசிய இயக்கம் மறைந்த வண. மாதுலுவாவே சோபித தேரரால் ஸ்தாபிக்கப்பட்டது. அதன் தாபித கால இருப்பில் அரசியலமைப்பு சீர்திருத்தம் தொடர்பான விவாதத்தில் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கியுள்ளது.1978 ஆம் ஆண்டு நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை ஒழிப்பதற்கான பிரசாரத்தில் வண.சோபித தேரர் முன்னணியில் இருந்தார். 2015 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் காலமானார். அரசியலமைப்பின் பத்தொன்பதாம் திருத்தச் சட்டம் தாம் எதிர்பார்த்த அளவிற்கு அமையவில்லை என மறைந்த தேரர் மிகுந்த ஏமாற்றம் அடைந்திருந்தார்.

ஜனநாயக ஆட்சி தொடர்பான தேர்ந்தெடுக்கப்பட்ட அம்சங்களில் என்.எம்.எஸ்.ஜே .இன் முன்மொழிவுகள் ஏறக்குறைய ஒரு வருடப் பணியின் உச்சம். அரசியலமைப்பின் பல்வேறு அம்சங்கள் குறித்து சைபர்வெளியில் அனைவருக்கும் பல கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டன.மறுசீரமைப்புக்கான தங்கள் திட்டங்களை முன்வைக்க நிபுணர்கள் அழைக்கப்பட்டனர். அதைத் தொடர்ந்து நீண்ட கேள்வி பதில் அமர்வுகள் இடம்பெற்றன. என்.எம். எஸ்.ஜே. உறுப்பினர்களிடையே வரைவு முன்மொழிவுகள் விநியோகிக்கப்பட்டன. மேலும் ஒருமித்த கருத்து எட்டப்பட்டது. அந்த அமைப்பு இப்போது பாராளுமன்றத்தின் முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய தலைமையில் உள்ளது. இக்கட்டுரை எழுத்தாளர் கிட்டத்தட்ட தொடக்கத்திலிருந்தே என்.எம்.எஸ். ஜே. உடன் தொடர்புடையவர்.

**அரசியலமைப்பு விதிகள், அரசின் தன்மை, இறையாண்மை மற்றும் பிரிவினைக்கு எதிரான பாதுகாப்புகள்**

ஒரு புதிய அரசியலமைப்பு சில அடிப்படை அரசியலமைப்பு கோட்பாடுகளை கொண்டிருக்க வேண்டும் என்று சமூக நீதிக்கான தேசிய இயக்கம் முன்மொழிந்துள்ளது. நிறவெறிக்குப் பின்னரான தென்னாபிரிக்க அரசியலமைப்பைத் தொடர்ந்து,அரசியலமைப்பு பிரச்சினைகளை நீக்கும் போது அல்லது அரசியலமைப்பை விளக்கும்போது கருத்தில் கொள்ளப்படும் அடிப்படைக் கொள்கைகளை பல புதிய அரசியலமைப்புகள் உள்ளடக்கியுள்ளன. சமூக நீதிக்கான தேசிய இயக்கம் பின்வருவனவற்றை முன்மொழிந்துள்ளது: மனித கௌரவம், சமூக நீதி, சமத்துவம், மனித உரிமைகள் மற்றும் சுதந்திரங்களின் முன்னேற்றம், இனவாதமற்ற மற்றும் பாலின சமத்துவம், அரசியலமைப்பின் மேலாதிக்கம் மற்றும் சட்டத்தின் ஆட்சி, வழக்கமான தேர்தல்கள் மற்றும் ஜனநாயக அரசாங்கத்தின் பல கட்சி அமைப்பு, பொறுப்புக்கூறல், பொறுப்புணர்வு , வெளிப்படைத்தன்மை ஆகியவற்றிற்கான உத்தரவாதம்.

1972 இல் இலங்கை அரசை 'ஒற்றையாட்சி' என வர்ணித்தமையும் 1978 இல் அது நிலைபெற்றமையும் அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வுக்கான முயற்சிகளைத் தடை செய்துள்ளது. அரசியலமைப்பு கோட்பாட்டில், ஒரு ஒற்றையாட்சி அரசு என்பது மத்திய அரசாங்கம் உச்சமாக இருக்கும் ஒன்றாகும். மேலும் நிர்வாகப் பிரிவுகள் மத்திய அரசு பிரதிநிதித்துவப்படுத்தும் அதிகாரங்களை மட்டுமே பயன்படுத்துகின்றன. சுருங்கச் சொன்னால், அரச அதிகாரத்திற்கு ஒரே ஒரு இறுதி ஆதாரம் மட்டுமே உள்ளது. இருப்பினும் இலங்கையர் பலருக்கு 'ஒற்றை' என்பது 'ஒரே தன்மை' அல்லது 'ஒரு நாடு' என்பதாகும். 'ஒற்றை' என்பதன் சிங்களச் சொல் 'ஏகீய', 'ஏகா' என்பது 'ஒன்று'. இவ்வாறு, அரசின் 'ஏகீய' தன்மையை மாற்றுவது நாட்டை 'பிளவுபடுத்துவதாக' சிலரால் பார்க்கப்படுகிறது.

அரசியலமைப்பின் ஆங்கிலப் பதிப்பில் இலங்கை அரசை 'ஒற்றை' என்று விபரிப்பது விரும்பத்தகாதது என்று அதிகாரப் பகிர்விற்கான ஆதரவாளர்கள் வாதிடுகின்றனர்.மத்திய அரசுக்கும் மாகாணத்திற்கும் இடையில் குறிப்பிட்ட விவகாரம் மேலெழும்போது மத்திய அரசுக்கு சாதகமாக முடிவு செய்யப்படுகிறதென்று இலங்கையில் குறிப்பிட்ட தொரு 'ஒற்றையாட்சி மனப்பான்மை' இருந்து வருவது என்பது விரும்பத்தகாத காரணமாகும் மற்றும் ஒற்றையாட்சி தொடர்பான சிறப்பான அர்த்தத்தில், அரசியலமைப்பு மாற்றத்தின் மூலம் மத்திய அரசால் பகிர்ந்தளிக்கப்பட்ட அதிகாரங்கள் திரும்பப்பெறப்படலாம் என்று அவர்கள் வாதிடுகின்றனர். சட்டமன்றம், நிறைவேற்று மற்றும் நீதித்துறை கூட அதிகாரப்பகிர்வை குறைமதிப்பிற்கு உட்படுத்தும் நிகழ்வுகள் உள்ளன. 'ஏக்கிய ராஜ்ய' என்ற சொற்றொடரை பயன்படுத்துவதற்கு அவர்கள் ஒப்புக்கொள்கிறார்கள்.

கடந்த பாராளுமன்றத்தின் அரசியலமைப்பு பேரவையின் வழிநடத்தல் குழு மேற்கண்ட கோரிக்கைகளை பரிசீலித்து ஒரு வழிமுறையைப் பரிந்துரைத்தது. அரசியலமைப்பு பேரவையை அமைப்பதற்கான தீர்மானத்தின் மீது ஜனாதிபதி பேசுகையில், தெற்கில் உள்ள மக்கள் சமஷ்டி என்ற சொல்லுக்கு அஞ்சும் அதே வேளையில், வடக்கில் உள்ள மக்கள் ஒற்றையாட்சி என்ற சொல்லுக்கு அஞ்சுவதாகக் குறிப்பிட்டார். மக்கள் அச்சப்பட வேண்டிய ஆவணம் அல்ல. 'யூனிட்டரி ஸ்டேட்' என்ற ஆங்கிலச் சொல்லின் பாரம்பரிய வரையறை மாற்றத்திற்கு உள்ளாகியுள்ளது.ஐக்கிய ராஜ்ஜியத்தில் இப்போது வட அயர்லாந்து மற்றும் ஸ்கொட்லாந்து ஒன்றியத்திலிருந்து விலகிச் செல்வது சாத்தியமாகும். எனவே, 'யூனிட்டரி ஸ்டேட்' என்ற ஆங்கிலச் சொல் இலங்கைக்கு ஏற்புடையதாக இருக்காது. 'ஏக்கிய ராஜ்ய' என்ற சிங்கள வார்த்தையானது பிரிக்கப்படாத மற்றும் பிரிக்க முடியாத நாட்டை சிறப்பாக விவரிக்கிறது.

வழிநடத்தல் குழுவால் முன்மொழியப்பட்ட 'ஏகிய ராஜ்ய' என்பதற்கான தமிழ் வாக்கியமான 'ஒருமித்த நாடு' சர்ச்சையைக் கிளப்பியது. 'ஒருமித்த நாடு' என்பது சாராம்சத்தில் 'ஐக்கிய நாடு' என்று வாதிட்ட ஈ.பி.டி.பி. 1978 அரசியலமைப்பின் தமிழ் பதிப்பில் பயன்படுத்தப்பட்டுள்ள 'ஒற்றையாட்சி' என்ற சொற்றொடரைப் பயன்படுத்த பரிந்துரைத்தது. 'ஒற்றையாட்சி' என்றால் 'ஒரே அரசாங்கம்' என்று பொருள்படும் என்றும் 'ஒரே அரசு' அல்ல என்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கூறியது.

சிங்களம் மற்றும் ஆங்கில பதிப்புகளில் 'ஏக்கிய ராஜ்ய' என்ற சொற்றொடர் பயன்படுத்தப்பட வேண்டும் என்றும் தமிழில் சரியான சொல் தமிழ் பதிப்பில் பயன்படுத்தப்பட வேண்டும் என்றும் சமூக நீதிக்கான தேசிய இயக்கம் முன்மொழிந்துள்ளது.

தேசிய இயக்கத்தின் முன்மொழிவுகளின்படி, இலங்கை ஒரு ஏக்கிய ராஜ்யமாக இருக்கும், இது மத்திய மற்றும் மாகாணங்களின் நிறுவனங்களை உள்ளடக்கியது, இது அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரத்தை செயல்படுத்தும். ஒரு ஏக்கிய ராஜ்யம் என்பது பிரிக்கப்படாத மற்றும் பிரிக்க முடியாத ஒரு அரசாக வரையறுக்கப்படுகிறது, இதில் அரசியலமைப்பை திருத்துவதற்கு அல்லது அரசியலமைப்பை இரத்துச் செய்வதற்கும் மாற்றுவதற்கும் அதிகாரம் அரசியலமைப்பில் வழங்கப்பட்டுள்ளபடி தேசிய சட்டமன்றத்திற்கும் இலங்கை மக்களுக்கும் இருக்கும். இறைமை என்பது மக்களிடம் உள்ளது என்பதுடன் பிரிக்க முடியாததும் அரசாங்க அதிகாரங்கள், அடிப்படை உரிமைகளை உள்ளடக்கியது. மக்களின் சட்டவாக்க நிறைவேற்று அதிகார, நீதித்துறை அதிகாரங்கள் அரசியலமைப்பின் மூலம் வழங்கப்பட்டுள்ளபடி செயற்படுத்தப்படும்.

மாகாண சபையொன்று தனது அதிகாரங்களைப் பயன்படுத்தி பிரிவினையை நோக்கிச் செல்லக்கூடும் என்று சிலர் அஞ்சுகின்றனர். இத்தகைய அச்சங்களைத் தணிக்க, நாட்டின் பிராந்திய ஒருமைப்பாடு மற்றும் இறையாண்மைக்கு ஆபத்து ஏற்பட்டால்,தலையிடும் அதிகாரம் மத்திய அரசுக்கு இருக்க வேண்டும் என்று சமூக நீதிக்கான தேசிய இயக்கம் முன்மொழிந்துள்ளது. அதன்படி, ஒரு மாகாண நிர்வாகம் ஆயுதமேந்திய கிளர்ச்சி அல்லது கிளர்ச்சியை ஊக்குவிக்கும் அல்லது வேண்டுமென்றே அரசியலமைப்பை மீறும் சூழ்நிலை ஏற்பட்டால்,அது குடியரசின் ஆட்புல ஒருமைப்பாடு மற்றும் இறைமைக்கு தெளிவான விதத்தில் ஆபத்தை உருவாக்குகின்றது. இந்நிலையில் மாகாண நிர்வாகத்தின் அனைத்து அல்லது ஏதேனும் செயற்பாடுகள் மற்றும் தேவையான இடங்களில் மாகாண சபையை கலைக்க வேண்டும். அத்தகைய அதிகாரம் துஷ்பிரயோகம் செய்யப்படாமல் இருப்பதை உறுதிசெய்ய, அதிகாரத்தைப் பயன்படுத்துவதற்கான காரணங்களை மத்திய அரசு தெரிவிக்க வேண்டும், அத்தகைய தலையீட்டை பாராளுமன்றம் அங்கீகரிக்க வேண்டும் மற்றும் தலையீடு நீதித்துறையின் மீள் ஆய்வுக்கு உட்பட்டதாக இருக்க வேண்டும்.



**1978 ஆம் ஆண்டு நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை ஒழிப்பதற்கான பிரசாரத்தில் வண.சோபித தேரர் முன்னணியில் இருந்தார். 2015 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் காலமானார். அரசியலமைப்பின் பத்தொன்பதாம் திருத்தச் சட்டம் தாம் எதிர்பார்த்த அளவிற்கு அமையவில்லை என மறைந்த தேரர் மிகுந்த ஏமாற்றம் அடைந்திருந்தார்**

**சட்டவாக்கம்**

பாராளுமன்றம் மற்றும் இரண்டாவது அவை ஆகியவற்றைக் கொண்ட இருசபை சட்டவாக்கத்தை சமூக நீதிக்கான தேசிய இயக்கம் முன்மொழிந்துள்ளது. பாராளுமன்றத்தின் பதவிக்காலம் ஐந்து வருடங்களாகும்.

பாராளுமன்றம் அரசாங்கத்தின் மீது நம்பிக்கையில்லா பிரேரணையை நிறைவேற்றினால் அல்லது வரவு– செலவுத் திட்டம் தோற்கடிக்கப்பட்டால் அல்லது அரசாங்கக் கொள்கை அறிக்கை தோற்கடிக்கப்பட்டால் மற்றும் உருவாக்கப்பட்ட புதிய அரசாங்கம் பதினான்கு நாட்களுக்குள் நம்பிக்கை வாக்கெடுப்பில் வெற்றிபெறவில்லை என்றால் ஜனாதிபதியால் பாராளுமன்றம் கலைக்கப்படும். எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் பாராளுமன்றத்தில் மூன்றாவது பெரிய கட்சியின் தலைவரின் இணக்கப்பாட்டுடன் பிரதமரின் பெயரில் ஒரு பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டால், பாராளுமன்றமும் கலைக்கப்படும். மேற்கூறிய சூழ்நிலைகளைத் தவிர ஜனாதிபதி பாராளுமன்றத்தைக் கலைக்க மாட்டார்.

தற்போது, யாருடைய பட்டியலில் தேர்ந்தெடுக்கப்பட்டதோ அந்தக் கட்சி அல்லது குழுவின் உறுப்புரிமையை இழக்கும் ஒரு பாராளுமன்ற உறுப்பினர், அதன் விளைவாக அவரது பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இழக்கிறார். ஆனால் அத்தகைய உறுப்பினர் பதவி நீக்கத்தை எதிர்த்து உயர் நீதிமன்றத்தில் சவால் விடலாம். எவ்வாறாயினும், நடைமுறையில், அத்தகைய உறுப்பினர்கள் எந்தவொரு ஒழுங்கு நடவடிக்கைகளையும் தடுக்கும் வகையில் மாவட்ட நீதிமன்றத்திலிருந்து தடை உத்தரவுகளைப் பெறுகின்றனர் மற்றும் அதன் மூலம் கட்சித் தாவல் எதிர்ப்பு விதியின் நோக்கத்தை நிராகரிக்கின்றனர். இதற்கு பத்தொன்பதாம் திருத்தம் மூலம் தீர்வு காணப்பட்டது. ஆனாலும்,எதிர்க்கட்சிகள் ஆதரவளிக்காததால், பாராளுமன்றத்தில் குழுநிலையில் முன்மொழியப்பட்ட ஏற்பாடு வாபஸ்பெறப்பட்டது. பாராளுமன்ற உறுப்பினருக்கு எதிராக அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி அல்லது சுயேச்சைக் குழுவால் எடுக்கப்படும் அல்லது எடுக்க உத்தேசிக்கப்படும் ஒழுங்கு நடவடிக்கை தொடர்பான எந்தவொரு விடயத்தையும் விசாரிக்கவும் தீர்மானிக்கவும் உயர் நீதிமன்றத்திற்கு பிரத்தியேக அதிகார வரம்பு இருக்க வேண்டும் என்பதே சமூக நீதிக்கான தேசிய இயக்கத்தின் முன்மொழிவு. அத்தகைய நடவடிக்கை அல்லது முன்மொழியப்பட்ட செயலைத் தடுக்கும், தடை செய்யும் அல்லது தடை செய்யும் ரிட், தடை உத்தரவு அல்லது ஏனைய நிவாரணம் வழங்க வேறு எந்த நீதிமன்றத்திற்கும் அதிகாரம் இல்லை.

அதிகாரப் பகிர்வுக்கான கருவியாக பலநாடுகளில் சட்டவாக்கத்தின் இரண்டாவது அவை பயன்படுத்தப்பட்டு வருவதாக அமைப்பு சுட்டிக்காட்டுகிறது. அதிகாரப்பகிர்வு உள்ள ஒவ்வொரு நாட்டிலும் அத்தகைய அவை உள்ளது. மாகாணங்களில் இருந்து பிரதிநிதிகளை உள்ளடக்கிய இரண்டாவது அவை தேசிய சட்ட மன்றத்தில் அவர்களுக்கும் ஒரு தனித்துவமான வகிபாகம் உள்ளது என்ற வலுவான உணர்வை மாகாணங்களில் ஏற்படுத்தும். இது கீழ் சபையின் பிரதிநிதித்துவத்தின் சாத்தியமான ஏற்றத்தாழ்வுகளை சரிசெய்வதற்கான ஒரு பொறிமுறையாக செயற்படுவதோடு, மாகாணங்களில் பாதகமான விளைவுகளை ஏற்படுத்தக்கூடிய அவசர சட்டங்கள் மற்றும் சட்டங்களுக்கு எதிராக உள்ளமைக்கப்பட்ட பொறிமுறையாகவும் செயற்படும்.

இரண்டாவது அவையானது ஐம்பத்தைந்து உறுப்பினர்களைக் கொண்டிருக்கும், ஒவ்வொரு மாகாண சபையும் ஒரு ஒற்றை மாற்றத்தக்க வாக்கின் அடிப்படையில் ஐந்து உறுப்பினர்களை நியமிக்கும், இது செனட்டர்களைத் தேர்ந்தெடுக்க சுதந்திர அரசியலமைப்பின் கீழ் பயன்படுத்தப்படும் முறையாகும் . யார் உறுப்பினர்களாக இருக்க வேண்டும் என்பதில், இரண்டு விருப்பங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. விருப்பம் 1: உறுப்பினர்கள் பொது அல்லது தொழில் வாழ்வில் தங்களை வேறுபடுத்திக் கொண்ட உயர்ந்த மற்றும் நேர்மையான நபர்களாக இருக்க வேண்டும். விருப்பம் 2: பரிந்துரைக்கப்படும் உறுப்பினர்கள் மாகாண அமைச்சர்கள் உட்பட மாகாண சபைகளின் உறுப்பினர்களாக இருப்பார்கள்.

இரண்டாவது அவைக்கு சாதாரண சட்டத்தை இரத்துச் செய்யும் அதிகாரம் இருக்காது. பாராளுமன்றத்தின் ஒழுங்குப் பத்திரத்தில் வைக்கப்பட்டுள்ள அனைத்து சட்டமூலங்களும் இரண்டாம் வாசிப்புக்கு முன்னர் அதன் கருத்துக்களைப் பெறுவதற்கு இரண்டாவது சபைக்கு அனுப்பப்படும். எவ்வாறாயினும், மாகாண சபைப் பட்டியலில் உள்ள ஒரு விடயம் அல்லது விடயத்தில் தேசிய கொள்கை அல்லது தரநிலைகளை உருவாக்குவதற்கான சட்டமூலம் இரண்டாவது சபையாலும் நிறைவேற்றப்படும். இரண்டாவது சபையானது அரசியலமைப்பு அல்லது சட்டத்தால் பரிந்துரைக்கப்படும் மேற்பார்வை மற்றும் பிற செயல்பாடுகளையும் மேற்கொள்ளும்.விசேட (2/3) பெரும்பான்மையுடன் பாராளுமன்றம் மற்றும் இரண்டாவது அவை இரண்டாலும் நிறைவேற்றப்பட்டாலன்றி எந்த அரசியலமைப்புத் திருத்தமும் சட்டமாக இயற்றப்படாது.

கொழும்பு டெலிகிராப்



# உலகளாவிய உரிமைகளை வென்றெடுக்க அனைவரும் ஒன்றிணைந்து செயற்படுங்கள்

## -வடக்கு மாகாண ஆளுநர் அழைப்பு-



மனித வாழ்க்கையினை எளிதாக்கும் மதங்கள் மற்றும் உரிமைகளின் உலகளாவிய அம்சங்களை வென்றெடுக்க அனைவரும் ஒன்றிணைந்து செயற்படுங்கள் என வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா அழைப்பு விடுத்துள்ளார்.

மனிதர்கள், மொழிகள், மதங்கள் மற்றும் கலாசாரங்கள் ஆகியவற்றின் மூலம் தெற்காசிய நாடுகள் வளம் பெற்றுள்ளன.

இந்த நாடுகளில் அடிப்படை சுதந்திரங்களுக்கு உத்தரவாதம் அளிக்கும் பல சட்டங்கள் மற்றும் சட்டப் பாதுகாப்புகளும் உள்ளன

மத மரபுகளின் ஆதரவு, மனித உரிமைகளுக்கான அடிப்படையை வழங்குவது மட்டுமல்லாமல், மனித உரிமைகளின் தேவைகள், பல்வேறு மத மற்றும் கலாசார மரபுகளின் தார்மீக மற்றும் ஆன்மீக மொழிக்கு பரிமாற்றுவதற்கு காரணமாகின்றது. அதிகமான மக்கள் இந்த உரிமைகளை தங்கள் பாரம்பரியமாகக் கோருவதற்கு உதவுவதோடு மற்றும் அடிப்படை மனித உரிமைகளின் தற்போதைய உலகளாவிய அங்கீகாரத்தை மேலும் வலுப்படுத்துகிறது.

ஆசியாவில் உள்ள மதங்களின் புனித நூல்களில் உள்ள பொதுவான அம்சங்கள் மற்றும் உரிமைகள் பற்றிய சர்வதேச உடன்படிக்கையின் அடிப்படையில் மனித உரிமைகள் கட்டியெழுப்பப்படும். மனித ஆளுமை மற்றும் தனிநபர் ஆளுமை, கண்ணியம் மற்றும் சுய மதிப்பு, அத்துடன் மற்றும் உடல், உளத் திறன்களின் உணர்வை வளர்த்துக் கொள்ளுதல். மனித உரிமைகள் மற்றும் அடிப்படை சுதந்திரங்கள் மற்றும் கலாசாரத் தனித்துவம், மொழி மற்றும் மதிப்புகளுக்கு மரியாதை அளித்தல். சுதந்திரமான சமுதாயத்தில் மக்கள் திறம்பட பங்கேற்க உதவுதல் மற்றும் அனைத்துக் குழுக்களிடையேயும் புரிதல், சகிப்புத்தன்மை மற்றும் நட்பை ஊக்குவித்தல் மற்றும் அமைதியைப் பேணுதல் ஆகிய அம்சங்களைக் கொண்ட வடக்கை கட்டியெழுப்புவதற்காக அனைவரும் ஒன்றிணைந்து பயணிக்க முன்வருமாறு ஆளுநர் அழைப்பு விடுத்துள்ளார்.(75)

# வலி.வடக்கு மக்களின் காணிகளில் விவசாயம்

## -ஜனாதிபதி சாதகமான பதில் என அங்கஜன் தெரிவிப்பு-



வலி. வடக்கு பகுதிகளில் இன்னும் விடுவிக்கப்படாத பொது மக்களின் காணிகளில் விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு ஜனாதிபதி கோத்தபய ராஜபக்ச சாதகமான பதிலை வழங்கியுள்ளதாக பாராளுமன்ற குழுக்களின் பிரதித் தவிசாளரும் யாழ். மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவருமான அங்கஜன் இராமநாதன் தெரிவித்தார்.

கடந்த வாரம் பாராளுமன்ற கட்டிடத் தொகுதியில் இடம்பெற்ற பாதுகாப்பு அமைச்சு தொடர்பான உயர்மட்ட கலந்துரையாடலில் வலி.வடக்கு மக்களின் விவசாய காணிகளில் விவசாயம் செய்வதற்கு அரசாங்கம் அனுமதி வழங்குவதாகத் தெரிவித்த நிலையில் அனுமதி வழங்கப்படவில்லை என்ற கோரிக்கையை ஜனாதிபதியிடம் முன் வைத்தேன்.

இதன்போது பதிலளித்த ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ச பாதுகாப்புத் தரப்பினருக்கு அவசியம் எனக் கருதப்படும் தனியார் காணிகளை அடையாளப்படுத்தி தற்போது நடைமுறையில் உள்ள விலை மதிப்புக்கு ஏற்ற வகையில் காணிகளை கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். அதே சமயம் ஏனைய தனியார் காணிகளில் விவசாயம் செய்வதற்கு முதலில் மக்களுக்கு அரசாங்கம் இடமளிக்கும். குறித்த விடயம் தொடர்பில் இராணுவத் தளபதி சவேந்திர சில்வாவை ஆராய்ந்து நடவடிக்கை எடுக்குமாறு குறித்த கூட்டத்தின்போது ஜனாதிபதி பணிப்புரை வழங்கினார் எனறார். (75)

# நாகர் கோவில் மகாவித்தியாலயத்தின் தேவைகளை கேட்டறிந்த சிறீதரன் எம்.பி

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் நேற்று நாகர்கோவில் மகாவித்தியாலயத்திற்கு விஜயம் மேற்கொண்டு பாடசாலையின் தேவைகளை கேட்டறிந்து கொண்டார்.

பாடசாலையின் முதல்வர் மு. கண்ணதாசனினால் பாடசாலையின் தேவைகள் தொடர்பிலும் மழைக்காலங்களில் மாணவர்கள் படும் அசௌகரியங்கள் நீர் வகுப்புக்களில் தேங்கி நிற்பது தொடர்பிலும் வகுப்பறைக் கட்டிடங்களின் பற்றாக்குறை தொடர்பிலும் நாடாளுமன்ற உறுப்பினருக்கு விளக்கமளிக்கப்பட்டது.

புலம்பெயர்ந்து இருக்கும் பாடசாலையின் பழைய மாணவர்களின் ஒத்துழைப்புடன் நிரந்தர கட்டிடம் அமைப்பது தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.

நாடாளுமன்ற உறுப்பினருடன் பருத்தித்துறை பிரதேச சபையின் உறுப்பினர் சுரேஸ்குமார் பாடசாலையின் ஆசிரியர்கள் பழைய மாணவர்கள் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் உறுப்பினர்கள் எனப் பலரும் சந்திப்பில் கலந்து கொண்டனர்.

# இணையவழி பன்னாட்டு அரங்க கதையாடல்

புத்தாக்க அரங்க இயக்கம் நடத்தும் மெய்நிகர் இணையவழி பன்னாட்டு அரங்க கதையாடல் தொடர் 10 நிகழ்வு மார்கழி மாதம் 19,20,21,22,23 ஆகிய திகதிகளில் இரவு 7 மணிக்கு புத்தாக்க அரங்க இயக்கத்தின் பணிப்பாளர் எஸ்.ரி.குமரன் தலைமையில் இடம் பெறவுள்ளது.

இந் நிகழ்வில் நாளை மறுதினம் கிழக்குப் பல்கலைக்கழக விரிவுரையாளர் து.கௌரீஸ்வரன் (இலங்கை) கூத்து மீளுருவாக்கம் செயற்பாடும் கோட்பாடும், 20ஆம் திகதி திங்கட்கிழமை காரைக்கவி கந்தையா பத்மானந்தன் (இலங்கை) நாடகமும் நானும், 21ஆம் திகதி செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணப்பல்கலைக்கழக சிரேஸ்ட விரிவுரையாளர் கலாநிதி க.கஜவிந்தன் (இலங்கை) குணமாக்கல் அரங்கு, 22 ஆம் திகதி புதன்கிழமை வேலு சரவணன் (தமிழ்நாடு இந்தியா) குழந்தைகளின் ஆளுமை விருத்தியில் சிறுவர் நாடகங்களின் வகிபங்கு, 23ஆம் திகதி வியாழக்கிழமை முனைவர் கீ.பார்த்தீபராஜா (தமிழ்நாடு இந்தியா) தவத்திரு சங்கரதாஸ் சுவாமிகள் ஆகிய விடயங்களில் கதையாடவுள்ளனர்.

நிறைவுரையினை புத்தாக்க அரங்க இயக்கத்தின் நிர்வாகப் பணிப்பாளர் எஸ்.ரி.அருள்குமரன் வழங்கவுள்ளார்.

இவ் இணையவழி அரங்க கதையாடல் நிகழ்வில் ஆர்வமுடையவர்களை சூம் செயலி இலக்கம் 647334 8261கடவுச் சொல் ITM ஊடாக இணைந்து கொள்ளுமாறு புத்தாக்க அரங்க இயக்கத்தினர் அழைப்பு விடுத்துள்ளனர்.

# சோதிவிநாயகர் ஆலயத்தில் திருவெம்பாவை விரத உற்சவம்

குப்பிழான் சொக்கவளவு சோதிவிநாயகர் ஆலய வருடாந்தத் திருவெம்பாவை விரத உற்சவம் கடந்த சனிக்கிழமை ஆரம்பமாகி இடம்பெற்று வருகின்றது.

இவ்வாலயத் திருவெம்பாவை உற்சவ காலத்தில் தினமும் அதிகாலை-04 மணியளவில் பூசை வழிபாடுகள் ஆரம்பமாகி நடைபெறுகிறது என மேற்படி ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர்.

(18)

# திருமுகம் 60 மலர் வெளியீடும் இளைய தலைமுறை ஆற்றலாளர் விருது வழங்கலும்

தெல்லிப்பழை, ஸ்ரீதுர்க்கா தேவி ஆலயத் தலைவரும், சிவபூமி அறக்கட்டளையின் தலைவருமான செஞ்சொற்செல்வர் கலாநிதி. ஆறு.திருமுருகனின் மணிவிழாவை ஒட்டித் திருமுகம் 60 மலர் வெளியீடும் இளைய தலைமுறை ஆற்றலாளர் விருது வழங்கலும் நிகழ்வு நாளை காலை-09 மணி முதல் தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்காதேவி ஆலய அன்னபூரணி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்கா தேவி ஆலய செஞ்சொற்செல்வர் கலாநிதி.ஆறு.திருமுருகன் பிறந்தநாள் அறநிதியச் சபையின் ஏற்பாட்டில் இடம் பெறவுள்ள குறித்த நிகழ்வில் தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயப் பிரதமகுரு சிவஸ்ரீ க.செந்தில்ராஜக் குருக்கள், நல்லை ஆதீன குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், மாவை ஆதீன ஹர்த்தா மகாராஜஸ்ரீ து.ஷ.இரத்தினசபாபதிக் குருக்கள், கோப்பாய் சுப்பிரமுனிய கோட்ட முதல்வர் ரிஷி தொண்டுநாத சுவாமிகள் ஆகியோர் கலந்து கொண்டு ஆசியுரைகள் ஆற்றவுள்ளனர். (18)

# இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தினால் டெங்கு ஒழிப்பு நடவடிக்கை

இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தினால் ஆண்டுதோறும் முன்னெடுக்கப்படும் டெங்கு ஒழிப்பு நடவடிக்கையின் வரிசையில் நாளை மறுதினம் காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

இது தொடர்பில் இன்று இளவாலை கிராம மக்களுக்கு நகரும் ஒலிபெருக்கி வாயிலாக அறிவுறுத்தல்கள் வழங்கப்படவுள்ளது!

கிராமத்தவர்கள் தங்கள் வீடுகள் தோறும் உள்ள டெங்கு நுளம்பு பெருக ஏதுவான பொருட்களான இளநீர் கோம்பைகள், பழைய பிளாஸ்திக் பொருட்கள், பழைய டயர்கள், சிரட்டைகள் முதலான நீர் தேங்க் கூடிய பொருட்களை சேகரித்து வீடுகள் தோறும் பொதி செய்து வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

சங்க உறுப்பினர்கள் நாளை மறுதினம் வலி.வடக்கு பிரதேச சபையின் விசேட வாகனம் ஊடாக வீடுகள் தோறும் சென்று அப்பொதிகளை சேகரித்து உரிய முறையில் அப்புறப்படுத்த வலி.வடக்கு பிரதேச சபையிடம் ஒப்படைக்கவுள்ளார்கள்.

# விபத்தில் பாடசாலை சிறுவன் படுகாயம்

கிளிநொச்சியில் இடம்பெற்ற வீதி விபத்தில் பாடசாலை மாணவன் ஆபத்தான நிலையில் கிளிநொச்சி வைத்தியசாலையிலிருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் நேற்று முன்தினம் மாலை 5 மணியளவில் கிளிநொச்சி ஏ9 வீதி 155 ஆம்கட்டைப் பகுதியில் இடம்பெற்றுள்ளது. தனியார் கல்வி நிலையம் ஒன்றுக்கு சென்ற மாணவன் கல்வி நிலையம் நிறைவுற்றதும் ஏ9 வீதியின் மறுபுறத்தில் மாணவனை ஏற்றிச் செல்வதற்காக காத்திருந்த தாயிடம் வீதியினை கடக்க முற்பட்ட போது ஆடைத் தொழிற்சாலை வாகனம் மோதியுள்ளது என விபத்தை நேரில் பார்த்தவர்கள் தெரிவித்துள்ளனர். இதன் போது உடனடியாக 07 வயது சிறுவன் கிளிநொச்சி வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கிருந்து யாழ். போதனா வைத்தியசாலைக்கு மேலதிக கிசிச்சைக்காக மாற்றப்பட்டுள்ளார்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை கிளிநொச்சி பொலீஸார் மேற்கொண்டு வருகின்றனர். (52)

# யாழ் .மாவட்ட செயலகத்தின் வெற்றிக்கு அங்கஜன் எம்.பி வாழ்த்து

தேசிய உற்பத்தித்திறன் விருதுகள் போட்டித் தொடரில் யாழ் .மாவட்ட செயலகம் முதலாம் இடத்தினைப் பெற்றதனையிட்டு பாராளுமன்ற உறுப்பினரும்,யாழ் மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுத்தலைவருமான அங்கஜன் இராமநாதன் தனது பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் ஊடகங்களுக்கு அனுப்பி வைத்திருந்த வாழ்த்துச் செய்தியிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, அரசதுறை நிறுவனங்களின் வினைத்திறனான சேவையை மதிப்பிடும் பொருட்டு தேசிய உற்பத்தித்திறன் செயலகத்தினால் 2020ஆம் ஆண்டிற்கான உற்பத்தித்திறன் விருதுகள் போட்டித் தொடரில் தேசிய ரீதியில் யாழ்.மாவட்ட செயலகம் முதல் இடத்தைப் பெற்றிருப்பதனையிட்டு எனது மனமார்ந்த வாழ்த்துக்கள்.

அரசாங்க அதிபர் க.மகேசனதும், மாவட்ட செயலக சகல உத்தியோகத்தர்களினதும் அயராத உழைப்பிற்கு கிடைத்த வெகுமதி இவ் வெற்றியாகும்.

2020ஆம் ஆண்டு ஆரம்பத்தில் உலகளாவிய ரீதியில் ஏற்பட்ட கொவிட்-19 பரவலின் காரணத்தால் எமது மாவட்டத்திலும் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையிலும் சளைக்காமல் உற்பத்தித்திறன் செயற்பாட்டிற்கு அரசாங்க அதிபரினால் எடுக்கப்பட்ட தொடர் நடவடிக்கைகளுக்கும்,வினைத்திறனான செயற்பாட்டிற்குமான சிறந்த தலைமைத்துவத்திற்கு இவ் விருது சான்று பகிர்கின்றது.

அத்துடன் அரச துறையில் பிரதேச செயலகங்களுக்கு இடையிலான போட்டித் தொடரில் யாழ். மாவட்டத்திலுள்ள பிரதேச செயலகங்களில் 14பிரதேச செயலகங்கள் பங்குபற்றி வெற்றி பெற்றுள்ளதுடன் - அதில் தெல்லிப்பழை பிரதேச செயலகம் முதலாம் இடத்தினைப் பெற்றதனையிட்டும்-ஏனைய பிரதேச செயலகங்களும் சிறப்பான வெற்றியீட்டியதனையிட்டும் மிக்க மகிழ்வடைகிறேன்.

சகல அரச உத்தியோகத்தர்களினதும் சேவைகள் மென்மேலும் தொடர எனது பாராட்டுதல்களும்,வாழ்த்துக்களும் என்றுள்ளது.(13)

# கல்வியங்காட்டில் இன்று இரத்ததான முகாம்

பல்நோக்கு அபிவிருத்திச் செயலணித் திணைக்களத்தின் ஏற்பாட்டில் இரத்ததான முகாம் நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை காலை-09 மணி முதல் புதிய செம்மணி வீதியில் அமைந்துள்ள கல்வியங்காடு ஞானோதயா வித்தியாலயத்தில் நடைபெறும்.

மேற்படி இரத்ததான முகாம் நிகழ்வில் குருதிக் கொடையாளர்கள் அனைவரும் தவறாது கலந்து கொண்டு இரத்ததானப் பணிக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

(18)

# சுயாதீன ஊடகவியலாளருக்கு பயங்கரவாத தடுப்பு பிரிவினரால் விசாரணைக்கு அழைப்பு

கிளிநொச்சியை சேர்ந்த சுயாதீன ஊடகவியலாளர் பரராஜசிங்கம் சுஜீவனை கொழும்பு பயங்கரவாத தடுப்பு பிரிவினர் இன்று கொழும்பில் உள்ள பயங்கரவாத தடுப்பு விசாரணை பிரிவுக்கு வருமாறு அழைப்பாணை அனுப்பியுள்ளமை ஊடகவியலாளர்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது என கிளிநொச்சி ஊடக அமையம் தெரிவித்துள்ளது.

இவ்விடயம் தொடர்பில் அவ் அமைப்பு மேலும் தெரிவித்துள்ளதாவது,

தொடர்ச்சியாக ஊடகவியலாளர்கள் விசாரணைக்கு அழைக்கப்படுகின்றமை, அச்சுறுத்தல்கள் விடுகின்றமை, தாக்கப்படுகின்றமை போன்ற செயற்பாடுகள் ஊடகவியலாளர்கள் மத்தியில் அச்சத்தையும், தொடர்ந்தும் ஊடகப் பணியை மேற்கொள்வதில் நம்பிக்கையீனத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

ஊடகயவியலாளர்கள் மீதான இவ்வாறான நெருக்கடிகள் மிகுந்த கவலையினை ஏற்படுத்தியுள்ளது என்பதுடன் நாட்டின் ஊடகத்துறை மற்றும் ஊடகவியலாளர்களின் சுயாதீனத்தையும் கேள்விக்குட்படுத்தியுள்ளது எனச் சுட்டிக்காட்டியுள்ள கிளிநொச்சி ஊடக அமையம் எதிர்காலத்தில் இவ்வாறான நிலைமைகள் தவிர்க்கப்பட்டு ஊடகவியலாளர்கள் சுதந்திரமாக தங்களது பணிகளை மேற்கொள்ளும் சூழல் உருவாக்கப்பட வேண்டும். என்று கோரிக்கை விடுத்துள்ளது. (52)

# மன்னாரில் விவசாயப் பிரதேசங்களை விடுவிப்பதற்கு அமைச்சர் டக்ளஸ் தலைமையில் கலந்துரையாடல்



மன்னார் மாவட்டத்தில் வனப் பாதுகாப்பு, வன ஜீவராசிகள் திணைக்களங்களினால் பாதுகாக்கப்பட வேண்டிய காடுகளாக அடையாளப்படுத்தப்பட்ட பகுதிகளில், விவசாய நடவடிக்கைகளுக்கு பொருத்தமான பிரதேசங்கள் மற்றும் கடந்தகாலங்களில் விவசாயம் மேற்கொள்ளப்பட்ட பிரதேசங்களை விடுவிக்கும் நோக்கிலான கலந்துரையாடல் மன்னார் மாவட்ட செயலகத்தில் நேற்று நடைபெற்றது.

வனப் பாதுகாப்பு , வன ஜீவராசிகள் பாதுகாப்பு அமைச்சர் சி.பி. ரத்நாயக்கா , அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா , மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், துறைசார் அதிகாரிகள் குறித்த கலந்துரையாடலில் கலந்து கொண்டனர்.

வடக்கு மாகாணத்தில் கடந்த கால யுத்தம் காரணமாக கைவிடப்பட்டிருந்த விவசாய நிலங்கள் பராமரிப்பின்றி காடுகளாக மாறியிருந்த நிலையில், வனப் பாதுகாப்பு ,வன ஜீவராசிகள் திணைக்களங்களினால் அவை பாதுகாக்கப்பட வேண்டிய பிரதேசங்களாக அடையாளப்படுத்தப்பட்டது.

இது தொடர்பாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தொடர்ச்சியாக துறைசார் தரப்புக்களுடனும் ஜனாதிபதி மற்றும் பிரதமருடனும் மேற்கொண்ட கலந்துரையாடல்களின் பயனாக, ஜனாதிபதி விடுத்த அறிவுறுத்தலுக்கு அமைய இக்கூட்டம் நடைபெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.(75)

# சிறுவர், பெண்கள் வன்முறைகளை கல்வி ஊடாக தடுத்து நிறுத்த வேண்டும்

## -அரச அதிபர் மகேசன் தெரிவிப்பு-



சிறுவர் பெண்கள் வன்முறைகளை பாடசாலைக் கல்வி ஊடாக தடுத்து நிறுத்த முன்வரவேண்டும் என யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன் வேண்டுகோள் விடுத்தார்.

நேற்று முன்தினம் யாழ். தனியார் விடுதியில் இடம்பெற்ற சிறுவர் பெண்கள் தொடர்பான வன்முறைகளை இல்லாதொழித்தல் , பால்நிலை சமத்துவம் தொடர்பான கலந்துரையாடலில் அதிதியாக கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நாட்டில் தற்போது சிறுவர் பெண்கள் வன்முறைகள் அதிகரித்த நிலையில் காணப்படுகின்றது. இதனை தடுப்பதற்கு பல்வேறு செயற்திட்டங்களை அரசும் அரசசார்பற்ற நிறுவனங்களும் மேற்கொண்டு வருகின்றமை பாராட்டத்தக்க விடயம்.

சிறுவர் பெண்கள் மீதான வன்முறைகளை தடுப்பதற்கு பாடசாலைக் கல்வி ஊடாக மாணவர்களை நெறிப்படுத்த வேண்டும். ஏனெனில் பாடசாலை பருவத்திலே மாணவர்கள் சிறுவர் பெண்கள் மீதான வன்முறைகள் எவை அதை எப்படி தடுக்க முடியும் சட்டத்தில் அவ்வாறான பாதுகாப்புகள் உள்ளது என்பது பற்றி அவர்களுக்கு போதிக்க வேண்டும்.

ஆகவே சிறுவர் பெண்கள் மீதான வன்முறைகளை தகர்த்து ஒழுக்கம் மிக்க சமுதாயத்தை கட்டியெழுப்ப அனைத்து துறையினரும் முன்வரவேண்டும் என்றார்.

இந்நிகழ்வில் மாவட்ட செயலக பிரதம திட்டப் பணிப்பாளர் ,மாவட்டச் செயலாளர், பெண்கள் சிறுவர் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பிரதேச சபை உறுப்பினர்கள், அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் மற்றும் ஊடகவியலாளர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

### வீதியில் கண்டெடுத்த

## பெறுமதியான தங்க நகைகளை மீள ஒப்படைத்த இளைஞனுக்கு பாராட்டு



யாழ்ப்பாணம்-அரியாலைப் பகுதியில் உள்ள பஸ் தரிப்பு நிலையத்தில் தவறவிடப்பட்ட 40இலட்சம் ரூபாய் பெறுமதியான நகைப் பையை மீளவும் உரியவரிடம் சென்றடைய வழிவகுத்த தென்மராட்சி இளைஞனுக்கு நேற்று முன்தினம் காலை வடவரணி கந்தசுவாமி ஆலய முன்றலில் வைத்து கௌரவமளிக்கப்பட்டது.

தென்மராட்சி- வரணி பகுதியைச் சேர்ந்த 21வயதான சியானீஸ் மதுசன் என்ற இளைஞனே இந்த நல்ல காரியத்தில் ஈடுபட்டு பலரது பாராட்டுக்களையும் பெற்றுள்ளார். கௌரவிப்பு நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் சிறிதரன், சாவகச்சேரி பிரதேசசபை உறுப்பினர் பிரபாகரன் உள்ளிட்டோர் கலந்துகொண்டு மதுசனை கௌரவித்தனர்.-(13)

## ஆலயத்தின் முகப்பு பகுதி இடிந்து வீழ்ந்ததில் இளைஞர் ஒருவர் படுகாயம்



வடமராட்சி கிழக்கு புல்லாவெளி செபஸ்தியார் ஆலயத்தின் முகப்பு பகுதி இடிந்து வீழ்ந்ததில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்ததுடன் மோட்டார் சைக்கிளும் சேதமடைந்துள்ளது.

நேற்று அதிகாலை 5.30 மணியளவில் ஆலயத்தின் முகப்பு பகுதி இடிந்து விழுந்ததாக கூறப்படுகின்றது .

அச் சமயம் அங்கு உறங்கிக் கொண்டிருந்த கட்டைக்காட்டு முள்ளியானைச் சேர்ந்த எட்வேட் சைமன் வினோத் (வயது-20) என்னும் இளைஞர் படுகாயமடைந்தார்.

படுகாயமடைந்த இளைஞர் அம்புலன்ஸ் வண்டி மூலம் கிளிநொச்சி பொது வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். அங்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளும் சேதமடைந்துள்ளது. தேவாலய முகப்பு இடிந்து வீழ்ந்ததற்கான காரணம் தெரியவரவில்லை.(44)

## நகைச்சுவை எழுத்தாளர் சண் அங்கிள் காலமானார்

நகைச்சுவை எழுத்தாளராக அறியப்பட்ட பொன்னையா சண்முகநாதன்(சண் அங்கிள்) நேற்று முன்தினம் 82 ஆவது வயதில் காலமானார்.

12-02-1939இல் சங்குவேலியில் பிறந்த அவர் திருமணத்தின் பின்னர் கந்தரோடையில் வாழ்ந்து வந்தார். கலைச்செல்வி பண்ணைக்கூடாக எழுத்துலகுக்குள் பிரவேசித்த அவர் சிறுகதைகளையும், நகைச்சுவைப் புதினம் மற்றும் கட்டுரைகளையும் எழுதியுள்ளார். அவரது ஆக்கங்கள் வெள்ளரி வண்டி, இதோ ஒரு நாடகம், பெண்ணே நீ பெரியவள்தான், கொழும்புப்பெண், நினைக்க சிரிக்க சிந்திக்க, சிரிப்போம் சிந்திப்போம்,நகைச்சுவை இலக்கிய முன்னோடிகள் ஆகிய நூல்களாக வெளிவந்துள்ளன. வலி.தெற்கு பிரதேச செயலகத்தின் ஞான ஏந்தல் விருது, கலாபூசணம் விருது உட்பட பல விருதுகளைப் பெற்ற அவர் உதயன் பத்திரிகையில் எழுதிய பத்தி எழுத்துக்காக இலங்கை பத்திரிகை ஸ்தாபனத்தின் சிறந்த பத்தி எழுத்துக்கான ஊடகத்துறை விருதையும் 2004 ஆம் ஆண்டு பெற்றவராவார்.

தினபதி பத்திரிகையின் மானிப்பாய் நிருபராகப் பணியாற்றிய அவர் உதயன் பத்திரிகைக்கும் செய்திகளையும், கட்டுரைகளையும் எழுதியுள்ளார். இது தவிர இவரது சிறுகதைகள் நகைச்சுவை கட்டுரைகள் வீரகேசரி, தினகரன், சிந்தாமணி ,முரசொலி பத்திரிகைகளில் வெளிவந்துள்ளன. அவரது இறுதி நிகழ்வுகள் நேற்று முற்பகல் கந்தரோடையில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்றது. (44)

# ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட துப்பாக்கி ரவைகள் இதுவரை மீட்பு



கிளிநொச்சி -கோரக்கன் காட்டுப்பகுதியில் உள்ள தனியார் காணியொன்றில் இருந்து இதுவரை ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட துப்பாக்கி ரவைகள் மீட்கப்பட்டுள்ளதுடன் தொடர்ந்து மீட்பு பணிகள் நேற்றும் மேற்கொள்ளப்பட்டன.

கிளிநொச்சி கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கோரக்கன் கட்டு பகுதியில் உள்ள தனியார் காணி ஒன்றில் அடையாளம் காணப்பட்ட இடத்தில் வெடி பொருட்களை மீட்கும் பணி நேற்றைய தினம் கோரக்கன் கட்டு கிராம அலுவலர் கோணமலை சேகர் முன்னிலையில் விசேட அதிரடிப்படையினர் பொலிஸார் கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்ற கட்டளைக்கு அமைவாக அகழ்வுப் பணி மேற்கொள்ளப் பட்டது நேற்று காலை 9 மணி முதல் பிற்பகல் வரை முன்னெடுக்கப்பட்ட அகழ்வின்போது ஒரு லட்சத்து ஒன்பது ஆயிரத்துக்கும் மேற்பட்ட துப்பாக்கி ரவைகள் மீட்கப்பட்டுள்ளன நேற்று முன்தினம் மாலை நிறுத்தப்பட்ட பணிகள் தொடர்ந்து நேற்றும்; முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (55)

## எழுத்தாளர் கணேசலிங்கன் நினைவாக நாளை அஞ்சலிக் கூட்டம்

மூத்த முற்போக்கு எழுத்தாளரும், புகழ்பூத்த நாவலாசிரியரும், வெளியீட்டாளருமான செ.கணேசலிங்கன் நினைவாக அஞ்சலிக் கூட்டம் நாளை சனிக்கிழமை பிற்பகல்-04 மணி தொடக்கம் இல- 62, கே.கே.எஸ். வீதி, கொக்குவில் சந்தியில் உள்ள தேசிய கலை இலக்கியப் பேரவையின் கவிஞர் முருகையன் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் தாயகம் கலை இலக்கிய, சமூக, விஞ்ஞானச் சஞ்சிகையின் பிரதம ஆசிரியரும், தேசிய கலை இலக்கியப் பேரவையின் தலைவரும், மூத்த எழுத்தாளருமான க. தணிகாசலம் தலைமையில் இடம்பெறவுள்ள குறித்த அஞ்சலிக் கூட்டத்தில் பல்வேறு கலை, இலக்கிய, சமூக, அரசியல் செயற்பாட்டாளர்களும் கலந்துகொண்டு அஞ்சலி உரைகள் நிகழ்த்தவுள்ளனர்.

சுகாதார வழிகாட்டல்களுக்கு அமைவாக இடம்பெறவுள்ள இந்த நிகழ்வில் ஆர்வலர்கள் அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு தேசிய கலை இலக்கியப் பேரவையினர் அழைப்பு விடுத்துள்ளன. (18)

## பேராசிரியர் நாகேஸ்வரனின் பிரிவுச் செய்தியறிந்து மிகுந்த கவலையடைகின்றேன்

### -செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் இரங்கல்-

நயினாதீவு, நாகபூஷணி அம்மன் ஆலயப் பரம்பரை அறங்காவலரும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முதலாவது அணிப் பட்டதாரியும், சிறந்த சைவத்தமிழ் அறிஞருமான ஓய்வுநிலை சப்ரகமுவப் பல்கலைக்கழகப் பேராசிரியர். கனகசபாபதி நாகேஸ்வரனின் பிரிவுச் செய்தியறிந்து மிகுந்த கவலையடைகின்றேன் என அகில இலங்கை இந்துமாமன்ற உபதலைவரும், தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்காதேவி ஆலயத் தலைவரும், பிரபல ஆன்மீகச் சொற்பொழிவாளருமான செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் தெரிவித்துள்ளார்.

பேராசிரியர் கனகசபாபதி நாகேஸ்வரனின் மறைவையொட்டி அவர் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த இரங்கல் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

1980 ஆம் ஆண்டு முதல் சமயச் சொற்பொழிவு, இலக்கியச் சொற்பொழிவுகளில் பங்குபற்றிப் பலரதும் பாராட்டைப் பெற்ற பெருமகன். பல தமிழ் ஆய்வரங்குகளில் தனது கட்டுரைகளைப் படித்துப் பெருமை பெற்றவர்.

அகில இலங்கை கம்பன் கழகப் பேச்சாளராக நாடு முழுவதும் பல சமய, சமூக மேடைகளில் பங்குபற்றியவர். அகில இலங்கை இந்துமாமன்றம் மலையகம் முதல் பல பகுதிகளிலும் நடாத்திய கருத்தரங்குகளில் தவறாது பங்குபற்றிய வளவாளர்.

கணீரென்ற குரலில் திருமுறைகளைப் பாடி மக்களை ஈர்க்கும் ஆற்றலைப் பெற்ற பெருமகனை நாம் இழந்து விட்டோம். அன்னாரின் ஆத்மா சாந்திபெற அவரது குலதெய்வமாகிய நயினை நாகபூஷணி அம்பாளைப் பிரார்த்திக்கின்றேன் என்றுள்ளது.

# கருத்துப் பகிர்வு

தமிழ்த்தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் ஏற்பாட்டில் சிதைந்து போகிற தமிழ்த் தேசியமும் சிந்திக்காத தலைமைகளும் எனும் தலைப்பிலான கருத்துப் பகிர்வுறவாடல் நிகழ்வு நாளை காலை-09.30 மணி தொடக்கம் ஏ-9 பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கலைத் தூது மண்டபத்தில் நடைபெறும்.

அருட்தந்தை ஜெயபாலன் அடிகளார் கருத்துரையாளர்கள் வரிசையில் கலந்து கொண்டு முன்னிலை உரை ஆற்றவுள்ளார்.

அதனைத் தொடர்ந்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அரசறிவியல்துறைத் தலைவர் பேராசிரியர் கலாநிதி. கே.ரி.கணேசலிங்கம் பூகோள அரசியலுக்குள் சிக்கித் தவிர்க்கிறதா தமிழ்த் தேசியம்? எனும் தலைப்பிலும், அரசியல், சமூக ஆய்வாளர் ம.நிலாந்தன் வெளிவிவகாரக் கொள்கையும் கட்சி முரண்பாடும் எனும் தலைப்பிலும், மூத்த ஊடகவியலாளர் ந.வித்தியாதரன் இனப்பிரச்சினைத் தீர்வும் தமிழ்க் கட்சிகளின் வகிபாகமும் எனும் தலைப்பிலும், ஓய்வுநிலை மூத்த நிர்வாக அதிகாரியும், பொருளாதார, சமூக ஆய்வாளருமான ம.செல்வின் தமிழ்த்தேசியத்தின் இருப்பைக் கட்டமைப்பதற்கான தலைமைத்துவமும், செல்நெறியும் எனும் தலைப்பிலும் கருத்துரைகள் நிகழ்த்துவர்.

அரசியல் கட்சிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினரும், சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரன், பாராளுமன்ற உறுப்பினரும், புளொட் அமைப்பின் தலைவருமான தர்மலிங்கம் சித்தார்த்தன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும், தமிழ்த் தேசியக் கட்சியின் செயலாளர் நாயகமுமான எம்.கே.சிவாஜிலிங்கம், தமிழ்மக்கள் தேசியக் கூட்டணியின் ஊடகப் பேச்சாளரும், மூத்த அரசியல்வாதியுமான கந்தையா அருந்தவபாலன் ஆகியோரும் கருத்துரைகள் வழங்குவர். தமிழ்த்தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் தலைவர் வி.எஸ்.சிவகரன் மேற்படி கருத்துப் பகிர்வுறவாடல் நிகழ்வின் நெறியாளராக கலந்து கொள்வார். (18)

# கடற்றொழில் - நீர்வேளாண்மை அபிவிருத்தி தொடர்பில் அமைச்சர் டக்ளஸுடன் சீனத் தூதுவர் கலந்துரையாடல்

## கடற்றொழிலாளர்களுக்கு 20 மில்லியன் வாழ்வாதார உதவி-



வடக்கு மாகாணத்திற்கான விஜயத்தினை மேற்கொண்டுள்ள சீனத் தூதுவர் கீ சென் ஹொங், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை சந்தித்து, கடற்றொழில் மற்றும் நன்னீர் மீன்வளர்ப்பு, கடலட்டை வளர்ப்பு போன்ற நீர்வேளாண்மைச் செயற்பாடுகள் தொடர்பாக கலந்துரையாடுவதற்கு விருப்பம் தெரிவித்திருந்த நிலையில், குறித்த சந்திப்பு நேற்று யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது.

இலங்கை - சீன கூட்டு முயற்சியான குயிலான் நிறுவனத்தினால் யாழ்ப்பாணத்தில் செயற்பட்டு வருகின்ற கடலட்டை குஞ்சு இனப் பெருக்கப் பண்ணையில் குறித்த சந்திப்பு இடம்பெற்றது.

இதன்போது கருத்து தெரிவித்த கடற்றொழில் அமைச்சர், மக்களுக்கு வளமான எதிர்காலத்தினை பெற்றுத் தரக்கூடிய முதலீடுகளையும் தொழில்நுட்பங்களையும் வரவேற்று பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற அடிப்படையில் சீன முதலீட்டு முயற்சிகளை வரவேற்கிறேன்.

கடலட்டை பண்ணை முதலீட்டின் ஊடாக ஐந்து மடங்கு இலாபத்தினை பெற்றுக் கொள்ள முடியும் என்பது ஆய்வு ரீதியாக நிரூபிக்கப்பட்டுள்ள நிலையில், இந்த முதலீட்டின் மூலம் நாட்டிற்கு அந்நியச் செலாவணியை பெற்றுக் கொள்ள முடியும். என்றார்.

அதேவேளை, யாழ்ப்பாணம் மற்றும் மன்னார் மாவட்ட கடற்றொழிலாளர்களுக்கு சீனாவினால் சுமார் 20 மில்லியன் ரூபாய் பெறுமதியான வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

இலங்கைக்கான சீனத் தூதுவர் கீ சென் ஹொங், யாழ் மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனத்தின் ஊடாக யாழ் மாவட்ட கடற்றொழிலாளர்களுக்கு சுமார் 13.75 மில்லியன் ரூபாய் பெறுமதியான உணவுப் பொதிகளையும் 6 மில்லியன் ரூபாய் பெறுமதியான வலைகளையும் வழங்கி வைத்துள்ளார்.

கொரோனா பரவல் உட்பட பல்வேறு காரணங்களினால் வாழ்வாதார அச்சுறுத்தலை எதிர்கொண்டுள்ள வடக்கு கடற்றொழிலாளர்களுக்கு வாழ்வாதார உதவிகள் தேவைப்படுவதாக கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பல்வேறு தரப்புக்களிடமும் கோரிக்கை முன்வைத்த நிலையில், சீனாவினால் முதல் கட்டமாக குறித்த உதவிகள் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (27,40,75,)

-பண்டிகைக் காலத்தில் போக்குவரத்து-

# விதிமுறை மீறலை கண்காணிக்க நாடு முழுவதும் விசேட நடவடிக்கை

க.பிரசன்னா

எதிர்வரும் பண்டிகைக் கால பகுதிகளில் போக்குவரத்து விதிமுறைகளை மீறும் வாகன சாரதிகளை அடையாளம் காண்பதற்காக நாடு முழுவதும் விசேட நடவடிக்கையினை அமுல்படுத்துவதற்கு தீர்மானித்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

பண்டிகைக் காலங்களில் போக்குவரத்து விதிமுறைகளை மீறும் குறிப்பாக மது போதையில் வாகனத்தை செலுத்தும் நபர்களை கைது செய்வதற்காகவே இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. வாகன சாரதிகள் மிகவும் அவதானமாகவும் போக்குவரத்து விதிமுறைகளை கடுமையாக பின்பற்றியும் வாகனங்களை செலுத்த வேண்டும்.

பண்டிகை காலப்பகுதியில் பொலிஸாரினால் அமுல்படுத்தப்படவுள்ள விசேட நடவடிக்கையானது, இரவு மற்றும் பகல் வேளைகளிலும் முன்னெடுக்கப்படவுள்ளது. மது போதையில் வாகனத்தை வேகமாக செலுத்தும் விதிமுறைகளை மோசமாக மீறும் சாரதிகள் கைது செய்யப்படுவதுடன் அவர்கள் மீது சட்டம் கடுமையாக அமுல்படுத்தப்படுமெனவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் கிறிஸ்துமஸ் மற்றும் புத்தாண்டு பண்டிகை காலத்தை முன்னிட்டு மேல் மாகாணத்தில் விசேட பொலிஸ் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதன்படி, மேல் மாகாணத்தில் விசேட கடமைகளுக்காக ஏற்கனவே பெரும்பாலான பொலிஸ் அதிகாரிகள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

போக்குவரத்தை கட்டுப்படுத்தவும், சுகாதார வழிகாட்டல்களை அமுல்படுத்தவும், நகர்ப்புறங்களில் மோசடி செய்பவர்களின் செயல்பாடுகளை கட்டுப்படுத்தவும் இந்த அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

போக்குவரத்து விதிமுறைகளை மீறும் சாரதிகள் உன்னிப்பாக கண்காணிக்கப்படுவர் எனவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

-காஸ்வெடிப்புபிரச்சினைதொடர்பில்-

## காஸ் நிறுவன தலைவர்கள் மக்களுக்கு உடனடியாக பதில் வழங்க வேண்டும்

கொழும்பு- ஹொரன வீதியில் 9/2 இலக்க வெரஹர பாலம் நிர்மாணிப்பதற்கான அடிக்கல் நாட்டு விழா நேற்று நெடுஞ்சாலை அமைச்சரும் ஆளும தரப்பு பிரதம கொறடாவுமான ஜோன்ஸ்டன் பெர்ணான்டோ மற்றும் அமைச்சர் காமினி லொகுகே ஆகியோரின் தலைமையில் வெரஹரவில் நடைபெற்றது.

குறித்த நிகழ்வில் ஊடகவியலாளர்களுக்கு கருத்துத் தெரிவித்த அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்ணான்டோ இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

காஸ் பிரச்சினை தொடர்பில் காஸ் நிறுவன தலைவர்களும் அதிகாரிகளும் மக்களுக்கு உடனடியாக பதில் வழங்க வேண்டும். தலைவர்களை தொலைபேசியூடாக கூட தொடர்பு கொள்ள முடியாதிருப்பதாக ஊடகங்கள் வாயிலாக அறிந்தேன். மறைந்திருக்க வேண்டிய தேவை கிடையாது. அரசாங்கத்தை அபகீர்த்திக்குட்படுத்தாமல் மக்களுக்கு பதில் வழங்க வேண்டும். அத்தோடு இந்த காஸ் பிரச்சினைக்கு உடனடியாக தீர்வு வழங்க வேண்டும்.

ஒரு கம்பனி தலைவர் ஊழல் மோசடி பற்றி பேசுவதை கண்டேன். ஆனால் காஸ் பிரச்சினை வரும் போது தலைமறைவாகிறார். மறைந்திருப்பதற்காக ஜனாதிபதி அவருக்கு பதவி வழங்கவில்லை. பிரச்சினைகள் இல்லாத போது கருத்துக் கூறுவதை விடுத்து அரசாங்கத்தை அபகீர்த்திக்குள்ளாக்காமல் பிரச்சினைகளை மட்டுப்படுத்துவதற்கான தீர்வுகளை வழங்க வேண்டும் என்றார்.

## சபரிமலை செல்லும் யாத்திரிகர்களுக்கான; சுகாதார பாதுகாப்பு நடவடிக்கைகள்

- மலேரியா ஆபத்திலிருந்து தற்காப்பு-

இலங்கை 2016 ஆம் ஆண்டு முதல் மலேரியா அற்ற நாடாக உலக சுகாதார ஸ்தாபனத்தால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

அதாவது 2012 ஆம் ஆண்டு முதல் இலங்கையில் மலேரியாத்தொற்று பரவவில்லை எனினும் கடந்த ஆண்டுகளில் இந்தியா போன்ற வேறு நாடுகளில் இருந்துவரும் பயணிகளில் மலேரியாத்தொற்றுடன் பலர் இனம் காணப்பட்டுள்ளனர்.

இது மலேரியா அற்ற நாடாக எமது நாட்டை பேணுவதில் நாம் எதிர் நோக்கும் மிகப்பெரிய சவாலாகும் என வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

மலேரியா நோய் அதிகம் காணப்படுகின்ற நாடுகளுக்கு செல்பவர்கள் முற்காப்பாக தடுப்பு மருந்துகளை உரிய முறையில் உள்ளெடுப்பதன் மூலம் தமக்கு மலேரியா தொற்று ஏற்படுவதை தடுக்கலாம். எனவே சபரிமலை செல்ல இருக்கும் யாத்திரிகர்கள் மலேரியா நோயில் இருந்து தம்மை காத்துக் கொள்வதற்காக தமது பிரதேச பொதுச்சுகாதார பரிசோதகரை தொடர்பு கொள்வதன் மூலம், அருகில் உள்ள சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையிலோ அல்லது சுகாதார கிராமம், பண்ணையில் அமைந்துள்ள பிராந்திய மலேரியா தடை இயக்க பணிமனையிலோ தொ.பே. இலக்கம் 021-2227924 உடன் தொடர்பு கொண்டு தடுப்பு மருந்துகளை பெற்றுக்கொள்ள முடியும்.

யாத்திரை நிறைவுற்றதில் இருந்து ஒருவருடத்திற்குள் காய்ச்சல் ஏற்படின் உங்கள் அருகில் உள்ள வைத்திய சாலைக்கு சென்று தங்கள் யாத்திரை தொடர்பான விபரங்களை வைத்தியருக்கு வழங்குவதுடன் மலேரியா நோய்க்காக குருதியினை பரிசோதித்துக் கொள்ள வேண்டும்.

இலங்கையை மலேரியா அற்ற நாடாக தொடர்ந்தும் பேணுவதற்கு அனைவரும் ஒத்துழைப்போம்.

## வெளிநாடுகளுக்குச் சுற்றுலா செல்வதற்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் திட்டம்

வருட இறுதியில் 60 நாடாளுமன்ற உறுப்பினர்கள் வெளிநாடுகளிற்கு சுற்றுப்பயணம் மேற்கொள்ளவுள்ளனர் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

விடுமுறைகாலப்பகுதியில் வெளிநாடு செல்லவுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களில் அரசாங்க எதிர்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் அமெரிக்கா பிரிட்டன் அவுஸ்திரேலியா உட்பட பல நாடுகளிற்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் செல்லவுள்ளனர், குறிப்பாக வெளிநாடுகளில்

கல்விகற்கும் தங்கள் பிள்ளைகளை பார்க்க செல்லவுள்ளனர் என நாடாளுமன்ற வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

## கல்வி அமைச்சின் மருத்துவக் கலந்துரையாடல் நிகழ்வு

வடக்கு மாகாண கல்வி அமைச்சின் இளைஞர் விவகார அலகினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள ஞூம் செயலியூடான மருத்துவக் கருத்தமர்வுகள்

பிரதி சனிக்கிழமை தோறும் மாலை 7 மணி - 9 மணி வரை இடம் பெற்றுவருகின்றது. இக் கருத்தமர்வுகளில் பிரபல வைத்திய நிபுணர்கள் கலந்து சிறப்பித்துக் கொண்டிருக்கின்றார்கள்.

இவ் வாரம் 18 ஆம் திகதி தமிழர் வாழ்வியலில் தமிழ் மருத்துவம் எனும் தலைப்பில் ஆயுள்வேத மருத்துவர் சிவரூபன் அனுஷியா கருத்தமர்வில் கருத்துரைகளை வழங்கவுள்ளார்.

## மேலும் 395 பேர் குணமடைந்தனர்

கொரோனா தொற்றில் இருந்து மேலும் 395 பேர் பூரணமாக குணமடைந்து வீடு திரும்பியுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதற்கமைய, இதுவரை கொரோனா தொற்றில் இருந்து பூரணமாக குணமடைந்தவர்களின் எண்ணிக்கை 546,498 ஆக அதிகரித்துள்ளது.

## அமெரிக்க பிரஜை சந்தேகத்திற்கிடமான முறையில் பலி

தங்காலை - நகுலகமுவ பகுதியிலுள்ள சுற்றுலா விடுதியில் தங்கியிருந்த அமெரிக்க பிரஜை ஒருவர் சந்தேகத்திற்கிடமான முறையில் உயிரிழந்த சம்பவம் தொடர்பான விசாரணைகள் துரிதப்படுத்தப்பட்டிருக்கின்றது.

54 வயதுடைய குறித்த நபரின் சடலம் நேற்று தீக்காயங்களுடன் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அவருக்கு உணவு கொண்டு வரும் பெண்ணொருவரே குறித்த சடலத்தை கண்டுள்ளார். உயிரிழந்தவர் சில காலமாக

குறிப்பிட்ட மருந்தொன்றை பயன்படுத்தியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. உயிரிழந்தவரின் தாயாரே சடலத்தை அடையாளம் காட்டியுள்ளார்.


## அரச கால்நடை வைத்திய அலுவலகம், பருத்தித்துறை
Govt.Veterinary Office, Point-Pedro

**பருத்தித்துறை அரச கால்நடை வைத்திய அலுவலகம் தற்காலிகமாக இயங்குவதற்குரிய கட்டடம் வாடகைக்குப் பெறுதல்**

கட்டடம் பின்வரும் வசதிகளைக் கொண்டதாக அமைதல் வேண்டும்.

1. தற்போதைய அலுவலகத்திலிருந்து 1 கிலோமீற்றர் தூரத்திற்குள் பிரதான வீதிக்கு அருகில் இருத்தல் வேண்டும்.
2. அலுவலகம் நடாத்தக் கூடிய இடமாக இருத்தல் வேண்டும்.
3. அண்ணளவாக கட்டடம் 1600 சதுர அடி பரப்பளவைக் கொண்டதாக இருத்தல்.
4. கட்டடம் ஒரு வருட காலத்திற்கு வழங்கப்பட வேண்டும்.
5. குடிநீர், மின்சாரம் மற்றும் மலசலகூட வசதி இருத்தல் வேண்டும்.
6. பண்ணையாளர், வாகனம் இலகுவாக வரக்கூடிய பாதை இருத்தல் வேண்டும்.
7. விலைமதிப்பீட்டுத் திணைக்களத்தினால் மதிப்பிடப்படும் வாடகையே வழங்கப்படும்.
8. முற்பணம் வழங்கப்படமாட்டாது.

07 நாட்களுக்குள் (24.12.2021 இற்கு முன்னர்) அலுவலக நாட்களில் கால்நடை வைத்திய அதிகாரி, கால்நடை வைத்திய அலுவலகம், பருத்தித்துறையில் நேரடியாகத் தொடர்பு கொள்ளவும்.

Date:15.12.2021

கால்நடை வைத்திய அதிகாரி,
பருத்தித்துறை.
T.P : 0212263270
email: pointpedrovsoffice@gmail.com



## Faculty of Arts, University of Jaffna
## Request for Expression of Interest(EOI)

**Assignment Title: Visiting Lecturer in Postgraduate Diploma in Education Programme**

Expression of Interest is invited from the eminent scholars who fulfill the following requirements to undertake the position as Visiting Lecturer to teach in Postgraduate Diploma in Education Programme. The Faculty of Arts wishes to keep a record of a pool of Visiting Lecturers.

**Education Qualifications:** M.Phil in Education or above from the recognized University (approved by the UGC)

**Experience:** 05 years in teaching profession

Those who are interested shall send their expression of interest to the Dean, Faculty of Arts, University of Jaffna along with curriculum vitae(CV) and supporting documents related to educational qualifications and teaching experience by registered post on or before 22nd December 2021.

Candidates are expected to mention the field of specialization which can be taught by them in the Postgraduate Diploma in Education Programme, in the CV.

**Registrar,**
**University of Jaffna.**



## வலிகாமம் வடக்கு பிரதேசசபை-காங்கேசன்துறை கடைகள் வாடகைக்கு வழங்குவதற்கான கேள்வி அறிவித்தல் 2022

வலிகாமம் வடக்கு பிரதேச சபைக்கு சொந்தமான கீழ் குறிப்பிடப்படும் அட்டவணையில் விபரிக்கப்படும் கடையினை பின்வரும் நிபந்தனைகளுக்கு அமைய மாதாந்த வாடகைக்கு வழங்குவதற்கு கேள்விகள் கோரப்படுகின்றன.

**கேள்விப் பத்திரம் வழங்கப்படும் திகதி :-17.12.2021 தொடக்கம் 30.12.2021 பிற்பகல் 12.30 மணிவரை**
**கேள்விப்பத்திரம் ஏற்கப்படும் இறுதித்திகதி:- 30.12.2021 வியாழக்கிழமை பிற்பகல் 02.00 மணிவரை**
**கேள்விப் பத்திரம்திறந்து பரிசீலிக்கப்படும் திகதி:- 30.12.2021 வியாழக்கிழமை பிற்பகல் 03.00 மணி**

கேள்விகள் இரு பிரதிகளில் தயாரித்து அரக்கு முத்திரையிட்டு மூலப்பிரதியினை தவிசாளர், வலிகாமம் வடக்கு பிரதேசசபை, காங்கேசன்துறை எனும் முகவரிக்கு 30.12.2021 ஆம் திகதி பிற்பகல் 2.00 மணிக்கு முன்னதாக கிடைக்க கூடியதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும் அல்லது தலைமையலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பெட்டியில் இடப்படல் வேண்டும். மறு பிரதியினை ''பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவிஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம்'' எனும் முகவரிக்கு குறித்த திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்படல் வேண்டும்.

1. உள்ளூராட்சி மன்றங்களினால் தவறுநராகக் கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப் பத்திரங்கள் வழங்கப்படமாட்டாது. எனினும் தவறுதலாக வழங்கப்பட்டிருப்பின் அது நிராகரிக்கப்படுவதுடன் இது தொடர்பான வைப்புக்கள் ஏதும் மீளளிக்கப்படமாட்டாது.
2. ஆகக் குறைந்த கேள்வித் தொகையிலும் குறைந்த கேள்வி கோருபவர்களின் கேள்வி நிராகரிக்கப்படுவதுடன் கேள்வி வைப்புப் பணம் மீளளிக்கப்படமாட்டாது.
3. கேள்விகள் திறக்கப்படும் சமயத்தில் கேள்விதாரரோ அல்லது அவரது அனுமதியளிக்கப்பட்ட பிரதிநிதியோ சமுகமளிக்க முடியும்.
4. கேள்வி நிபந்தனைகள், அறிவுறுத்தல்களுக்கு அமையாத கேள்விகளை நிராகரிக்கவும் எந்தவொரு கேள்விதாரரை காரணம் காட்டாது ஏற்கவோ/நிராகரிக்கவோ கேள்விச்சபைக்கு அதிகாரம் உண்டு.
5. இவ் வியாபார நிலையங்களுக்கான மாதாந்த வாடகை விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தால் நிர்ணயிக்கப்படும் தொகைக்கேற்ப சித்திபெறும் கேள்விதாரரிடமிருந்து பிரதேசசபையால் அறவிடப்படும். அத்துடன் காலத்திற்கு காலம் விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தால் நிர்ணயிக்கப்படும் வாடகை செலுத்தப்பட வேண்டும்.
6. கடையை வாடகைக்கு எடுப்பவராலேயே கடை நடாத்தப்படவேண்டும். பிரதிநிதி எவரும் அவர் சார்பில் நடாத்த அனுமதிக்கப்படமாட்டார். எனினும் வாடகைக்கு பெற்றவரின் இயலாமை, இறப்பு போன்ற காரணங்களினால் அவரது வாழ்க்கைத்துணை அல்லது அவரது வாரிசு நடாத்த அனுமதிக்கப்படுவர்.
7. கடை கட்டடத்தில் புனரமைப்புவேலைகள், மாற்றங்கள், சேர்ப்புகள் எதுவும் சபையின் அனுமதியின்றி மேற்கொள்ள முடியாது.
8. சித்திபெறாத கேள்விதாரரின் கேள்வி வைப்புப்பணம் ஒப்பந்தம் பூர்த்தியான பின்னர் மீளளிக்கமுடியும்.
9. தெரிவு செய்யப்பட்ட கேள்விதாரர் சபையால் வழங்கப்பட்ட கால எல்லைக்குள் முழுத்தொகையையும் முழுமையாகச் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் செய்துகொள்ளவேண்டும். ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு இரு வாரத்திற்குள் பிரதேசசபையிடம் உரிய வியாபாரத்திற்கான வியாபார உரிமத்தினை பெற்று வியாபாரம்/தொழில் ஆரம்பிக்கப்படல் வேண்டும்.
10. சித்திபெற்ற கேள்விதாரரால் பிரதேசசபைக்கு செலுத்தப்பட்ட ஒருங்கிணைந்த கட்டுப்பணம் எச்சந்தர்ப்பத்திலும் மீளளிப்புச்செய்யப்படமாட்டாது.
11. பெற்றுக்கொள்ளும் கடைகளில் ஏற்படும் பாதிப்புகளுக்கு குத்தகைக்கு எடுத்தவரே பொறுப்புடையவராவார்.
12. சித்தி பெறும் கேள்விதாரர் பிரதேசசபையால் அங்கீகரிக்கப்படாத பொருள்களை விற்பனை செய்வதோ, மதுபானவகைகளோ, போதை வஸ்துக்களோ அல்லது தடைசெய்யப்பட்ட வேறு எந்தபொருள்களையோ விற்பனை செய்வது தடை செய்யப்படுவதுடன் ,கடைக்கட்டடம் வேறு எந்த சட்ட விரோத நடவடிக்கைகளுக்கும் பாவித்தல் கூடாது.
13. வாடகைப்பணம் ஒவ்வொரு மாதமும் 10ம் திகதிக்கு முன்னர் செலுத்த வேண்டும். தவறின் தண்டப்பணமும் சேர்த்து அறவிடப்படும் என்பதுடன் வாடகைப்பணம் மூன்று மாதங்கள் தொடர்ந்து செலுத்தத் தவறின் முன்னறிவித்தலின்றி வாடகை ஒப்பந்தம் தானாகவே இரத்துச் செய்யப்பட்டதாக கருதப்படும்.
14. கேள்வி சம்மந்தமாக மேலதிக விபரங்களை/தகவல்களை பிரதேசசபையின் தலைமைஅலுவலகத்தில் அலுவலகநேரத்தில் நேரடியாகவோ அல்லது 0212241130 தொலைபேசி இலக்கத்தின் ஊடாகவோ பெற்றுக்கொள்ளலாம்.

| விபரம் | பரப்பளவு (சதுர அடி) | ஆகக் குறைந்த கேள்வித் தொகை (ஒருங்கிணைந்த கட்டுப்பணம்) | கேள்விப்பத்திரக் கட்டணம் | கேள்விவைப்பு மீளளிக்கக்கூடியது |
|---|---|---|---|---|
| தெல்லிப்பளை - முதலாம்மாடி | | | | |
| கடை இல 2 | 907 | 2,640,000.00 | 2000.00 | 275,000.00 |

17.12.2021

திரு. சோமசுந்தரம் சுகிர்தன்
உள்ளூர் அதிகார பெறுகைச்சபை,
வலிகாமம் வடக்குபிரதேச சபை,
காங்கேசன்துறை.

-மக்கள் மயப்படுத்தப்பட்ட அரச நிறுவன-

# தேசிய மட்ட விளையாட்டு நிகழ்வு; வ.பி.போ.சபை அசத்தல் வெற்றி




மக்கள் மயப்படுத்தப்பட்ட அரச நிறுவனங்களுக்கிடையிலான 2020 இற்கான தேசிய மட்ட தடகள போட்டிகள் கொழும்பு சுகததாஸ விளையாட்டரங்கில் இடம்பெற்றது.

இப் போட்டியில் வட பிராந்திய போக்குவரத்து சபை சார்பாக ஐந்து வீரர்கள் வெற்றி பெற்றனர்.

வட பிராந்திய போக்குவரத்து சபை பணியாளர்களான ரி.ஜெயரூபன் உயரம்பாய்தல் போட்டியில் தங்கப்பதக்கத்தையும் முப்பாய்ச்சல் போட்டியில் வெள்ளிப்பதக்கத்தையும் கே.புவி வேகநடை போட்டியில் தங்கப்பதக்கத்தையும் ஆர்.சுதர்சன் 110 மீற்றர் தடைதாண்டல் போட்டியில் தங்கப்பதக்கத்தையும் 400 மீற்றர் தடைதாண்டல் போட்டியில் வெள்ளிபதக்கத்தையும் ரி.சுதாஸ்கர் தட்டெறிதல் போட்டியில் வெள்ளி பதக்கத்தையும் குண்டெறிதல் போட்டியில் வெள்ளிப் பதக்கத்தையும் கே.துனேஸ் உயரம்பாய்தல் போட்டியில் தங்கம் 400 மீற்றர் தடைதாண்டல் வெள்ளி பதக்கத்தையும் பெற்றனர். (30)

## புருண்டி நாட்டின் மெய்வல்லுநர் வீராங்கனை உலக சாதனை




புருண்டி நாட்டு மெய்வல்லுநர் வீராங்கனையான பிரான்சின் நியோன்ஷபா பெண்களுக்கான 2000 மீற்றர் ஓட்டப் போட்டிக்கான உலக சாதனையை படைத்தார். குரோஷியாவின் செக்ரெப் நகரில் நடைபெற்ற ஹென்சகோவிக் ஞாபகார்த்த மெய்வல்லுநர் போட்டியின் பெண்களுக்கான 2000 மீற்றர் ஓட்டப் போட்டியை 5 நிமிடங்கள் 21:56 செக்கன்கள் என்ற நேரப்பெறுதியில் ஓடி முடித்து உலகச் சாதனையை தன்வசப்படுத்தினார் நியோன்ஷபா. இதற்கு முன்னர் 2017 இல் எத்தியோப்பிய வீராங்கனையான ஜென்சேப்டிபாபா 5 நிமிடங்கள் 23:75 செக்கன்களில் ஓடி முடித்திருந்தமையே உலக சாதனையாக இருந்தது. தற்போது இந்த சாதனையை புருண்டி நாட்டின் பிரான்சின் நியோன்ஷபா முறியடித்தார்.

இவர், 2016 ரியோ ஒலிம்பிக் மற்றும் 2017 லண்டனில் நடைபெற்ற உலக சம்பியன்ஷிப் போட்டி ஆகியவற்றின் பெண்களுக்கான 800 மீற்றர் ஓட்டப் போட்டியில் வெள்ளிப் பதக்கம் வென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.




## மேற்கிந்திய வீரர்கள் 3 பேருக்கு கொரோனா



பாகிஸ்தான் சென்றுள்ள மேற்கிந்திய வீரர்கள் 3 பேர் கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ளதை அடுத்து இதுவரை 6 வீரர்கள் தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர்.

மேற்கிந்திய கிரிக்கெட் அணி பாகிஸ்தானில் சுற்றுப்பயணம் செய்து விளையாடி வருகிறது. இரு அணிகள் இடையேயான மூன்று 20 ஓவர் போட்டியில் பாகிஸ்தான் முதல் 2 ஆட்டத்தில் வெற்றிபெற்று தொடரை கைப்பற்றியது.

பாகிஸ்தான்- மேற்கிந்திய அணிகள் மோதும் 3 ஆவது மற்றும் கடைசி 20 ஓவர் போட்டி கராச்சியில் நேற்று நடந்தது.

இந்த நிலையில் மேற்கிந்திய வீரர்கள் 3 பேருக்கு கொரோனா பாதிப்பு ஏற்பட்டுள்ளது. விக்கெட் கீப்பர் ஷகிஹோப், இடது கை சுழற்பந்து வீரர் ஹோசின், ஆல் ரவுண்டர் ஜஸ்டின் கிரிவேஸ் ஆகிய 3 வீரர்களுக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இது தவிர அணியில் உள்ள 2 ஊழியர்களுக்கும் பாதிப்பு உள்ளது. மொத்தம் 5 பேர் நோய் தொற்றுக்கு உள்ளானார்கள்.

ஏற்கனவே ஹோட்ரல், ரோஸ்டன் சேஸ், கெய்ல் மேயர்ஸ் ஆகிய 3 வீரர்கள் கொரோனாவால் பாதிக்கப்பட்டு இருந்தனர். இதுவரை 6 வீரர்கள் கொரோனாவால் பாதிக்கப்பட்டு உள்ளனர்.

## ஆஷஸ் டெஸ்டில் கம்மின்ஸ் விளையாட அனுமதி மறுப்பு



கொரோனா வைரஸ் தொற்று பாதிப்பு உறுதியான நபருடன் தொடர்பில் இருந்ததால் அவுஸ்திரேலியா கிரிக்கெட் போர்டு அதிரடி முடிவு எடுத்துள்ளது.

அவுஸ்திரேலியா- இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான ஆஷஸ் கிரிக்கெட் தொடர் நடைபெற்று வருகிறது. பிரிஸ்பேனில் நடைபெற்ற முதல் டெஸ்டில் பேட் கம்மின்ஸ் தலைமையிலான அவுஸ்திரேலியா 9 விக்கெட் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

நேற்று அடிலெய்டில் 2 ஆவது டெஸ்ட் பகல்-இரவு போட்டியாக தொடங்கியது. இந்த போட்டிக்கான அவுஸ்திரேலியா அணியில் இருந்து வேகப்பந்து வீச்சாளர் ஹேசில்வுட் ஏற்கனவே காயம் காரணமாக விலகியுள்ளார். இந்த நிலையில் தற்போது கப்டன் பேட் கம்மின்ஸ் அடிலெய்டு டெஸ்டில் விளையாட அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. அவர் கொரோனா வைரஸ் தொற்று பாதிப்பு உறுதி செய்யப்பட்டவருடன் தொடர்பில் இருந்ததாக, ஆஸ்திரேலியா கிரிக்கெட் போர்டு இந்த முடிவை அதிரடியாக எடுத்துள்ளது. ஆனால், மெல்போர்னில் நடைபெற இருக்கும் பாக்சிங் டே டெஸ்டில் பங்கேற்பார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்பத்திரிகை ஏசியன் மீடியா பப்ளிக்கேஷன்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட்டால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 267 ஆம் இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 2021 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 17 ஆம் திகதி வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# சுகாதார அமைச்சின் ஊடாக விஷேட செயலணி

இரசாயன உரங்களினால், மனித உடலுக்கு ஏற்படும் பாதிப்புகள் குறித்து ஆய்வு செய்வதற்காக, விசேட செயலணியொன்றை அமைப்பதற்கு சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

இந்த வேலைத்திட்டத்தை அடுத்த வாரத்திற்குள் ஆரம்பிக்குமாறு, சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல, சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கு, பணிப்புரை விடுத்துள்ளதாக, சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

சுகாதார அமைச்சர், விவசாய அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே மற்றும் அமைச்சின் அதிகாரிகளுடன் சுகாதார அமைச்சில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே, இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

குறித்த செயலணிக்கு, சுகாதாரத் துறை உட்பட பல துறைகளைச் சேர்ந்த சுயேச்சையான குழுவொன்று நியமிக்கப்பட வேண்டுமெனவும், அதற்காக விரிவான ஆய்வு நடத்தப்பட வேண்டுமெனவும், சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

# இலங்கைக்கு வருகை தரும் பயணிகளுக்கு ஜனவரிமுதல் புதிய நடைமுறை அமுலில்

எதிர்வரும் ஜனவரி 1 ஆம் திகதிமுதல் இலங்கைக்கு வருகை தரும் அனைத்துப் பயணிகளும், தமது கைபேசியில் சுகாதார நிலையைக் குறிப்பிடும் QR குறியீட்டினை உள்ளிடுவது, அல்லது அதன் பிரதியை எடுத்து வருவதைக் கட்டாயமாக்குமாறு, சுகாதார அமைச்சு சுற்றுலா அமைச்சிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இதன்படி, விமான நிலையத்தில் பயணிகளின் நெரிசலைக் குறைக்கும் நோக்கில், இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக, சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம், மருத்துவர் அசேல குணவர்தன, கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் தெரிவித்துள்ளார்.

எனினும், ஒரு பயணியினால், அவ்வாறு செய்ய முடியாவிட்டால், குறிப்பிட்ட பயணி அந்தப் படிவத்தை பூர்த்தி செய்து பொதுச் சுகாதார பரிசோதகரிடம் சமர்ப்பித்து, விமான நிலையத்தை விட்டு வெளியேறலாமென, அவர் கூறினார். இது தொடர்பில், சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் தெரிவிக்கும் போது,

இலங்கைக்கு வருகை தரும் அனைத்து விமானப் பயணிகளுக்கும், இலங்கைக்கு வந்தவுடன் அவர்களின் உடல்நிலையைத் தெரிவிக்கும் படிவத்தினை, நாங்கள் வழங்கியுள்ளோம். எனினும், இந்த நடைமுறையினால், பொதுமக்கள் சிரமங்களை எதிர்நோக்குவதை அவதானிக்க முடிகின்றது.

எனவே, இலங்கைக்கு வருகை தரும் அனைத்துப் பயணிகளும் தம்மிடம் கைபேசி இருக்கும் பட்சத்தில், அல்லது இலங்கைக்கு வருவதற்கு முன்னர், அதன் அச்சுப்பொறியைக் கொண்டு வருமாறும், அல்லது QR குறியீட்டினைக் கொண்டு வருமாறும், சுகாதார அமைச்சு, சுற்றுலா அமைச்சிடம் கோரியுள்ளது.

# திருமண நிகழ்வு கட்டுப்பாடுகள்; புதிய வழிகாட்டல் நடைமுறையில்

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் புதிய சுகாதார வழிகாட்டல்கள் நேற்று வெளியிடப்பட்டுள்ளது.

அதற்கமைய, திருமண நிகழ்வுகளில் மண்டப கொள்ளளவில் 50 சதவீதமானோர் பங்கேற்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.அத்துடன்,திருமண நிகழ்வுகளில் மதுபானப் பாவனைக்கு விதிக்கப்பட்டிருந்த தடையும், தளர்த்தப்பட்டுள்ளது.

மேலும், மரண சடங்குகளில் ஒரு தடவையில் 30 பேர் பங்கேற்க முடியுமெனவும், அறிவிக்கப்பட்டுள்ளது.எதிர்வரும் 31 ஆம் திகதி வரையில், இந்தப் புதிய சுகாதார வழிகாட்டல் நடைமுறையில் இருக்குமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# இலங்கைக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையில் அதிகரிப்பு



கடந்த 12 நாட்களில் 24 ஆயிரத்து 773 சுற்றுலாப் பயணிகள், இலங்கைக்கு வருகை தந்துள்ளனர்.

சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க இந்த விடயத்தினைத் தெரிவித்துள்ளார். அத்துடன், கடந்த வருடம் டிசம்பர் மாதம் முதல், தற்போது வரையில், 1 இலட்சத்து 29 ஆயிரத்து 762 சுற்றுலாப் பயணிகள் நாட்டிற்கு வருகை தந்துள்ளனர். இந்தியா, ரஷ்யா, இங்கிலாந்து, ஜேர்மனி, அவுஸ்ரேலியா, கசகஸ்தான், அமெரிக்கா, பிரான்ஸ், கனடா மற்றும் மாலைதீவு ஆகிய நாடுகளிலிருந்தே, அதிகளவான சுற்றுலாப்பயணிகள், நாட்டிற்கு வருகை தந்துள்ளதாகவும், அவர் குறிப்பிட்டுள்ளார்.

## காதலியின் விபரீதமான செயற்பாடு;பயந்து ஓடிய காதலன்

கண்டியிலுள்ள பிரபல பெண்கள் பாடசாலையில் தரம் 11 இல் கல்வி கற்கும் மாணவி கடந்த 9 ஆம் திகதிமுதல் காணாமற் போயுள்ளதாக அவரது பெற்றோரினால், முறைப்பாடு செய்யப்பட்டதனையடுத்து, மாணவியின் காதலனெனும் சந்தேகத்தின் பேரில், 20 வயது இளைஞரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

தென்னகும்புர பிரதேசத்தைச் சேர்ந்த 15 வயது மாணவி, பேராதனைப் பாலத்திற்கருகில் மகாவலி ஆற்றில் குதித்ததாகவும், அச்சம் காரணமாக நடந்த சம்பவத்தை யாரிடமும் கூறாமல், தனது வீட்டிற்குச் சென்றதாகவும், கைது செய்யப்பட்ட இளைஞர் பொலிஸாரிடம் வாக்குமூலம் அளித்துள்ளார்.

அவர் அளித்த வாக்குமூலத்தைத் தொடர்ந்து, மகாவலி ஆற்றில் தேடுதல் முன்னெடுக்கப்பட்ட போதும், மாணவி தொடர்பில் எந்தவிதமான தகவலும் கிடைக்கவில்லை. கடந்த 9ம் திகதி மதியம் 2.30 மணியளவில், சிறுமியின் தந்தை மாணவியை காரில் அழைத்துச் சென்றுள்ளார். மேலும் குறித்த மாணவி பாடசாலை விட்டு வெளியே வருவது சிசிடிவி காட்சிகளில் பதிவாகியுள்ளது. குறித்த மாணவி பேராதனைப் பல்கலைக்கழகத்தை அண்மித்துள்ள பாலத்தில், காதலனைச் சந்திப்பதற்காக பாடசாலைக்கு வெளியே வந்ததாகவும், இதன்போது காதலனின் தொலைபேசியில், மற்றொரு பெண் அனுப்பிய சில குறுஞ்செய்திகளைப் பார்த்து, அவள் பாலத்திலிருந்து குதித்ததாகவும், குறித்த இளைஞன், பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார். இதையடுத்து, நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட இளைஞன் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதுடன், பேராதனை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தலைமையில் மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## சமூகநல வைத்தியர்களிற்கான 4 நாள் பயிற்சிப்பட்டறை



கிழக்கு மாகாண சுதேச மருத்துவத் திணைக்களம் மற்றும் பாரம்பரிய வைத்தியத்துறைக்கான தேசிய நிறுவனம் இணைந்து நடத்தும், தாய் சேய் போசனை நிகழ்ச்சித்திட்டம் தொடர்பில், கிழக்கு மாகாணத்திலுள்ள சமூகநல மருத்துவ உத்தியோகத்தர்களுக்கான 04 நாள் பயிற்சிப்பட்டறையின் இறுதி நாள் நிகழ்வு, திருகோணமலை சர்வோதய மண்டபத்தில் இடம்பெற்றது.

மாகாண ஆணையாளர் வைத்திய கலாநிதி திருமதி ஸ்ரீதரின் ஆலோசனைக்கும், அறிவுறுத்தல்களுக்கும் அமைவாக இடம்பெற்ற இந்தப்பயிற்சி பட்டறையின் ஆரம்ப நிகழ்வில், பாரம்பரிய வைத்தியத்துறைக்கான தேசிய நிறுவனத்தின் விரிவுரையாளர் வைத்தியர் வி.ஜெகதீஸ்வரன், கிழக்கு மாகாண சுதேச மருத்துவத் திணைக்கள திட்டமிடல் பிரிவின் சமூக நல மருத்துவ உத்தியோகத்தர் வைத்தியர் எஸ்.சிவச்செல்வன், வைத்தியர் எஸ்.சதீஸ் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இறுதிநாள் நிகழ்வின் வளவாளராக, மட்டக்களப்பு பிராந்திய ஆயுள்வேத இணைப்பாளரும் புதுக்குடியிருப்பு தள ஆயுள்வேத வைத்தியசாலையின், வைத்திய அத்தியட்சகருமான வைத்தியர் திருமதி ஜெயலட்சுமி பாஸ்கரன் கலந்துகொண்டு, விரிவுரையாற்றினார்.





லக்ஷ்மி நாராயணா திருமண சேவை
266, பலாலி வீதி, கந்தர்மடம்.
தொடர்புகளுக்கு: 0771971667/0773164796

மணமகன் விபரம்

பிறந்த திகதி :1993.01.21 மதம்: இந்து (V)
நட்சத்திரம் : பூராடம் (03) கி.பா. : 41 செவ் 2
தகைமை: B.Sc Civil Engineering தொழில்: Singapore Work
எதிர்பார்ப்பு: Canada PR உள்ள பட்டதாரி IT மணமகள்

பிறந்த திகதி : 1992.05.16 மதம்: இந்து (V)
நட்சத்திரம்: விசாகம் (04) கி.பா.: 31.5 செவ் 04
தகைமை: B.Tech (N.I.T) Nagpur
தொழில் : Software Development and Quantity Engineer
எதிர்பார்ப்பு: பட்டதாரி வெண்மையான மெல்லிய அழகிய பொருத்தமான படிப்புள்ள பெண்

பிறந்த திகதி:1992.12.13 மதம்: இந்து (V)
நட்சத்திரம்: பூரம் கி.பா.: 32 செவ் 6 இல்
தகைமை: G.C.E A/L தொழில் : சொந்த நிறுவனம்
எதிர்பார்ப்பு:G.C.E A/L படித்த பெண் சீதனம் எதிர்பார்க்கப்படமாட்டாது

பிறந்த திகதி: 1978.02.03 மதம்: இந்து Gurugulam
நட்சத்திரம்: கேட்டை (3) கி.பா. : 41 செவ் 2இல்
தகைமை: G.C.E A/L தொழில்: T.o நிர்வாக திணைக்களம்
எதிர்பார்ப்பு: படித்த மணமகள் யாழ்வேலை தேவை

பிறந்த திகதி: 1989.10.27 மதம்: இந்து (V)
நட்சத்திரம்: உத்தரம் (04) கி.பா.: 20 செவ் 1 ல்
தகைமை: G.C.E A/L தொழில்: Bank Officer
எதிர்பார்ப்பு: அரச சேவை தேவை யாழ்வேலை

பிறந்த திகதி:1980.12.19 மதம்: இந்து (V) சைவம்
நட்சத்திரம்: பரணி கி.பா.:6 செவ்/ சூரி 3 இல்
தகைமை: B.Sc Computer தொழில்: Computer Management
எதிர்பார்ப்பு: பட்டதாரி மணமகள் சைவம்

பிறந்த திகதி: 1985.01.01 மதம்: இந்து (K)
நட்சத்திரம்: அச்சுவினி கி.பா.: 55 செவ் 10 இல்
தகைமை: G.C.E A/L தொழில்: எலக்ரிசன் கொம்பனி
எதிர்பார்ப்பு : படித்த மணமகள் தேவை

பிறந்த திகதி:1985.05.01 மதம்: இந்து (V)
நட்சத்திரம்: உத்தரம் (4) கி.பா.: 41 செவ் 12 இல்
தகைமை: G.C.E A/L தொழில்: Office Assistent
எதிர்பார்ப்பு: அரசசேவை மணமகள்

மணமகள் விபரம்

பிறந்த திகதி:1990.05.20 மதம்: இந்து (V)
நட்சத்திரம்: உத்தரட்டாதி கி.பா.:35 செவ் 2 இல்
தகைமை: Higher Diploma
தொழில்: Company
எதிர்பார்ப்பு: அரசசேவை சைவம் மணமகன்

பிறந்த திகதி:1990.08.30 மதம்: இந்து (V)
நட்சத்திரம்: மூலம் (03) கி.பா.: 30 செவ் 1 இல்
தகைமை: B.Sc, M.Sc தொழில்: ஆராய்ச்சியாளர்
எதிர்பார்ப்பு: பட்டதாரி அரசசேவை மணமகன்

பிறந்த திகதி: 1991.04.14 மதம்: இந்து (V)
நட்சத்திரம்: ரேவதி கி.பா.: 17 செவ் 3 இல்
தகைமை: B.Sc தொழில்: D.O அரசசேவை
எதிர்பார்ப்பு : UK PR, Canada PR பட்டதாரி மணமகன்

பிறந்த திகதி: 1993.10.27 மதம்: இந்து (V)
நட்சத்திரம் : உத்தரட்டாதி கி.பா. :53 செவ்/ சூரி 07 இல்
தகைமை: B.Sc Cima தொழில்:Company
எதிர்பார்ப்பு : UK, Canada, Australiya பட்டதாரி மணமகன்

பிறந்த திகதி:1995.02.05 மதம்: இந்து (V)
நட்சத்திரம்: ரேவதி கி.பா. : 68 செவ் 7 இல்
தகைமை: Financial Eng தொழில்: Accountant
எதிர்பார்ப்பு: வெளிநாடு Pr மணமகன்

பிறந்த திகதி : 1979.05.26 மதம் : இந்து (பள்ளர்)
நட்சத்திரம் :ரோகிணி கி.பா. : 67 செவ் 9 இல்
தகைமை: B.A தொழில்: D.o அரச சேவை
எதிர்பார்ப்பு :அரச சேவை தனியார் மணமகன் தேவை

பிறந்த திகதி: 1987.07.04 மதம்: இந்து (பள்ளர்)
நட்சத்திரம்: சித்திரை (02) கி.பா.: 43 செவ் 7 இல்
தகைமை: கல்வியியல் கல்லூரி
தொழில்: ஆசிரியர்
எதிர்பார்ப்பு: அரசசேவை தனியார் கொம்பனி மணமகன்

பிறந்த திகதி: 1979.08.18 மதம்: இந்து (பள்ளர்)
நட்சத்திரம்: ரோகிணி கி.பா.:63 செவ் 6 இல்
தகைமை: G.C.E A/L தொழில்: தனியார்
எதிர்பார்ப்பு: தனியார் அரசசேவை மணமகன்

ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் யாழ்.தினக்குரல் பதிப்பிலும் மற்றும் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் கொழும்பு தினக்குரல் பதிப்பிலும் வெளிவரும் இம்மாங்கல்யாபகுதியில் மணமக்கள் விபரங்கள் பிரசுரிக்க விரும்பின் பின்வரும் தொலைபேசி இலக்கத்தினூடாகவோ அல்லது நேரடியாகவோ அலுவலகத்தில் மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.
தொ.இலக்கம்: 0779687613/0217388307


# INVITATION FOR BID (IFB)

**Provincial High Court**
**Northern Province Jaffna**
**Procurement of Cleaning and Sanitary Services – 2022**

1. **The Chairman, High Court Procurement Committee, Northern Province, Jaffna** now invites sealed bids from eligible and qualified bidders, **who have at least service station or branch in Jaffna District**, for the **service mentioned below in the schedule.**
2. Bidding will be conducted through National Competitive Bidding (NCB).
3. Interested bidders may obtain further information from the **Procurement Unit, Provincial High Court, Jaffna** (Financial Branch) and inspect the Bidding Documents at the same address on any working day from **9.00 a.m to 2.00 p.m from 17.12.2021**
   **Contact numbers are**
   **Phone : 0212222582/0212226388**
   **Facsimile : 0212222582/0212226388**
4. A complete set of Bidding Documents in English language could be purchased by interested bidders on submission of a written application to the **Procurement Unit, Provincial High Court, Jaffna from 17.12.2021 to 11.01.2022 from, 9.00 a.m to 3.00 p.m** upon the payment of a non- refundable fee as described in the schedule below.
5. Sealed bids shall be sent by registered post addressed to the **The Chairman, High Court Procurement Committee, Northern Province, Jaffna** or deposited in the Tender Box available at the Procurement Unit, High Court, Jaffna on or before **12.01.2022 2.00 p.m.** Late bids will be rejected. Bidders should write the **service description** and **bid No.** on the top left hand corner of the envelope. Bids will be opened at **2.00 p.m. on the same day** in the presence of the bidders or bidders' representatives who choose to attend. Original and duplicate should be submitted separately for each Court.
6. Bid shall be valid for a period of **77 days from** the last date **(12.01.2022)** fixed for receiving of Bids or any extended period & bid security should be valid for **105 days** from the bid opening.
7. Procurement Committee will keep the right to make final decision about accept or reject Bids and it will be the final decision regarding the bids.
8. The details of the bids are given overleaf:

| S.No | Bid ID. | Description of Service | Estimated Amount (Million) (Excluding VAT) | Required Bid Security | | Non Refundable Fee (Rs.) |
|---|---|---|---|---|---|---|
| | | | | Security Amount (Rs.) | Vaild Period Until | |
| 01 | HCJ/PROC/Serv.(Clean)/01/01/2021 | Cleaning Service for Courts Complex Jaffna | 3.4 | 25000/= | 27.04.2022 | 1500/= |
| 02 | HCJ/PROC/Serv.(Clean)/02/01/2021 | Cleaning Service for District and Magistrate's Courts Complex Mallakam | 2.9 | 25000/= | 27.04.2022 | 1500/= |
| 03 | HCJ/PROC/Serv.(Clean)/03/01/2021 | Cleaning Service for District and Magistrate's Courts Complex Point Pedro | 2.2 | 25000/= | 27.04.2022 | 1500/= |
| 04 | HCJ/PROC/Serv.(Clean)/04/01/2021 | Cleaning Service for District and Magistrate's Courts Complex Chavaka chchery | 2.4 | 25000/= | 27.04.2022 | 1500/= |
| 05 | HCJ/PROC/Serv.(Clean)/05/01/2021 | Cleaning Service for District and Magistrate's Courts Complex Kayts | 2.4 | 25000/= | 27.04.2022 | 1500/= |
| 06 | HCJ/PROC/Serv.(Clean)/06/01/2021 | Cleaning Service for Juvenile Magistrate's Court Jaffna | 1 | 25000/= | 27.04.2022 | 1500/= |

9. Pre bid meeting will be held at Provincial High Court Jaffna, on **04.01.2022 at 2.00 p.m.**

**The Chairman,**
**High Court Procurement Committee,**
**Provincial High Court,**
**Northern Province,**
**Jaffna.**

# சிறுவர் துஷ்பிரயோகங்கள் குறித்த ஊடக நெறிமுறை விரைவில்

## -ஊடகத்துறை அமைச்சர் தகவல்-

சிறுவர் துஷ்பிரயோகங்கள் தொடர்பாக அறிக்கையிடுவதற்கு ஊடக நெறிமுறையொன்றை விரைவில் ஏற்படுத்துவோம் என்று ஊடகத்துறை அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

சிறுவர்கள் தொடர்பாக அறிக்கையிடும்போது ஊடகங்கள் பின்பற்றவேண்டிய ஊடக நெறிமுறைகள் தொடர்பான கருத்தரங்கு அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் நடந்தது. இதில் பிரதம அதிதியாக கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.



இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்:-

சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான முறைப்பாடுகளை அறிவிப்பதற்கு 1929 என்ற துரித இலக்கம் தற்போது 24 மணி நேரமும் செயற்பட்டு வருகின்றது. அதனால் சிறுவர்கள் தொடர்பான முறைப்பாடுகளை அந்த இலக்கத்துக்கு அறிவிக்குமாறு பொது மக்களை கேட்டுக் கொள்கின்றோம்.

அதேபோன்று பெண்கள் தொடர்பான முறைப்பாடுகளை 1938 என் துரித இலக்கத்துக்கு 24 மணி நேரமும் முறையிடலாம். சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகள் பல்வேறு அடிப்படையில் அதிகரித்து வருவதை அறிந்துகொள்ள கிடைக்கின்றது. அதனை கட்டுப்படுத்த எமது சட்ட திட்டங்களை இறுக்கமாக்குவதுடன் சிறந்த ஒழுக்கமுள்ள சமூகம் ஒன்றை கட்டியெழுப்ப அனைவரும் இணைந்துசெயற்படவேண்டும். அதற்கு ஊடகங்களின் பங்களிப்பு மிக முக்கியமானதாகும்.

அத்துடன் எமது நாட்டில் கடந்த ஜனவரிமுதல் நவம்பர் மாதம்வரைக்கும் சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பாக 10 ஆயிரத்து 713 முறைப்பாடுகள் சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைக்கு கிடைக்கப்பெற்றிருக்கின்றன. அதில் ஆயிரத்து 632 முறைப்பாடுகள் 5 வயதுக்கு குறைந்தவர்கள் தொடர்பானது.

இந்த காலப்பகுதிக்குள் 6 முதல் 10 வயது வரையான சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பாக 2 ஆயிரத்து 625 முறைப்பாடுகள் பதிவாகி இருக்கின்றன. இதில் 40 வீதம் 5 வயதுக்கு குறைவான சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பாகவே முறைப்பாடுகள் பதிவாகி இருக்கின்றன.

இந்த கணக்கெடுப்பு சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளின் அடிப்படையிலாகும். இடம்பெறும் சிறுவர் துஷ்பிரயோகங்களில் ஏழில் ஒன்றே முறைப்பாடு செய்யப்படுகின்றது.

சிறுவர் துஷ்பிரயோகம் அதிகரிப்பதற்கு பிரதான காரணமாக இருப்பது, கல்விக் கட்டமைப்பு, சட்டக் கட்டமைப்பு மற்றும் ஊடக பிரசார கட்டமைப்பின் பலவீனமாகும். இவற்றை சரிசெய்வது எமது கடமையாகும்.

அதனால் சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பாக ஊடகங்களில் செய்தி அறிக்கையிடுவதற்கு முறையான ஊடக நெறிமுறை ஒன்று பின்பற்றப்படவேண்டும். அதற்காக ஊடக நெறிமுறையொன்றை விரைவில் ஏற்படுத்துவோம். அதற்கு அனைத்து ஊடக நிறுவனங்களும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றார்.

## -தொடரும் காஸ் சிக்கல்;-

# மண்ணெண்ணெய் - மின்சார அடுப்பின் விலைகள் உயர்வு





நாட்டில் விற்பனையாகும் மண்ணெண்ணெய் அடுப்பு மற்றும் மின்சார அடுப்பின் விலைகள் சந்தையில் சடுதியாக அதிகரித்துள்ளன.

சமையல் எரிவாயு விநியோகம் சீரான நிலைக்கு திரும்பாத நிலையில் தொடர்ந்து இடம்பெற்று வரும் எரிவாயு அடுப்பு வெடிப்பு சம்வங்கள் காரணமாக பொதுமக்கள் மாற்று நடவடிக்கையாக சந்தையில் மண்ணெண்ணெய் அடுப்பு மற்றும் மின்சார அடுப்பினை கொள்வனவு செய்தமையினால் இவ்வாறு அவைகளினது விலைகள் அதிகரித்துள்ளதாக நுகர்வோர் குற்றம் சுமத்தியுள்ளனர்.

2,000 ரூபாவாக விற்பனை செய்யப்பட்ட மண்ணெண்ணெய் அடுப்பு ஒன்றின் விலையானது தற்போது 8,000 ரூபாவாக அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அதேநேரம், புறக்கோட்டை மற்றும் புறநகர்பகுதிகளில் மண்ணெண்ணெய் அடுப்பு இல்லாமையினால் நுகர்வோரும், வர்த்தக நிலைய உரிமையாளர்களும் அசௌகரியங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

# எரிவாயுவை ஏற்றிய மற்றுமொரு கப்பல் கொழும்பை வந்தடைந்தது

எரிவாயுவை ஏற்றிய மற்றுமொரு கப்பல் கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்துள்ளதாக நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்துள்ளது.

இரண்டாயிரம் மெட்ரிக் தொன்னுக்கும் அதிக எரிவாயுவை ஏற்றியபடியே இந்த கப்பல் வந்தடைந்துள்ளது.

அந்த கப்பலில் கொண்டுவரப்பட்டுள்ள எரிவாயுவின் தரத்தை பரிசோதிப்பதற்காக மாதிரிகள் பெறப்பட்டு, அவற்றை பரிசோதிப்பதற்காக இரு நிறுவனங்களுக்கு அனுப்பியுள்ளதாக குறித்த சபையின் தலைவர், ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் சாந்த திசாநாயக்க குறிப்பிட்டார்.

இதனிடையே, மர்கெப்டன் இரசாயன பதார்த்தம் உரிய தரத்தில் காணப்படாமையால், மற்றமொரு கப்பலில் நாட்டிற்கு கொண்டுவரப்பட்ட எரிவாயுவை சந்தைக்கு விநியோகிக்காதிருப்பதற்கு நுகர்வோர் விவகார அதிகார சபை நேற்று முன்தினம் நடவடிக்கை எடுத்திருந்தது குறிப்பிடத்தக்கது.

## -ஜனவரியில் அமைச்சரவை மாற்றம்-

# ஜனாதிபதியின் முடிவுக்கு பிரதமரும் பச்சைக்கொடி



அடுத்த வருடம் ஜனவரி மாதத்தில் அமைச்சரவையில் சில மாற்றங்கள் இடம்பெறலாம் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

அரசிலுள்ள சில அமைச்சர்களின் செயற்பாடுகள் தொடர்பில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவிடம் பல தரப்பினரும் கடந்த காலங்களில் முறைப்பாடுகளை முன்வைத்தனர். ஆளுங்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலரும் இது தொடர்பில் ஜனாதிபதிக்குக் கடிதங்களை அனுப்பி இருந்தனர்.

இந்நிலையில், அமைச்சுகளின் நடவடிக்கைகள் எவ்வாறு உள்ளன, திட்டங்கள் உரிய வகையில் முன்னெடுக்கப்பட்டுள்ளனவா என்பது தொடர்பிலும் ஜனாதிபதி ஆராய்ந்துள்ளார். அந்தக் குழுவின் அறிக்கையை அடிப்படையாகக்கொண்டு அமைச்சரவையில் மறுசீரமைப்பு செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. அமைச்சரவை மாற்றத்துக்கு ஆரம்பத்தில் அதிருப்தியை வெளியிட்டிருந்த பிரதமர் மஹிந்த ராஜபக்சவும் தற்போது பச்சைக்கொடி காட்டியுள்ளார் எனவும் தகவல் வெளியாகியுள்ளது.

# நாட்டின் பொருளாதாரம் 1.5 சதவிகிதத்தால் வீழ்ச்சி

2021 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டிற்கான பொருளாதார வளர்ச்சி 1.5 சதவிகித எதிர்மறையான வளர்ச்சி விகிதத்தில் மதிப்பிடப்பட்டுள்ளதாக தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) 2020 மூன்றாம் காலாண்டில் 2,536,490 மில்லியன் ரூபாவிலிருந்து 2021 மூன்றாம் காலாண்டிற்கான நிலையான விலையில் 2,497,489 மில்லியன் ரூபாவாக குறைந்துள்ளது.

மேலும், நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியானது (GDP) 2020 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டில் தற்போதைய விலையில் 4,087,148 மில்லியன் ரூபாயுடன் ஒப்பிடுகையில், 2021 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டில் தற்போதைய விலையில் 4,132,955 மில்லியன் ரூபாவாக 1.1 வீதத்தால் வளர்ச்சியடைந்துள்ளது.

# சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்கள் பலருக்கு உடனடி இடமாற்றம்

உடன் அமுலுக்கு வரும் வகையில் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்கள் (SSP) பலருக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளதாக இலங்கை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சேவைத் தேவைகள் தொடர்பில் பொதுச் சேவை ஆணைக்குழுவின் அங்கீகாரத்துடன் இந்த இடமாற்றங்கள் வழங்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு விடுத்துள்ள ஊடக அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது.

அதன்படி நாட்டின் பொலிஸ் துறையின் கே-9 பிரிவு பணிப்பாளராக இருந்த சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் வெதமுல்ல, பதுளை பிரிவுக்கு பொறுப்பான சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகராக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ் மனித உரிமைப் பிரிவில் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகராகவிருந்த ஜே.ஏ.கே. ஜயசிங்க, பண்டாரவளை பிரிவுக்கு பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பதவிக்கு இடமாற்றப்பட்டுள்ளார்.

ஐ.டபிள்யூ.ஜி.ஆர். கந்தேவத்த பதுளை பிரிவுக்கு பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பதவியில் இருந்து இடமாற்றம் செய்யப்பட்டு களுத்துறை குற்றத்தடுப்பு பிரிவின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

# பிரியந்த குமாரவின் குடும்பத்திற்கான நிதியுதவியை கையளித்தார் பீரிஸ்



அண்மையில் பாகிஸ்தானின் சியால்கோட் பகுதியில் கலகக் கும்பலால் கொடூரமாகக் கொல்லப்பட்ட பிரியந்த குமாரவின் குடும்பத்திற்கான நிதியுதவியொன்றை வெளிநாட்டு அமைச்சில் நேற்று முன்தினம் நடந்த நிகழ்வில் வைத்து வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் கையளித்தார்.

பிரியந்த குமாரவின் மரணம் தொடர்பில் குடும்பத்தாருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்த அமைச்சர் பீரிஸ், இந்த தருணத்தில் இரு பிள்ளைகளினதும் எதிர்காலம் மற்றும் குடும்பத்தினரின் நிதிப் பாதுகாப்பே கரிசனைக்குரிய பிரதான விடயமாகும் எனத் தெரிவித்தார்.

இதனடிப்படையில், உயிரிழந்தவரின் குடும்பத்திற்கான உதவிகளைப் பெற்றுக்கொள்வது தொடர்பில் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்துடன் கலந்துரையாடி வருவதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

தொழில்தருனர் மற்றும் பாகிஸ்தான் அரசாங்கத்திடமிருந்து நிதிப் பலன்கள் உரிய நேரத்தில் கிடைப்பதை உறுதிசெய்யுமாறு பாகிஸ்தான் அரசாங்கத்திடம் கேட்டுக் கொண்டதாக அவர் மேலும் தெரிவித்தார். வழக்கை விசாரணை செய்வதற்காக பாகிஸ்தானில் உரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக கொழும்பிலுள்ள பாகிஸ்தான் பதில் உயர்ஸ்தானிகர் தெரிவித்ததாக அமைச்சர் பீரிஸ் குறிப்பிட்டார்.

பிரியந்த குமாரவின் குடும்பத்திற்கு 100,000 அமெரிக்க டொலர்களை வழங்குவதற்கு சியால்கோட் பிரதேச வர்த்தக சமூகம் இணக்கம் தெரிவித்துள்ளது. விசாரணையின் முன்னேற்றங்களை இலங்கை உன்னிப்பாக அவதானித்து வருவதாகவும், மரணத்திற்குக் காரணமானவர்கள் விரைவாக சட்டத்தின் மூலம் தண்டிக்கப்பட்டு, நீதி நிலைநாட்டப்படும் என நம்புவதாகவும் வெளிநாட்டு அமைச்சர் மேலும் குறிப்பிட்டார்.

வெளியுறவுச் செயலாளர் அட்மிரல் பேராசிரியர் ஜயநாத் கொலம்பகே மற்றும் வெளிவிவகார அமைச்சின் அதிகாரிகள் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

# கொழும்பில் 9 மணிநேர நீர்வெட்டு



பராமரிப்பு பணிகள் காரணமாக கொழும்பின் பல பகுதிகளில் நாளையும், நாளை மறுதினமும் ஒன்பது மணிநேர நீர்வெட்டு அமுல்படுத்தப்படவுள்ளது.

அதன்படி நாளை சனிக்கிழமை இரவு 11 மணிமுதல் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி முதல் இந்த நீர்வெட்டு அமுல்படுத்தப்படவுள்ளதாக தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை தெரிவித்துள்ளது.

கொழும்பு - 9, 10, 11, 12, 13 மற்றும் 14 ஆகிய பகுதிகளிலேயே நீர்வெட்டு அமுலில் இருக்கும் என்றும் மேலும் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஆசியாவின் ராணியை சொந்தமாக்குவதிலும் அமெரிக்கா - சீனா இடையே கடும் போட்டி



நாட்டில் கண்டறியப்பட்ட ஆசியாவின் ராணி (Queen of Asia) என பெயரிடப்பட்டுள்ள உலகின் மிகப்பெரிய நீலக்கல்லை (blue sapphire) கொள்வனவு செய்வதில் அமெரிக்காவிற்கும், சீனாவுக்கும் இடையில் கடும் போட்டி ஏற்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

குறித்த நீலக்கல்லை, இணையவழியில் இடம்பெறும், சர்வதேச ஏல விற்பனையில் முன்வைப்பதற்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

இதற்காக ஐக்கிய அரபு இராச்சியம் முன்னதாக விலைமனு கோரலுக்கான விண்ணப்பத்தை முன்வைத்துள்ள நிலையில், சீனாவும் இந்த போட்டியில் இணைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

வொஷிங்டன் நகரில் உள்ள நூதனசாலை ஒன்றில் காட்சிப்படுத்துவதற்காக அமெரிக்காவும் குறித்த ஏலத்தில் பங்கேற்கவுள்ளதாக குறிப்பிடப்படுகிறது.

310 கிலோகிராம் எடைகொண்ட ஆசியாவின் ராணியென அழைக்கப்படும் இந்த நீலக்கல், இரத்தினபுரி - பட்டுகெதர பகுதியில் கண்டுப்பிடிக்கப்பட்டுள்ளது.

தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகார சபைக்கு சொந்தமான ஆய்வகத்தில், இந்த நீலக்கல் தற்போது பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளது.

ஒற்றைப் படிகத்தினாலானமையினால் அதிக மதிப்புமிக்க இந்த நீலக்கல், 15 இலட்சத்துக்கும் அதிக கரட் பெறுமதியானது என அதன் உரிமையாளர் தெரிவித்துள்ளார்.

# குறிஞ்சாக்கேணி மிதப்பு பால விபத்து; சந்தேகநபர்கள் மூவருக்கு பிணை

திருகோணமலை - குறிஞ்சாக்கேணி மிதப்பு பாலம் கவிழ்ந்து விபத்துக்குள்ளான சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் 3 பேர் திருகோணமலை நீதிவான் நீதிமன்றினால் நேற்று பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் கைதான மிதப்பு பால உரிமையாளர் உட்பட 3 பேரே இவ்வாறு பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, இச்சம்பவம் தொடர்பில் கைதுசெய்யப்பட்ட மற்றுமொரு சந்தேகநபரான கிண்ணியா நகர சபைத் தவிசாளர் எஸ்.எச்.எம். நளீம் கடந்த 10 ஆம் திகதி திருகோணமலை நீதிமன்றினால் பிணையில் விடுவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# நள்ளிரவில் திடீரென உள்வாங்கிய கடல்

## -சுனாமியென பீதியடைந்த சென்னை மக்கள்-



சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் நள்ளிரவில் கடல் திடீரென உள்வாங்கியதால் மக்கள் பீதியடைந்துள்ளனர். சென்னையில் நேற்று முந்தினம் நள்ளிரவில் மெரினா, பட்டினப்பாக்கம் உள்ளிட்ட பகுதிகளில் திடீரென 10 -15 மீட்டருக்கு கடல் உள்வாங்கியது. சுமார் அரைமணி நேரத்திற்கும் மேலாக கடல் உள்வாங்கியது. இதனால் மணற்பரப்பு அதிகளவில் தென்பட்டது. நள்ளிரவில் கடற்கரைக்கு வந்திருந்த மக்கள் கடல் உள்வாங்கியதை பார்த்து அதிர்ச்சி அடைந்தனர். அதற்கு பின் சுமார் அரை மணிநேரத்திற்கு பிறகு கடல் மீண்டும் பழைய நிலைக்கு திரும்பியது. இதனால் அப்பகுதியில் இருந்த பொதுமக்கள் பெரும் பீதி அடைந்துள்ளனர். கடந்த 2 நாட்களுக்கு முன்னர் இந்தோனேஷியாவில் சக்தி வாய்ந்த நிலநடுக்கம் உணரப்பட்டது. இது ரிக்டர் அளவுகோலில் 7.6ஆக பதிவானதையடுத்து அங்கு சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டது. இதனால், இந்தியாவில் பாதிப்பு ஏற்பட்டுமோ என்ற ஐயம் ஏற்பட்ட நிலையில் எந்த ஒரு பாதிப்பும் இல்லை என இந்திய சுனாமி மையம் தகவல் தெரிவித்திருந்த நிலையில் கடல் திடீரென உள்வாங்கிய சம்பவம் சென்னை மக்களிடையே அச்சத்தையும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# காதலியின் கணவரிடம் இருந்து தப்பிக்க 5 மாடி கட்டிடத்தில் இருந்து குதித்த வாலிபர்



காதலியின் கணவர் திடீரென வீட்டிற்குள் நுழைந்ததால், பயத்தில் ஐந்து மாடி கட்டிடத்தில் இருந்து விழுந்த இளைஞர் உயிரிழந்தார்.

உத்தர பிரதேச மாநிலத்தைச் சேர்ந்தவர் மோஹ்சின் என்பவர் உத்தர காண்ட் மாநிலம் நைனிடால் பகுதியைச் சேர்ந்த பெண்ணை கூட்டிக் கொண்டு ராஜஸ்தான் மாநிலம் ஜெய்ப்பூருக்கு ஓடிவிட்டார். அந்த பெண்ணுக்கு ஏற்கனவே திருமணம் முடிந்து ஒரு குழந்தை உள்ளது.

ஜெய்ப்பூரில் ஒரு வீட்டில் அந்த பெண்ணை வாடகைக்கு அமர்த்திய மோஹ்சின், தனியாக ஒரு வீட்டில் வசித்து வந்துள்ளார். இருந்தாலும் அந்த பெண்ணுடன் தனது நட்பை வளர்த்துள்ளார். கடந்த சில நாட்களுக்கு முன் அந்த பெண்ணுடன் ஒரே வீட்டில் வசிக்க தொடங்கியுள்ளார் மோஹ்சின்.

இதற்கிடையே அந்த பெண்ணின் கணவர், இவர்களை தேடிவந்துள்ளார். ஒரு வழியாக சுமார் இரண்டு ஆண்டுகள் கழித்து ஜெய்ப்பூரில் இருக்கும் இடத்தை கண்டறிந்துள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை அந்த பெண்ணின் கணவர், அவர்கள் இருக்கும் இடத்தை கண்டுபிடித்து வீட்டிற்குள் சென்றுள்ளார். அப்போது மோஹ்சினுடன் பெண் இருந்துள்ளார். மோஹ்சின் அந்த பெண்ணின் கணவரை பார்த்ததும், பயத்தில் வீட்டின் ஐந்தாவது மாடியில் இருந்து குதித்துள்ளார்.

இதில் மோஹ்சின் படுகாயம் அடைந்த நிலையில்மருத்துவமனையில் சேர்க்கப் பட்டார். அங்கு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். இதற்கிடையே காதலி மற்றும் அவரது கண வர் ஆகியோர் தலைமறை வாகியுள்ளனர்.

# முப்படை தலைவராக எம்.எம். நரவானே நியமனம்



இராணுவ உலங்குவானூர்தி விபத்தில் முப்படைத் தளபதி பிபின் ராவத் உயிரிழந்த நிலையில், தற்போது அந்த பதவி நிலைக்கு நரவானே நியமிக்கப் பட்டுள்ளார்.

இந்தியாவின் முப்படைகளுக்கும் தலைமை தளபதியாக இருந்தவர் பிபின் ராவத். குன்னூரில் நடைபெற்ற இராணுவ உலங்குவானூர்தி விபத்தில் 14 பேர் உயிரிழந்தனர்.

இதில் இராணுவ தளபதி பிபின் ராவத்தும் ஒருவர். இதனால் முப்படைகளுக்கான தலைமை தளபதி பதவி வெற்றி இருந்தது. இந்த நிலையில் முப்படை தலைமை தளபதி தேர்வு செய்யப்படும் வரை எம்.எம். நரவானே குழு தலைவராக செயல்படுவார் என மத்திய அரசு அறிவித்துள்ளது.

# மைதானத்தில் எரியுண்ட நிலையில் 9 வயது மாணவி சடலமாக மீட்பு

தமிழ்நாட்டின் திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானல், பாச்சலூர் பகுதியில் 9 வயது மாணவியொருவர் எரியுண்ட நிலையில் சடலமாக மீட்கப் பட்டுள்ளார்.



மேற்படி பிரதேசத்தைச் சேர்ந்த சத்யராஜ் என்ற நபருக்கு 10 மற்றும் 9 வயதான மகள்களும், 6 வயதான மகனொருவர் உள்ளனர்.

அவர்கள் மூவரும் பாச்சலூரில் உள்ள அரச பாடசாலையொன்றில் கல்வியை தொடர்ந்துள்ளனர். சத்தியராஜின் இரண்டாவது மகளான 9 வயதான பிரித்திகா 5 ஆம் தரத்தில் கல்வி பயின்று வந்துள்ளார்.

இந்தநிலையில் நேற்று முன் தினம் காலையில் வழமை போல் 3 பேரும் பாடசாலைக்குச் சென்றுள்ளனர்.

பின்னர் காலை 11 மணியளவில் பிரித்திகா வகுப்பறையை விட்டு வெளியே சென்றுள்ளதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது. அதன்பின்னர் அவர் வகுப்பறைக்குத் திரும்பாததால் அவரை மாணவர்களும் ஆசிரியர்களும் தேடியுள்ளனர். அதன்போது, பாடசாலையின் விளையாட்டு மைதானத்தில் தீயில் எரியுண்டு கருகிய நிலையில் பிரித்திகா சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சம்பவ இடத்துக்கு விரைந்த மாணவியின் தந்தை சடலத்தை இனங்கண்டுள்ளார். இதனையடுத்து, சடலத்தைக் கைப்பற்றிய பொலிஸார் பிரேத பரிசோதனைக்கு அதனை அனுப்பி வைத்துள்ளனர். சிறுமியை எவரேனும் எரித்துக் கொலை செய்தனரா? அல்லது இது தற்செயலான விபத்தா என்ற கோணத்தில் பொலிஸார் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

# காயத்துடன் சுற்றும் புலி தேடும் பணியில் 'கும்கி'



கழுத்தில் காயத்துடன் சுற்றி வரும் புலியை பிடிக்கும் பணியில், கும்கி யானைகள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. தமிழக, கேரள எல்லையில், பந்தலூர் அருகே, கேரள மாநிலம், வயநாடு மாவட்டம், மானந்தவாடி அருகே உள்ள குருக்கன்மூலாவில் கடந்த 10 நாட்களுக்கும் மேலாக முகாமிட்டுள்ள புலி, 15 கால்நடைகளை வேட்டையாடி உள்ளது.

வனத் துறையினர், பொலிஸார் மற்றும் வருவாய்த் துறையினர் இணைந்து 5 இடங்களில் கூண்டு வைத்து,கண்காணிப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர். எனினும், புலி சிக்கவில்லை.

நேற்று முன்தினம் முதல் இரு கும்கி யானைகள் உதவியுடன், புலியின் நடமாட்டத்தை கண்காணிக்க துவங்கி உள்ளனர். வனத் துறையினர் வைத்திருந்த கண்காணிப்பு கேமராவில், கழுத்தில் பெரிய காயத்துடன் புலி நடந்து செல்வது பதிவாகி உள்ளது.

# சென்னை போர் நினைவிடத்தில் முதலமைச்சர் ஸ்டாலின் மரியாதை



பாகிஸ்தானுடனான போரில் இந்தியா வெற்றி பெற்றதன், 50ஆவது ஆண்டு தினத்தை ஒட்டி, சென்னை காமராஜர் சாலையில் அமைந்துள்ள போர் நினைவுச் சின்னத்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் மரியாதை செலுத்தினார்.

போரில் இந்தியா வெற்றி பெற்றதன் நினைவாக ஆண்டுதோறும் டிசம்பர் 16 ஆம் திகதி விஜய் திவாஸ் என்ற தலைப்பில் வெற்றிவிழா கொண்டாடப்படுகிறது. இந்த நிலையில், சென்னையிலுள்ள போர்நினைவுச் சின்னத்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் மரியாதை செலுத்தினார். முன்னதாக, முப்படைகளின் வீரர்கள் அணிவகுப்பு மரியாதை செய்து, மலர் வளையம் வைத்து மரியாதை செலுத்தினர்.

போரில் உயிர் தியாகம் செய்த இராணுவ வீரர்களின் குடும்பத்தினரும் மரியாதை செலுத்தினர்.

# தேசிய போர் நினைவுச் சின்னத்தில் வெற்றிச்சுடர் ஏற்றிய பிரதமர் மோடி



பாகிஸ்தான் உடனான போரில் வெற்றி பெற்றதை கொண்டாடும் வகையில், தேசிய போர் நினைவுச் சின்னத்தில் பிரதமர் மோடி வெற்றிச்சுடர் ஏற்றி வைத்தார்.

இந்தியாவுக்கும்- பாகிஸ்தானுக்கும் இடையில் 1971 ஆம் ஆண்டு போர் நடைபெற்றது. இதில் இந்தியா வெற்றி பெற்றது. இந்தியா வெற்றி பெற்று 50 ஆண்டுகள் ஆகிறது.

பாகிஸ்தானை போரில் வென்ற தினத்தை கொண்டாடும் வகையில் தேசிய போர் நினைவுச் சின்னத்தில் பிரதமர் மோடி வெற்றி சுடரை ஏற்றி வைத்தார். பின் வெற்றிச்சுடர் அணையாத விளக்குடன் இணைக்கப்பட்டது.

அத்துடன் தேசிய போர் நினைவிடத்தில் பிரதமர் மோடி மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார்.


சனிதா Shanida
புதன்கிழமை
சீட்டிழுப்பு திகதி: 2021.12.15
சீட்டிழுப்பு இல: 3755
வர்ணம்: ஊதா
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ.5,399,180/-
வெற்றி இலக்கங்கள் 19 33 40 59
ஆங்கில எழுத்து W
அபிவிருத்தி லொத்தர் சபை
www.dlb.lk
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அத கோடிபதி ADA KOTIPATHI
புதன்கிழமை
சீட்டிழுப்பு திகதி: 2021.12.15
சீட்டிழுப்பு இல: 1420
வர்ணம்: இளஞ்சிவப்பு
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ.4,127,540/-
வெற்றி இலக்கங்கள் 08 28 48 50
ஆங்கில எழுத்து Y
அபிவிருத்தி லொத்தர் சபை
www.dlb.lk
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சசிரி SASIRI
சீட்டிழுப்பு வாரம் 110
சீட்டிழுப்பு திகதி 2021.12.15
புதன்கிழமை
வெற்றி இலக்கங்கள் 32 43 44
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 1,564,660/-
இன்று இலட்சாதிபதியானோரின் எண்ணிக்கை 09
அபிவிருத்தி லொத்தர் சபை

ராசி அதிர்ஷ்டம்
திகதி : 2021-12-15
வெற்றி வாரம் : 3306
வர்ணம் : பச்சை
சுப்பர் ஜக்பொட் பரிசு வெல்லப்பட்டுள்ளது. ரூ. 3,761,510/-
வெற்றி இலக்கங்கள் 09 31 51 59
மேஷம்
அபிவிருத்தி லொத்தர் சபை
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 13,389,650/-

SUPER BALL சுப்பர் போல்
சீட்டிழுப்பு வாரம் 1594
நிறம் செம்மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி 2021.12.15
தினம் புதன்கிழமை
வெற்றி எழுத்தும் இலக்கங்களும் C 20 49 65 75
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 3,119,580/-
அபிவிருத்தி லொத்தர் சபை

ஜயோதா Jayoda
திகதி : 2021-12-15
வெற்றி வாரம் : 1794 / வர்ணம் : செம்மஞ்சள்
சுப்பர் ஜக்பொட் ரூ. 28,867,628/-
வெற்றி இலக்கங்கள் 02 24 52 61
ஆங்கில எழுத்து N
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 2,383,200/-
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 28,990,456/-
அபிவிருத்தி லொத்தர் சபை

# டெல்டாவைவிட 70 மடங்கு வேகமாகப் பரவும் ஒமைக்ரான்

### -ஆனால் பாதிப்பு குறைவு என்கிறது ஹொங்கொங் பல்கலைக்கழகம்-

கொரோனா டெல்டா வைரஸை விட உருமாறிய ஒமைக்ரான் 70 மடங்கு வேகமாகப் பரவக் கூடியது. ஆனால், நோய் பாதிப்பு குறைவே என்று ஹொங்கொங் பல்கலைக்கழக ஆய்வறிக்கை ஒன்று தெரிவிக்கின்றது.

ஒமைக்ரான் தொற்று ஏற்பட்ட 24 மணி நேரத்தில் அது நுரையீரலில் பரவி விடுகிறது என்றும் அந்த ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஹொங்கொங் பல்கலைக்கழகத்தின் மைக்கேல் சேன் சி வாய் தலைமையிலான ஆராய்ச்சியாளர்கள் இந்த ஆய்வை மேற்கொண்டனர். ஒமைக்ரான் வேகமாகப் பரவி நுரையீரலுக்குள் சென்றாலும் கூட அது நுரையீரல் திசுக்களில் பாதிப்பு ஏற்படுத்துவது என்பது டெல்டாவை விட 10 மடங்கு குறைவு எனக் கண்டறிந்துள்ளனர்.

ஆகையால் ஒரு தனிநபரிடம் இருந்து மற்றவருக்கு ஒமைக்ரான் பரவும் வேகம் மற்ற உருமாறிய வைரஸ்களைவிட 70 மடங்கு அதிகம் என்றாலும் கூட அது நோய் பாதிப்பு ஏற்படுத்தும் தீவிரம் ஒப்பீட்டு அளவில் மிகக் குறைவு எனத் தெரிவித்துள்ளனர்.

ஒமைக்ரான் வைரஸ் இப்போது 77 நாடுகளில் பரவி உள்ளது. தென் ஆப்பிரிக்காவில் முதல் தொற்று கண்டறியப்பட்ட மூன்று வாரங்களில் 77 நாடுகளுக்குப் பரவி இருப்பது அதன் பரவும் தீவிரத்தைக் காட்டுவதாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.



மேலும், அதிகம் பரவும் இந்த புதிய உருமாறிய வைரஸ் மற்ற திரிபுகளை ஒடுக்கி கரோனா பெருந்தொற்றை முடிவுக்குக் கொண்டுவரலாம் என்றும் அவர்கள் கணிக்கின்றனர். இனி கரோனா இன்ப்ளுவன்சா வைரஸ் போல், மக்கள் வாழக்கற்றுக் கொள்ளும் வகையில் ஒரு நோய்க் கிருமியாகும் என்றும் அவர்கள் கணிக்கின்றனர்.

## உலகில் கொரோனா பாதிப்பு 27.24 கோடியாக உயர்வு



உலக அளவில் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 27.24 கோடியாக அதிகரித்துள்ளது.

சீனாவின் வுகான் நகரில் 2019 ஆம் ஆண்டு கொரோனா வைரஸ் கண்டுபிடிக்கப்பட்டது. தற்போது கொரோனா வைரஸ் 221 நாடுகள் பிரதேசங்களுக்கு பரவி பெரும் பாதிப்பை ஏற்படுத்தி வருகிறது. கொரோனாவை கட்டுப்படுத்த தடுப்பூசி செலுத்தும் பணிகள் தீவிரமாக நடைபெற்று வரும் நிலையிலும் வைரஸ் பாதிப்பு அதிகரித்து வருகிறது.

இந்நிலையில், நேற்றைய நிலவரத்தின்படி உலகம் முழுவதும் கொரோனா வைரஸ் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 27 கோடியே 24 இலட்சத்து 69 ஆயிரத்து 550 ஆக அதிகரித்துள்ளது. வைரஸ் பாதிக்கப்பட்டவர்களில் 2 கோடியே 23 இலட்சத்து 48 ஆயிரத்து 644 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

கொரோனா பாதிப்பில் இருந்து இதுவரை 24 கோடியே 47 இலட்சத்து 75 ஆயிரத்து 515 பேர் குணமடைந்துள்ளனர். ஆனாலும், கொரோனா வைரசால் உலகம் முழுவதும் இதுவரை 53 இலட்சத்து 45 ஆயிரத்து 391 பேர் உயிரிழந்துள்ளனர்.

### தைவான் விவகாரம்

## சீனாவில் உள்ள தூதரகத்தை மூடியது லிதுவேனிய அரசு



சீன அரசு லிதுவேனியாவுக்கான தங்கள் நாட்டுத் தூதரை திரும்ப அழைத்ததுடன், அந்த நாட்டின் தூதரை வெளியேற்றியதால் இருநாட்டு உறவில் பின்னடைவு ஏற்பட்டது.

தைவானை தனது நாட்டின் ஒரு பகுதியாக அறிவித்த சீன அரசாங்கம், தைவானை அமைதி வழியில் இணைக்க தீவிர முயற்சி மேற்கொண்டுள்ளது. ஆனால், தைவான் அதனை ஏற்காமல், தாங்கள் இறையாண்மை கொண்ட அரசாங்கம் என உறுதிபட தெரிவித்து வருகிறது. எனவே, தைவானுடன் எந்த நாடாவது உறவு வைத்துக் கொண்டால் அந்த நாட்டுக்கு பல்வேறு விதங்களில் நெருக்கடி கொடுத்து வருகிறது சீனா.

இந்நிலையில், தைவானுக்கு மறைமுகமாக தனி நாடு அங்கீகாரம் அளிக்கும் வகையில், தைவானுக்கான பிரதிநிதித்துவ அலுவலகத்தை தங்கள் நாட்டில் திறக்க லிதுவேனியா அனுமதித்தது. இதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில், அந்த நாட்டுக்கான தூதரக அந்தஸ்தை சீனா குறைத்தது.

லிதுவேனியாவுக்கான தங்கள் நாட்டுத் தூதரை திரும்ப அழைத்ததுடன், அந்த நாட்டின் தூதரையும் சீனா வெளியேற்றியது. இதன் காரணமாக இருநாட்டு உறவில் பின்னடைவு ஏற்பட்டது.

இந்த விவகாரம் முற்றியதையடுத்து லிதுவேனியா அரசு, பீஜிங்கில் உள்ள தங்கள் நாட்டு தூதரக ஊழியர்களை படிப்படியாக வெளியேற்றியது. இன்று கடைசி அதிகாரியும் வெளியேற்றப்பட்டதையடுத்து, தூதரகம் மூடப்பட்டது.

இதுதொடர்பாக லிதுவேனிய வெளியுறவு அமைச்சகம் அறிக்கை வெளியிட்டுள்ளது. அதில், சீனாவில் தூதரக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். தூதரக செயல்பாடுகள் தொடர்பான தொழில்நுட்ப அம்சங்கள் குறித்து பேச்சுவார்த்தை நடந்து வருகிறது. இதேபோல், லிதுவேனியாவில் சீன தூதர்களின் அங்கீகாரத்தை புதுப்பிப்பது தொடர்பான சீனாவின் முடிவு நிலுவையில் உள்ளது.

சீனாவுடனான பேச்சுவார்த்தையைத் தொடரவும், பரஸ்பர நன்மை பயக்கும் உடன்பாடு எட்டப்பட்டவுடன் தூதரகத்தின் செயல்பாடுகளை முழுமையாக மீட்டெடுக்கவும் லிதுவேனியா தயாராக உள்ளது என கூறப்பட்டுள்ளது.

## ஆப்கானிஸ்தானை தனிமைப்படுத்தினால் உலக நாடுகளுக்கு பெரும் ஆபத்து

### -எச்சரிக்கும் பாக்.பிரதமர் இம்ரான் கான்-

ஆப்கானிஸ்தானில் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு உலக நாடுகள் உதவ முன் வர வேண்டும் என்று பாகிஸ்தான் பிரதமர் கோரியுள்ளார்.

ஆப்கானிஸ்தான் விவகாரம் குறித்து இஸ்லாமாபாத்தில் உயர்மட்டக்குழு ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான் தலைமை தாங்கி பேசிய போதே அவர் மேற்படி கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்:-

ஆப்கானிஸ்தானை தனிமைப்படுத்துவது உலக நாடுகளுக்கு பெரும் ஆபத்தாக முடியும்.ஆப்கானிஸ்தானில் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு உலக நாடுகள் உதவ முன் வர வேண்டும்.

மனிதாபிமான நெருக்கடியை தவிர்க்க ஆப்கானிஸ்தான் மக்களுக்கு எல்லா வழிகளிலும் பாகிஸ்தான் ஆதரவளிக்கும்.பாகிஸ்தானிலிருந்து ஆப்கானிஸ்தானுக்கு தேவைப்படும் உதவிகளை மேற்கொள்ள வரும் மனிதாபிமான உதவி அமைப்புகளுக்கு தேவையான வசதிகள் செய்து தரப்படும் என்றார்.

## சூரியனைத் தொட்டது நாசா அனுப்பிய பார்க்கர் விண்கலம்



அமெரிக்காவின் நாசா அனுப்பிய விண்கலம் முதன் முதலாக சூரியனைத் தொட்டு இருப்பதாக விஞ்ஞானிகள் அறிவித்துள்ளனர்.

பார்க்கர் சோலார் பிரோப் என்ற விண்கலம் கடந்த ஏப்ரல் மாதம் சூரியனை ஆய்வு செய்ய அனுப்பி வைக்கப்பட்டது. இதுவரை அறியப்படாத சூரியனின் கருவிழி வட்டம் என்று கருதப்படும் பகுதியில் அந்த விண்கலம் ஊடுருவி தொட்டுவிட்டது என்று விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். அறிவியல் துறைக்கு இது ஒரு முக்கியமான சாதனை என்று கருதப்படுகிறது.

## ஏதிலிகள் படகு கடலில் மூழ்கியதில் 11 பேர் பலி

### -மலேசியாவுக்கு அருகில் சம்பவம்-



இந்தோனேசிய குடியேற்றவாசிகளுடன் சட்டவிரோமாக மலேசியாவுக்குள் நுழைய முயன்ற படகொன்று மலேசிய கடற்பரப்பில் மூழ்கியதில் 11 பேர் உயிரிழந்தனர். அத்துடன், 25 பேர் கடலில் மூழ்கி காணாமல் போயுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் புதன்கிழமை மூழ்கிய இந்தப் படகில் 50 பேர் பயணம் செய்த நிலையில் 14 பேர் மட்டுமே இதுவரை உயிருடன் மீட்கப்பட்டுள்ளனர்.

அண்டை நாடான இந்தோனேசியாவில் இருந்து சட்டவிரோதமாக கடல் வழியாக வேலை தேடி மலேசியாவுக்குள் நுழையும் சம்பவங்கள் அடிக்கடி இடம் பெற்று வருகின்றன.

இவ்வாறு ஆட்களை ஏற்றிச் சென்றபோது மலேசியாவின் தெற்கு மாநிலமான ஜோகூர் என்ற பகுதிக்கருகே நேற்று முன்தினம் படகு கவிழ்ந்ததாக மலேசிய கடலோர காவல்படை தெரிவித்துள்ளது.

கப்பல் கவிழ்ந்ததை அடுத்து அந்தப் பகுதியில் ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த படையினர் விரைந்து சென்று 14 பேரை உயிருடன் மீட்டனர் என மலேசிய கடலோர காவல் படையின் தலைவர் அட்மிரல் முகமட் ஜூபில் மாட் சோம் தெரிவித்தார்.

அத்துடன், % ஆண்கள் மற்றும் 4 பெண்கள் உள்ளிட்ட 11 பேரின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். காணமல் போயுள்ளவர்களில் சிலர் நீந்தித் தப்பியிருக்கலாம் பலர் நீரில் மூழ்கி இறந்திருக்கலாம் என நம்பப்படுகிறது. அவர்களைத் தேடி மீட்கும் பணியில் படகுகள் மற்றும் விமானங்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

### உலகின் போற்றுதலுக்கு உரியோர் பட்டியல்:

## 3 ஆவது முறையாக ஒபாமாவின் மனைவி மிச்செல் முதலிடத்தில்



லண்டனில் செயல்படும் இணைய அடிப்படையிலான ஆய்வு நிறுவனம் வெளியிட்ட, 2021 ஆம் ஆண்டிற்கான உலகின் போற்றுதலுக்கு உரியோர் பட்டியலில், மூன்றாம் முறையாக அமெரிக்க முன்னாள் அதிபர் பராக் ஒபாமாவின் மனைவி மிச்செல் முதலிடத்தில் உள்ளார்.

ஐரோப்பிய நாடான பிரிட்டன் தலைநகர் லண்டனை தலைமையிடமாக கொண்டு செயல்படும் இணைய அடிப்படையிலான ஆய்வு நிறுவனம் யுகோவ். ஐரோப்பா மட்டுமின்றி வட அமெரிக்கா, மத்திய கிழக்கு நாடுகள் மற்றும் ஆசியாவிலும் இந்நிறுவனம் செயல்பாட்டில் உள்ளது.

இந்நிறுவனம் சார்பில், 2021 ஆம் ஆண்டிற்கான உலகின் மிகவும் போற்றுதலுக்குரிய ஆண்கள் மற்றும் பெண்கள் பட்டியல் நேற்று முன்தினம் வெளியானது. இதில் அமெரிக்க முன்னாள் அதிபர் பராக் ஒபாமா முதலிடத்தில் உள்ளார். 'மைக்ரோசாப்ட்' நிறுவன அதிபர் பில் கேட்ஸ், சீன அதிபர் ஷி ஜிங்பிங் ஆகியோர் அடுத்தடுத்த இடங்களை பிடித்துள்ளனர்.

இப்பட்டியலில் அமெரிக்க அதிபர் ஜோ பைடன், ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடின், பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான் உள்ளிட்டோரை பின்னுக்குத்தள்ளி பிரதமர் நரேந்திர மோடி 8ம் இடத்தைப் பிடித்துள்ளார்.

அதேபோல் பெருமைக்குரிய பெண்கள் பட்டியலில் மூன்றாம் முறையாக அமெரிக்க முன்னாள் அதிபர் பராக் ஒபாமாவின் மனைவி மிச்செல் முதலிடத்தில் உள்ளார். அமெரிக்க நடிகை ஏஞ்சலினா ஜூலி, பிரிட்டிஷ் மகாராணி இரண்டாம் எலிசபெத் ஆகியோர் அடுத்தடுத்த இடங்களில் உள்ளனர்.

### விமானம் தரையிறங்கியபோது விபத்து

## பிரபல இசையமைப்பாளரின் குடும்பம் உட்பட 9 பேர் பரிதாப மரணம்



விமானம் அவசரமாக தரையிறங்கிய போது ஏற்பட்ட விபத்தில் பிரபல இசையமைப்பாளர், மனைவி, குழந்தை உள்பட 9 பேர் உயிரிழந்தனர்.

லத்தின் அமெரிக்க நாடுகளில் ஒன்றான டொமினிகன் குடியரசு நாட்டில் நேற்று நடைபெற்ற விமான விபத்தில் பிரபல இசையமைப்பாளர், அவரது மனைவி மற்றும் குழந்தை உள்பட 9 பேர் உயிரிழந்தனர்.

தனது இசையமைப்பு மூலம் உலகம் முழுவதும் பிரபலமானவர் ஜோஷி ஏஞ்சல் ஹர்னடின்ஸ். பாலோ லா மூவி" என தனது ரசிகர்களால் அழைக்கப்படும் ஜோஷி உலகம் முழுவதும் பல லட்சக்கணக்கான ரசிகர்களை கொண்டுள்ளார். இவருக்கு டிபி வொன் மெரி ஜிமென்ஸ் ஹர்சியா என்ற மனைவியும் ஜேடன் என்ற மகனும் உள்ளனர்.

இந்நிலையில், சண்டோ டொமினிகோவில் உள்ள இசபெல்லா சர்வதேச விமான நிலையத்தில் இருந்து ஜோஷி தனது மனைவி, குழந்தை மற்றும் நண்பர்கள் என மொத்தம் 9 பேர் தனி சொகுசு விமானம் மூலம் அமெரிக்காவின் ப்ளோரிடா மாகாணத்தில் உள்ள ஓர்லெண்டோ நகருக்கு புறப்பட்டனர்.புறப்பட்ட சில நிமிடங்களில் விமானத்தில் திடீரென கோளாறு ஏற்பட்டுள்ளது. இதனால், விமானத்தை மீண்டும் இசபெல்லா விமான நிலையத்திலேயே அவசரமாக விமானி தரையிறக்கியுள்ளார்.

அவசர தரையிறக்கத்தின் போது விமானம் கட்டுப்பாட்டை இழந்து ஓடுதளத்தில் விழுந்து விபத்துக்குள்ளானது. இதில், விமானம் முழுவதும் தீப்பற்றி எரிந்தது. இந்த கோர விபத்தில் இசையமைப்பாளர் ஜோஷி, அவரது மனைவி ஹர்சியா, மகன் ஜேடன் உள்பட விமானத்தில் பயணித்த 9 பேரும் பரிதாபமாக உயிரிழந்தனர். இந்த சம்பவம் ஜோஷி ரசிகர்களிடையே பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

## ஒமைக்ரானுக்கு எதிராக தனியாக தடுப்பூசி கண்டுபிடிக்க தேவையில்லை

### கூறுகிறார் அமெரிக்க விஞ்ஞானி



தற்போது பயன்பாட்டில் உள்ள தடுப்பூசிகள் ஒமைக்ரானுக்கு எதிராக ஆற்றல் தரும் என்று வெள்ளை மாளிகையின் முதன்மை மருத்துவ ஆலோசகர் ஆண்டனி பவுசி தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் வெள்ளை மாளிகையில் நேற்று முன்தினம் நடந்த கொரோனா குறித்த விவாத நிகழ்ச்சியில் வெள்ளை மாளிகையின் முதன்மை மருத்துவ ஆலோசகர் ஆண்டனி பவுசி கலந்து கொண்டு பேசிய போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்:-

2 டோஸ் பைசர் தடுப்பூசிகள் ஒமைக்ரானுக்கு எதிராக முழுமையான பாதுகாப்பை தராவிட்டாலும், தீவிர நோய் பாதிப்பிலிருந்து பாதுகாப்பு தருகின்றன.

தென் ஆப்பிரிக்காவில், ஒமைக்ரானுக்கு முன்னர் கொரோனா பாதிப்பு ஏற்படாமல் 80 சதவீத பாதுகாப்பை அளித்த 2 டோஸ் தடுப்பூசிகளின் திறன் இப்போது 33 சதவீதமாக குறைந்துள்ளது

ஆனாலும், வைத்தியசாலைகளில் தங்கி சிகிச்சை பெற வேண்டிய கடுமையான பாதிப்பிலிருந்து 70 சதவீத பாதுகாப்பை 2 டோஸ் தடுப்பூசிகள் தருகின்றன என்று தெரிவித்தார்.

அமெரிக்காவின் நோய் கட்டுப்பாடு மற்றும் தடுப்பு மைய இயக்குநர் ரோச்செல் வாலன்ஸ்கி கூறுகையில்,

அமெரிக்காவில் 36 மாநிலங்களில் ஒமைக்ரான் பாதிப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது. உலக அளவில் 75க்கும் மேற்பட்ட நாடுகளில் ஒமைக்ரான் பாதிப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது.

அமெரிக்காவில் தற்போதைய கொரோனா பாதிப்பில், 3 சதவீதம் பேர் ஒமைக்ரான் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளவர்கள் ஆவர்.

நியூயோர்க் மற்றும் நியூஜெர்சி பகுதிகளில் இருக்கும் தற்போதைய கொரோனா பாதிப்பில் 13 சதவீதம் பேர் ஒமைக்ரான் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளவர்கள் ஆவர்.வரும் வாரங்களில் ஒமைக்ரானால் பாதிக்கப்படுவோர் எண்ணிக்கை இன்னும் அதிகரிக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது என்றார்.

இப்பத்திரிகை ஏசியன் மீடியா பப்ளிக்கேஷன்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட்டால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 267 ஆம் இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 2021 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 17 ஆம் திகதி வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.